இந்த இதழ்:

குஜராத்

சிறப்பிதழ்-II

"மாவட்டங்களைப் பிரிச்சு புதுசா பேர் வைக்கிற மாதிரி இந்தத் தெருவையும் இரண்டாப் பிரிச்சு, பாதி தெருவுக்குச் சப்பாணித் தெருன்னு எங்கப்பா பேரை வைக்கணும். அப்பத்தான் வோட்டு!"

தேர்தல் களத்தில்...

-விசேஷக் கட்டுரை

KALKI. 20-5-84 ரூ 1.50



கல்கி



சென்றோம் பார்த்தோம் சொல்கிறோம்

தேர்தல் களத்தில்... நமது நிருபர்கள்

மக்களிடையே எந்த விதப் பரபரப்பும் இல்லை. மந்திரிகளும் கட்சிப் பிரமுகர்களும் தான் தேர்தல் பரபரப்பைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். நிறையக் கிராமங்களில் தேர்தல் நடக்கப் போகிறது என்ற விவரமே மக்களுக்குத் தெரியவில்லை. விவரம் தெரிந்தவர்களோ ''இந்த இடைத் தேர்தல்கள் அநாவசியம். சட்ட சபையே இன்னும் எவ்வளவு மாதங்களென்பது கேள்விக் குறியாக இருக்கிறது'' என்கிறார்கள்.

தஞ்சையில் தங்கமுத்து வெல்வாரா?

தி.மு.க.வைப் பொறுத்த வரை தஞ்சைத் தொகுதி அதனுடைய கோட்டை. 1962 முதலே தி. மு. க. வசம் இருந்து வந்திருக்கிறது. தி. மு. க. சார்பில் பி. எஸ். தங்கமுத்து நிற்கிறார். இ. காங்கிரஸ் சார்பில் கே. ஐயாறு வாண்டையாரும் மற்றும் இரண்டே சுயேச்சைகளும் நிற்கிறார்கள் தி. மு. க. வேட்பாளரைப் பொறுத்தவரை நல்லவர் தான். எந்த விதமான அப்பழுக்கும் இல்லாதவர் என்று பெயர் வாங்கியவர்.

பஞ்சாயத்து யூனியன் தலைவராகப் பல ஆண்டுகள் பணியாற்றி எல்லாக் கட்சித் தொண்டர்களுக்கும் நன்கு அறிமுகமானவர். ''கிராமங்களில் வோட்டுக் கேட்கப் போகும்போது மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே ஓர் எழுச்சியைப் பார்க்கிறேன். நிச்சயம் தி. மு. க. வெல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது'' என்கிறார் தங்கமுத்து. தமது அரசியல் வாழ்வின் தொடக்கத்திலிருந்து கலைஞரின் பக்கம் இருந்து வருகிறவர் தங்கமுத்து.

இ. காங்கிரஸ் வேட்பாளர் அய்யாறு வாண்டையார் தேர்தலுக்கு நிற்பது இதுதான் முதல் முறை என்றாலும் தஞ்சை மாவட்டத்தில் கடந்த காலத்தில் வெற்றி பெற்ற காங்கிரஸ் வேட்பாளர்களுக்காக உழைத்திருக்கிறார். இவரை வேட்பாளராக அறிவித்த போது 'நிற்க மாட்டேன்' என்று சற்றுத் தயங்கினார். பின்னர் அவரது அரசியல் குருவான மூப்பனார் வற்புறுத்தியதும்தான் தேர்தலில் நின்றார். 'ஏன் தயங்கினீர்கள்?' என்றதற்கு வாண்டையார் ''நான் பல காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு வாக்குக் கேட்டிருக்கிறேன். இப்போது எனக்காக நான் வாக்குக் கேட்பதென்றால் சற்று சங்கடமாக இருக்கிறது'' என்றார்.

பாங்க ஆப் தஞ்சாவூரின் நிர்வாக இயக்குனராகவும் தெய்விகப் பேரவையின் தலைவராகவும் பணியாற்றும் வாண்டையார் மக்களிடையே நன்கு அறிமுகமானவர். இவரைத் தவிர வேறு யாரைக் காங்கிரஸ் சார்பில் போட்டிருந்தாலும தி. மு. க சுலபமாக வெற்றிக் கனியைத் தட்டிச்செல்லும் என்கிறார்கள் மக்கள்.

அ. தி. மு. க ஊழியர்கள் வாண்டையாருக்காகக் கடுமையாக உழைக்கிறார்கள். காங்கிரஸ் பிரசாரத்தைப் பார்க்கும்போது பணத்துக்கு ஒரு பிரச்னையும் இல்லையென்று தெரிகிறது. மேலும் வாண்டையாரால்



✖ தேர்தல் திருவிழா



✖ வெற்றுடம்பில் ஊசியால் பேட்ஜ் குத்திக்கொண்டு அ.தி.மு.க. தொண்டரின் நூதனப் பிரசாரம் (மூட நம்பிக்கைகள் ஒழிவது எப்போது?)



✖ தி.மு.க. வேட்பாளர் சோ.மா. ராமச்சந்திரன்



✖ தங்கமுத்து




✖ அய்யாறு வாண்டையார்

பயன் பெற்ற பலர் இந்தத் தேர்தலில் அவருக்காகச் செலவு செய்கிறார்கள். தி. மு. க. தொண்டர்களிடையில் உற்சாகம் இருக்தாலும் வசதி போதாது. 'எங்களை எளிதாகச் சந்திக்க முடியும்; காங்கிரஸ் வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தால் அவரைச் சந்திப்பது கூடக் கஷ்டம்; காரை விட்டுக் கீழே இறங்காதவர் என்று தி. மு. க. வினர் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் வாண்டையாரோ நடந்தே சென்று வாக்காளர்களைச் சந்தித்து வருகிறார்.

''இந்தத் தொகுதியில் காங்கிரஸ் தோற்றால் நாங்கள் பொறுப்பில்லை'' என்று சில நாட்களுக்கு முன் மந்திரி சோமசுந்தரம் ஒரு அறிக்கை விட்டது காங்கிரஸ்காரர்களை மிகவும் கோபப் படுத்தியுள்ளது. எம். ஜி. ஆர். தேர்தல் பிரசாரத்தில் சோமசுந்தரத்தின் பங்கைச் சற்றுக் குறைத்துக் கோவேந்தனைப் பாடுபடச் சொல்லியிருக்கிறார்.

அக்காவா — தம்பியா?

உப்பிலியாபுரம் தொகுதியை இந்த முறை எப்படியும் பறித்து விடுவது என்று அ. தி. மு. க. கங்கணம் கட்டிக் கொண்டு வேலை செய்து வருகிறது. இந்தத் தொகுதி மலை வாழ் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட தொகுதி. தி. மு. க. வேட்பாளராக இராம. தங்கராசுவும் அ. தி. மு. க. சார்பில் அவரது அக்காவான திருமதி சரோஜாவும் போட்டியிடுகிறார்கள். இந்த இருவருக்குமே தனிப்பட்ட முறையில் தொகுதியில் செல்வாக்குக் கிடையாது. தங்கராசு சிறிது நாட்கள் முன்பு வரை டெலிபோன் ஆபரேட்டராக வேலை செய்தவர். பிராமணப் பெண்ணைக் காதலித்துக் கரம் பிடித்தவர். 26 வயதான இந்த இளைஞரை உப்பிலியாபுரத்தின் உட் பகுதியான கொல்லிமலையின் அடிவாரத்தில் உள்ள பி. மேட்டூரில் சந்தித்தபோது மிகவும் நம்பிக்கையுடன் காணப்பட்டார். ''உங்கள் அம்மா யாருக்கு ஆதரவு தருகிறார்கள்?'' என்று கேட்டபோது ''எனக்காக என் தாயார் உழைக்கிறார்'' என்றார் தங்கராசு. இந்தத் தொகுதியில் உள்ள வலைப்பட்டி, கோட்டப்பாளையம், கட்டப்புளி; கருப்பம்பட்டி போன்ற கிராமங்களுக்குச் சென்றபோது தி. மு. க. தொண்டர்களின் உழைப்பு ஆர்வத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது. செம்மண்ணினால் உதய சூரியனை வீட்டிற்கு வீடு வரைந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அ. தி. மு. க. பொறுத்த வரை போஸ்டர்களே பெருமளவில் காணப்பட்டன. துறையூரில் அ. தி. மு. க. அலுவலகத்தில் ஒவ்வொரு கிராம அ. தி. மு. க. அமைப்பாளருக்கும் கையில் போஸ்டர்களைக் கொடுத்து கூடவே 100 ரூபாய் பணத்தையும் கொடுத்ததை நேரடியாகவே கண்டோம். மந்திரி குழந்தைவேலு தலைமையில் மந்திரிகள் பட்டாளம் ஒன்று தேர்தல் வேலையில் இறங்கியிருக்கிறது. அ. தி. மு. க. வேட்பாளர் சரோஜா முழுவதுமாக எம். ஜி. ஆரை நம்பியிருக்கிறார். 'அவர் வந்து



✖ தஞ்சையில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக



✖ அண்ணா நகரில்

பிரசாரம் செய்தால் எனக்கு நிச்சயம் வெற்றி வாய்ப்பு உண்டு'' என்கிறார் சரோஜா. அ.தி.மு.க. தேர்தலுக்குத் திடீரென்று அவரை நிறுத்தியது அவருக்கே அதிர்ச்சி!

இந்தத் தொகுதியில் பாதிக்கு மேல் பெண் ஓட்டர்கள் உள்ளது சரோஜாவுக்குக் கூடுதல் வசதி. ஒரு அ. தி. மு. க. தொண்டர், ''நான் வெற்றி பெற்றால் என்ன, என் தம்பி வெற்றி பெற்றால் என்ன?'' என்று எங்கள் வேட்பாளர் பேசுகிறார். இது எங்களை மிகவும் பாதிக்கும். தயவு செய்து நீங்கள் எக்கச்சக்கமாகக் கேள்வி கேட்டுவிடாதீர்கள். அவர்களுக்குச் சரியாகப் பதிலளிக்கத் தெரியாது'' என்று எங்களுக்கு முன் அறிவிப்புக் கொடுத்தார்!

தொகுதியில் உள்ள பல கிராமங்களுக்குச் சென்ற போது ''நாங்கள் தேர்தலைப் புறக்கணிக்கிறோம்'' என்ற அறிவிப்பைப் பார்க்க முடிந்தது. வெங்கடானூர் என்ற கிராமத்துக்குத் தினமும் ஒரு முறை வந்து செல்லும் பஸ் வசதியைச் சற்று பெருக்கியிருக்கிறார்கள். அங்குள்ள பெண்கள், ''இது தேர்தல் நடந்து முடிந்தவுடன் தொடருமா?'' என்று கேள்வி கேட்கிறார்கள். ரேஷன் கடைகளில் தட்டுப்பாடாக இருந்த பொருள்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. எரியாத விளக்குகள் எரிகின்றன. கூட்டுறவு வங்கி

✖ அண்ணா நகரில் முகாமிட்டு இருக்கும் மந்திரிகள்

கடன்களை வாரி விட்டுக் கொண்டிருக்கிறது. வேட்டி சேலைகள் கட்டுக் கட்டாகத் தொகுதியில் விநியோகம் செய்யப் படுகின்றன.

துறையூரில் உள்ள சுற்றுலா மாளிகையில் மந்திரி குழந்தைவேலு தங்கியிருந்த அறையை அடைத்துக் கொண்டு கையில் கோப்புகளுடன் அதிகாரிகளின் கூட்டம். என்னவென்று விசாரித்தால் ''ஓட்டுப் போட மாட்டோம் என்று சொல்லும் கிராமங்களில் உள்ள மக்களின் குறைகளை உடனடியாகத் தீர்த்து வைக்க மந்திரி உத்தரவிட்டிருக்கிறாராம். அந்த மாதிரியான கிராமங்களுக்கு இரவு பத்து மணிக்கு மேல் மந்திரி விஜயம் செய்து 'அனைத்து வசதிகளும் செய்து தருகிறோம்' என்று கூறி வாக்குகளைக் கேட்கிறாராம். இதற்காகத்தான் அதிகாரிகள் மந்திரியை ஆலவட்டம் போட்டுக்கொண்டு நிற்கிறார்கள்.

அன்பில் தர்மலிங்கம், டி. ராமச்சந்திரன் போன்றவர்கள் முகாமிட்டு, தி.மு.க.வுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆயினும் தேர்தலுக்கு 12 நாட்கள் முன்பிருந்த சூழ்நிலையைக் கவனித்துப் பார்த்தால் தம்பியை விட அக்கா சற்று முன்னணியில் இருக்கிறார் என்று கூறத்தான் வேண்டும்.

மாயவரத்தில் மண்ணைக் கவ்வப் போகிறவர்?

(மயிலாடுதுறை என்று பெயர் மாற்றம் செய்தாலும் தேர்தல் கமிஷனைப் பொறுத்த வரை இந்தத் தொகுதியின் பெயர் மாயவரம்தான்!)

அ. தி. மு. க. வேட்பாளர் பால வேலாயுதம் ஏற்கெனவே இந்தத் தொகுதியில் இரண்டு முறை

✖ ஆர். தங்கராசு



✖ அ. தி. மு. க. வேட்பாளர் பி. எஸ். ராதாகிருஷ்ணன்



✖ சத்தியசீலன்



✖ மாயவரம் அ.தி.மு.க வேட்பாளர் பாலவேலாயுதம் இரட்டைவிரல் காண்பிக்கிறார்





போட்டியிட்டு காலம் சென்ற கிட்டப்பாவிடம் தோற்றவர். மாயவரம் ஒன்றிய அ. தி. மு. க. செயலாளர். தொகுதியில் இவருக்கு நல்ல பெயர் இல்லை. ''ஒன்றியச் செயலாளராகவே இருந்து ஏகச் சக்கமாகச் சம்பாதித்தவர்; எம். எல். ஏ. ஆனால் என்னவாவது'' என்று கேட்கின்றனர், தொகுதி மக்கள். மணற்காடு என்ற கிராமத்தில் அ. தி. மு. க. வேட்பாளரைப்பின் தொடர்ந்தபோது, 'வாருங்கள் வாருங்கள்' என்று வரவேற்ற இளைஞர்களும், பெண்மணிகளும் வேட்பாளர் சற்றுத்தொலைவு சென்றவுடன் அவரைப் பற்றி அவதூறாகப் பேசுவதைக் கேட்க முடிந்தது. மாயவரம் நகரத்தைப் பொறுத்த மட்டில் காங்கிரஸ் கட்சிக்குச் சற்று செல்வாக்கு உண்டு. ஆனால் அ. தி. மு. க. வினர் சரியான அழைப்புத் தராததினால் காங்கிரஸ்காரர்கள் சற்று ஒதுங்கியே இருக்கிறார்கள்.

தி. மு. க. வேட்பாளர் சத்தியசீலன் தொகுதி மக்களிடையே அறிமுகமானவர். தி. மு. க. வின் ஒன்றியச் செயலாளர். மக்களிடையே இவரைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் இருக்கிறது. மேலும் ஏற்கனவே தி. மு. க. சார்பில் இரண்டு முறை கிட்டப்பா வென்ற தொகுதி இது. கிராமங்களில் தி. மு. க. தொண்டர்கள் மிகவும் உற்சாகமாக வேலை செய்கின்றனர். அ. தி. மு. க. வின் ஆர்ப்பாட்ட அரசியலைப் பார்த்து மக்கள் சலித்து விட்டார்கள். ஆமை வேகத்தில் நகரும் அரசாங்க காரியங்களை, ஆளும் கட்சியின் பல்வேறு ஊழல்கள் போன்றவற்றை மக்கள் நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெற்றி உதயசூரியனுக்கே'' என்கிறார் இந்தத் தொகுதியில் பொறுப்பாளராக உள்ள தி. மு. க. வைச் சேர்ந்த கோ. சி. மணி.

தொகுதியைச் சுற்றிப் பார்க்கும்போது தி. மு. க. வேட்பாளர் சத்தியசீலன் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது.

ஆவலைத் தூண்டும் அண்ணா நகர்

பிரதான இரண்டு கட்சிகளுமே 'ரிஸ்க்' எடுக்க விரும்பவில்லை என்பது வி. ஐ. பி. வேட்பாளர்களை நிறுத்தாமல் உள்ளூர் கட்சிப் பிரமுகர்களை நிறுத்தியதிலிருந்து வெட்ட வெளிச்சம். ஆனாலும் தொகுதியைத் தக்க வைத்துக்கொள்ள தி. மு. க. கஷ்டப்பட்டு வேலை செய்வதையும், தொகுதியைப் பிடிக்க அ. தி. மு. க ரொம்பக் கஷ்டப்பட்டு வேலை செய்வதையும் கண்கூடாகக் காண முடிந்தது.

தி. மு. க. வேட்பாளர் சோ. மா. ராமச்சந்திரன். (ஏனோ தெரியவில்லை 'மிசா' கொடுமைகளை அனுபவித்திருந்தும் 'மிசா' பட்டம் போட்டுக்கொள்ளவில்லை), கவர்களில் விளம்பரம் செய்

வது. தேர்தல் அலுவலகம் திறப்பது வேட்பாளர் அறிவிப்பு, வேட்பாளா அறிமுகம் என்று எல்லாவற்றிலும் தி. மு. க. முந்திக் கொண்டு விட்டது. கவரில் எழுதுவதுஎன்று பார்த்தால் அதிகம் செய்திருப்பது தி. மு. க. மருத்துவமனை அட்மிஷன் முறைகேடுகள், எம். ஜி. ஆர். கப்பலைச் சாடபிடுவது போல, அரிசி, எண்ணெய் போன்ற பொருட்கள் இறகு முளைத்துப் பறப்பது போல, திருச்செந்தூர், ஸ்ரீரங்கம் கோவில் அதிகாரிகள் தூக்கில் தொங்குவது போல என்றெல்லாம் சுவரைக் கேலிச் சித்திரங்கள்.

அ.தி.மு.க. வேட்பாளர் திரு. பி. எல். ராதா கிருஷ்ணன்

அ. தி. மு. க. தேர்தல் அலுவலகத்துக்குப் போன போது அமைச்சர்கள் முத்துசாமி, பொன்னையன் இருவரும் கட்சிக்காரர்களுடன் வெகு சீரியஸாய் ஆலோசனை செய்து கொண்டிருந்தார்கள். அண்ணாநகர்த் தொகுதியில் தேர்தல் வேலைகளைக் கவனிக்க அமைச்சர் ஹண்டே தலைமையில்பெரிய அ. தி. மு. க. படையே வேலை செய்கிறது.

ஹண்டே, பொன்னையன் ராகவானந்தம், முத்துசாமி ஜேப்பியார், திருப்பூர் மணிமாறன் என்று பெரிய லிஸ்டைச் சொல்லி அமைச்சர் பொன்னையனிடம் ''என் சார்! ஒரு தொகுதிக்கு இத்தனை பேர்களா? அதுவும் ஒரு இடைத் தேர்தலுக்கு?' என்று கேட்டபோது: 'இடைத் தேர்தலாய் இருந்தால் என்ன? பொதுத் தேர்தலாய் இருந்தால் என்ன? எங்கள் கட்சிக்காரர்கள் அத்தனை பேர்களுக்கும் தேர்தல் வேலைகளில் கட்சிக்காகப் பணியாற்ற விருப்பம். எனவே இப்படி ஒரு 'டீம்' போல அமைத்து உழைக்கிறோம். இத்தனை பேர் அவசியம் இல்லை தான். காரணம் அ.தி.மு.க.வுக்கு வெற்றி பெறுவது ஒன்றும் கடினமான காரியம் இல்லையே?'

இது பற்றித் தி. மு. க. வட்டாரத்தில் பேசியபோது தி. மு. க. தலைவர்களில் ஒருவரான டி. ஆர். பாலு சொன்னார்: ''ஒரு தொகுதிக்கு டஜன் கணக்கில் அமைச்சர்களும் எம்.எல். ஏ., எம். எல். சி.க்கள் என்று வரிந்து கட்டிக் கொண்டு வேலை செய்வதைப் பார்த்தாலே தெரியவில்லையா, அவர்களுக்கே எங்கேதோற்றுவிடுவோமோ என்ற பயம் இருக்கிறது என்பது? தேர்தலில் ஜெயிக்க என்னென்ன வழி உண்டோ (ஒரு மாதிரி வழிகளைத்தான் சொல்கிறேன்) அத்தனை வழிகளையும் செய்கிறார்கள். ஜனங்களுக்கு அடிப்படையாகவே ஒரு வெறுப்பு எம. ஜி. ஆர். அரசு மீது வந்து விட்டது. அதை எத்தனை அமைச்சர்கள் எத்தனை பணம் வந்துதான் மாற்றி விட முடியும்? வேட்டி, சட்டை கொடுத்து வோட்டு வாங்கப் பார்க்கிறார்கள். மக்களை இன்னும் எத்தனை

நாட்கள்தான் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்? தி. மு. க. கூட்டங்கள் நடக்கும் பகுதிகளில் மின் துண்டிப்பு நடக்கிறது. வேண்டுமென்றே இதைச் செய்கிறார்கள். கட்சித் தொண்டர்களைக் குண்டர்களை ஏவி அடிக்கிறதை இன்னும் தொடர்கிறார்கள்.''

இரு வேட்பாளர்களுமே வாக்காளர்களைச் சந்தித்துப் பேசுகிறார்கள். போகும் இடங்களில் கட்சிக்காரர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்கிறார்கள். ஜனங்களோ வெகு புத்திசாலிகள். இருவருக்குமே வாக்கு அளிப்பதாய் உறுதிமொழி சொல்லி அனுப்புகிறார்கள்.

''மற்றத் தொகுதிகள் போல இல்லையே அண்ணா நகர்! ஹை கிளாஸ் மக்கள் அதிகமாயிற்றே. அவர்கள் வோட்டுப் போடவே வர மாட்டார்களே!'' என்றேன் ஒரு பத்திரிகையாள நண்பரிடம். அவர் சொன்னார்: ''ரொம்ப நல்லதாய்ப் போய் விட்டது. கள்ள வோட்டுப் போடுவதில் இரண்டு கட்சிக்காரர்களுமே கில்லாடிகள்!''

'டாக்டர் ஹண்டேக்கு அண்ணாநகர்ப் பகுதியில் தனிப்பட்ட செல்வாக்கு உண்டே' என்று சொன்னால் 'தி. மு. க.வினர் 'எங்கள் டாக்டர் கலாநிதிக்குக் கூடத்தான் நல்ல செல்வாக்கு. அதுவுமின்றி ஹண்டேவின் செல்வாக்கு வோட்டாய் மாறும். அவரே நின்றிருந்தால். ஆனால் இப்போது?' என்கிறார்கள்.

இரு கட்சிக்காரர்களுமே வெற்றி தமக்குத்தான் என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் அண்ணாநகரில் உதயசூரியன் கொஞ்சம் பிரகாசம் என்று படுகிறது. ஆனாலும் எம். ஜி. ஆர். ஜெயலலிதா கடைசிச் சுற்றுப் பிரச்சாரத்தில் இது மங்கா இருக்குமா? சந்தேகம்தான்.

தேர்தல் அதிகாரி: 'பானை சின்னம்' வேண்டாம் என்கிறீர்கள்... ஏன்?

ஒரு வேட்பாளர்: பானையைப் பார்த்தால் மக்களுக்குச் சோறுஞாபகம் வரும். பிறகு அரிசி விற்கும் விலைஞாபகத்திற்கு வரும்... அதனால் எனக்கு ஓட்டு வராது.... அதான்!!

—ராஜேஸ்வரி.



சினிமா அரசியல்

இந்த இடைத் தேர்தலைப் பொறுத்த வரையில் தி. மு. க. வுக்கு இது மிகவும் சோதனையான கட்டம். மிகவும் பலம் வாய்ந்த மக்களிடையே சினிமாவால் புகழைப் பெற்ற சிவாஜி கணேசன், ஜெயலலிதா, வைஜயந்தி மாலா போன்றவர்கள் இந்தத் தொகுதிகளில் வலம் வரப் போகிறார்கள்.' அப்புறம் இருக்கவே இருக்கிறது எம். ஜி. ஆரின் செல்வாக்கு, அ.தி.மு.க.வின் பண — அதிகார பலம் இந்த இடைத் தேர்தல்களின் முடிவுகள் தி.மு.க.வை அதிர்ச்சியடைய வைத்தால் ஆச்சரியப் படவேண்டியதில்லை. அதிகார பலம், பண பலம், சினிமாக் கவர்ச்சி, மக்களின் வரிப் பணத்தைக் கொள்ளை செய்கிற காரியங்கள் கட்சியின் சாதனை போல் காட்டிக் கொள்கிறபோக்கு இவற்றால் பாதிக்கப்படாமல் கொள்கை அளவில் மக்கள் என்று வோட்டுப் போட முன்வருகிறார்களோ அன்றுதான் அவர்கள் உண்மையான அரசியல் உணர்வை அடைந்திருக்கிறார்கள் என்று அர்த்தம். இப்போதைக்கு இருக்கும் சூழ்நிலையில் அந்த மாதிரியான நிலை உருவாக இன்னும் பல்லாண்டுகள் நாம் காத்திருக்க வேண்டியதுதான்.

—ப்ரியன்—மௌலி

படங்கள்: சுபா




அறிமுகமாகிறது! மூவகைச் சிறப்புமிக்க பிரஷர் குக்கர்!

- அதி நவீனப் பாதுகாப்பு அமைப்பு
- உறுதிமிக்க கைப்பிடி
- மிகக்குறைந்த விலை

ஸ்பென்ஸர்ஸ் பிரஷர் குக்கர்


நவீன வடிவமைப்பு அம்சங்கள் கொண்ட சீரிய தரம் மிக்க பிரஷர் குக்கர்களை அளிக்கிறது ஸ்பென்ஸர்ஸ்.



'எமர்ஜென்ஸி பிரஷர் எக்ஸிட்'. முழுமையான பாதுகாப்புக்கான ஒப்பற்ற நவீன அமைப்பு. அளவுக்கு அதிகமான அழுத்தம் உருவானல் நீராவியைப் பாதுகாப்பாக வெளியேற்றுகிறது.


சேஃப்டி வால்வும், பிரஷர் வெயிட்டும் இயங்க முடியாமல் போகும் நிலைகளில் இவ்வால்வு பாதுகாப்பினை அளிக்கிறது.

துருப்பிடிக்காத பித்தளை ஸ்க்ருக்கள் பொருத்தப்பட்ட உறுதியான கைப்பிடி.



கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கு ஏற்றது. இதன் பலன் — கூடுதல் உழைப்பு.

பக்கவாட்டு வார்ப்படப் பகுதிகள் விசேஷ உலோகக் கலவையினுல் ஆனவை. இதன் பலனுக, வலு மேலும் அதிகரிக்கிறது.





இவை அனைத்தும், பிரபலமான ஏனைய தயாரிப்புக்களைவிட மிகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன.

- 6.0, 7.5, 9.5 லிட்டர் அளவுகளில் கிடைக்கும்.
- இலவசம்: மூன்று தட்டுகள், ஒரு அதிகப்படி சேஃப்டி வால்வு, ஸ்பானர் கிட்.

SAA/SC/1649

***ஸ்பென்ஸர்ஸ்* — உங்கள் பணத்துக்கு சிறந்த பொருள், எப்பொழுதும்.**





பால் மணம் மாறாத தொழிலகம்

'நான் எத்தனையோ உணவுப் பண்டங்களை ஆராய்ச்சி செய்திருக்கிறேன். ஆனால் நான் ஆராய்ச்சி செய்த பண்டங்களிலேயே பாலுக்கு நிகரான ஒரு சத்துப்பொருளைக் கண்டதே இல்லை!' என்று சொன்னவர் விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்.

இது தெரிந்துதான் ஆமதாபாதிலிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்தில் கெய்ரா மாவட்டத்திலுள்ள ஆனந்த் என்னுமிடத்தில் பாலை ஆதாரமாக வைத்துச் செய்யப்பட்ட பண்டங்களை எப்படி நாள்படப் பாதுகாப்பது, புதிதாகப் பாலை வைத்து என்ன தின்பண்டம் செய்யலாம் என்றெல்லாம் ஆராய்ச்சி செய்கிறார்கள். ஆராய்ச்சியில் எங்கள் பங்கும் இருக்கட்டுமே என்று, அவர்கள் அன்புடன் தந்த குலாப்ஜாமூன், ரசகுல்லா ஆகியவற்றை ருசி பார்த்து ''பேஷாயிருக்கிறது'' என்று சர்ட்டிபிகேட் வழங்கினோம்!

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன் திருபுவன் தாஸ் பட்டேல் என்ற பெரியவரின் சிறிய கூட்டுறவுப் பால் பண்ணையில் ஒரு யந்திரம் பழுதுபட்டது. பெரியவரது அழைப்புக்காக இங்கே வந்த இளைஞர் ஒரு மெக்கானிகல் இஞ்சினியர். யந்திரத்தைச் சரி செய்து விட்டு, 'போய் வருகிறேன்!' என்று கிளம்பி விட்டார். பெரியவர் கேட்டார்: ''தம்பி! இப்போது சரிபார்த்து விட்டாய். யந்திரமும் ஓடுகிறது. நீ இங்கிருந்து போனபின் யந்திரம் மறுபடி பழுதானால் யார் ரிப்பேர் செய்து தருவார்கள்? ஏன் நீ இங்கேயே இருக்கக் கூடாது?''

அந்த இருபத்தைந்து வயது இளைஞர் குரியன் சற்று யோசித்தார். ''சரி'' என்றார்.

கேரளத்தில் பிறந்து வளர்ந்து, கிட்டத்தட்ட நாற்பது வருடங்களுக்கு முன்பு, தனியார் பால் பண்ணை ஒன்றின் கொள்ளை லாபப் போக்கைக் கண்டித்து, ஆனந்திலுள்ள பால் வியாபாரிகள் துவங்கிய ஆனந்த் மில்க் யூனியன் லிமிடெட் என்கிற 'அமுல்' பால் பண்ணையில் சேர்ந்து, உழைத்து, நாடெங்கும் மட்டுமல்ல, உலகம் பூராவிலும், அதன் புகழ் பரவக் காரணமானவர் இந்தக் குரியன். குஜராத் என்றாலே குரியனையும் சேர்த்து நினைக்க வைத்தவர். இன்று குஜராத் பால் விற்பனைச் சங்கத்தின் நிர்வாக இயக்குநர்—தலைவர். 8,25,000 விவசாயிகளின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். இந்தியன் டெய்ரி கார்ப்பரேஷன், நேஷனல் டெய்ரி டெவலப்மெண்ட் போர்டு இவற்றின் கௌரவத் தலைவர்—

இப்படி குரியனைப் பற்றி

✖ பால்பவுடர் தயாரிப்புப் பகுதி



ஓர் அறிமுக உரை அளித்தார், பீகாரைச் சேர்ந்த திரு. சின்ஹா என்ற அதிகாரி.

திரு. எஸ். டி. பர்டே என்ற துணை இயக்குநர் மிக நவீனமான பால்பண்ணைக்கு எங்களை அழைத்துச் சென்றார்.


பால் மணம் மாறாத தொழிற்சாலை என்றால் இதுதான்! நாங்கள் போன போது பால் நிறைந்த 'கேன்'களை இறக்கிக்கொண்டிருந்தார்கள் லாரிகளிலிருந்து.

ஒவ்வொரு கிராம பால் கூட்டுறவுப் பண்ணையும் சேகரித்து அன்றாடம் இங்கே அனுப்பும் பாலுக்கு இங்கே 'உரிய மரியாதை' கிடைக்கிறது. பாலைப் பதப்படுத்தி குளிர்ப்பதனப்படுத்தி பாஸ்ட்யுரைஸ் செய்து, வெண்ணெய், சீஸ் கட்டி, நெய், பால் பவுடர், ஸ்ரீகண்ட் என்ற தின்பண்டம் என்று வகைவகையாகச் செய்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

வெயில் காலத்தில் பால் உற்பத்தி குறைவாகவும், குளிர்காலத்தில் அதிகமாகவும் இருக்கும். குளிர்காலத்தில் கூடுதலாகக் கிடைக்கும் பாலைச் சேமித்து வைக்கவும் பதப்படுத்தவும் நவீன வசதிகள் கொண்டது இந்தப் பண்ணை.

பளிரென்ற தொட்டிகளில் நுரை மெத்தைமாதிரி நிரம்பியிருக்கிறது வெண்ணெய். பிரம்மாண்டமான ராட்சதப் பாத்திரங்களில் எவர்சில்வர் குழாய்வழியே வந்து பால் கொட்டுவதும், பதப்படுத்தப்படுவதும், பால் பவுடர் டின்கள் கூரையை இடித்துக் கொண்டு, கூண்டுப்பாதை வழியாகச் சென்று விழுந்து மூடியை அடைத்துக்கொள்வதும் பார்க்க ரசமாயிருக்கின்றன.

ஆராய்ச்சிப் பணியில் ஒரு பிரிவு, புதிய பால் கூட்டுறவுப் பண்ணைகள் அமைப்புக்கான ஆலோசனைகள் தருதல், பால் வழங்க உபயோகிக்கப்படும் 'பாக்



✕ பால் வெண்ணெய்யாகிறது இங்கே

கிங்' காகிதம் பற்றிய ஆராய்ச்சிகள் செய்தல் என்று பயிற்சி பெற்ற விஞ்ஞானிகளின் கீழ் இயங்குகிறது.


இவர்களுக்குத் தனியாக மிக நவீனமான கம்ப்யூட்டர் செண்டர் இருக்கிறது. கால்நடைகளுக்கான தீனிகளின் ஃபார்முலாவிலிருந்து நூற்றுக்கணக்கான கூட்டுறவுச் சங்கங்களின் கணக்கு வழக்குகள் வரை இது கவனித்துக் கொள்ளுகிறது. அருகேயே ஜெர்ஸி மாடுகள் பண்ணை. மாடுகளின் கொம்புகள் முறிக்கப்பட்டிருந்தன. அவை ஒன்றையொன்று சில வேளை தாக்கிக்கொள்ள நேர்ந்தால், மடியைக் கிழித்து விடாமலிருக்க இந்த ஏற்பாடு என்றார் அதன் பொறுப்பாளர் மாத்தூ. பயிற்சி நிலையம், விருந்தினர் விடுதிகள், பச்சைப் பசும் புல் தரை என்று சூழ்நிலை நாம் இருப்பது ஆஸ்திரேலியாவா, அமெரிக்காவா என்று எண்ண வைக்கிறது.

1946—ல் சர்தார் வல்லபாய் பட்டேலின் ஆசியுடன் மொரார்ஜி தேசாய் தலைமையில் துவங்கப்பட்ட ஜெய்ரா மாவட்ட பால் உற்பத்தியாளர் சங்கம், இரண்டே சொசைடிகளும், நாளைக்கு 250 லிட்டர்பால் உற்பத்தியுமாக இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 900 கூட்டுறவுச் சங்கங்களும், மூன்றரை லட்ச அங்கத்தினர்களும் தினசரி ஐந்து லட்சம் லிட்டர் பாலுமாக வளர்ந்திருக்கிறது என்றால், அதற்குக் காரணம் டாக்டர் குரியன் தான்.

இப்படிப்பட்டவர் மீது குற்றச்சாட்டுகளை வீசி க்ளாட் ஆல்வாரிஸ் 'இல்லஸ்டிரேட்டட் வீக்லி'யில் சமீபத்தில் எழுதிய கட்டுரை, நாடெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதுபற்றி இங்கு பணியாற்றும் சட்வால் என்ற துடிப்பான இளைஞரைக் கேட்டபோது அவர் அளித்த பதில்:

''கட்டுப்பாட்டுக்கும், கடுமையான உழைப்புக்கும் மட்டுமே மதிப்புக் கொடுத்து வருபவர் டாக்டர் குரியன். அவர் இல்லையென்றால், பால் உற்பத்தியாளருக்கு நியாயமான விலையும் போனஸும் கிடைத்திருக்காது. பால் சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் வளர்ந்து, இது மாபெரும் ஸ்தாபனமாகியிருக்க முடியாது. டாக்டர் குரியன் இங்கேயே இருந்து, எங்களுடனேயே உழைத்து, இதை உருவாக்கி இருக்கிறார். குற்றச்சாட்டுக்கட்டுரையை திரு. க்ளாட் ஆல்வாரிஸ் இங்கே 'எட்டிக்கூடப் பார்க்காமல் எழுதியிருக்கிறார்!''


பூ ஜோர்ஜ் என்ற இந்தியர் பிராணவாயு
வசதியின்றியே எவரெஸ்ட் சிகரத்தை
வெற்றி கண்டுள்ளார்


நான் அதுங்களைப் புடிக்கப் பாக்கறேன்.. நழுவி ஓடுறாங்க!..
நாங்க அவரைப் புடிக்கப் பாக்கறோம்... நழுவி ஓடுறார்!


கொள்ளை.. கொலை.. சாராய ஊழல்.. பால் கமிஷன்.. எம்.பி.பி.எஸ் அட்மிஷன் ஊழல் கோயில் அதிகாரிகள் மர்மச் சாவுகள்
வாக்காளர்



கல்கி

1984 மே 20
மலர் : 42 இதழ் : 42
ரக்தாக்ஷி வைகாசி 7



விமானம் வேண்டாம்; விவேகம் போதும்!


சிரிப்பதா, அழுவதா — புரியவில்லை. முகமூடிக் கொள்ளையரின் அட்டகாசத்தைத் தடுக்க விமானங்கள் வாங்கப் போவதாக அறிவித்துள்ளார் முதல்வர் ''வெள்ளிக் கூஜா இரவல், வெட்டிப் பேச்சும் இரவல்; வைரத் தோடு வேணுமென்றால் வாங்க முடியுமா?'' என்று நமது கிராமப் பெண்கள் பேசிக்கொள்வதையே முதல்வரின் இந்த அறிக்கை நினைவூட்டுகிறது. மக்களின் வரிப் பணத்தை விரயம் செய்து விமானங்கள் வாங்கினாலும் கணிசமான பலன் கிடைக்குமா என்றால் அதுவும் சந்தேகமே. விமானத்திலேறித் திருடனைத் துரத்திச் சுட்டுத் தள்ளுவது போல் சினிமாப் படம் எடுக்கலாம். யதார்த்தரீதியில் இப்படி நடந்துகொள்ள முடியாது. மேல் நாடுகளில்கூட ஹெலிகாப்டர்களைத்தான் போலீஸார் அதிகமாகப் பயன்படுத்துவார்களே தவிர, விமானங்களை அல்ல. மேலும் மேல்நாட்டு நடைமுறைகள் எல்லாமே இங்கு பொருந்தி வராது. நமக்கு ஏற்றதை நாம் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

இங்கு போலீஸ் நிலையங்களில் அவசரத்துக்கு ஓரிடம் போக உருப்படியாக ஒரு சைக்கிள் கூடக் கிடையாது; விமானங்கள் வாங்குகிறேன் என்றால் என்னத்தைச் சொல்ல? ஒரு போலீஸ்நிலையத்துக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கித் தருவதாகவோ நாலு பேட்டைகளுக்கு ஒன்று வீதம் போலீஸ் கார்கள் ஸ்பாட் லைட்டுடனும் போலீஸ் சைரனுடன் இருக்கும் என்றோ சொன்னால்கூட முதல்வரைப்பாராட்டலாம். இன்று அவசரப் போலீஸ் உதவிக்கு ஃபோன் செய்தால் ஃபோனும் ஒத்துழைப்பதில்லை; போலீஸாரும் லேசில் வருவதில்லை. அவர்களிடம் இன்றுள்ள பெரிய பெரிய வேன்கள் இன்றைய சந்தடி மிக்க சாலைப் போக்குவரத்தில் துரிதப் பயணத்துக்கு ஏற்றவையல்ல.

திருட்டு, கொள்ளைகளைக் குறைப்பதில் வருமுன் காப்பு, வந்தபின் ஆய்வு என இரு அம்சங்கள். குறிப்பாகப் புறநகர்ப் பகுதிகளில் நல்ல சாலைகள், பிரகாசமான சாலை விளக்குகள், டெலிஃபோன் வசதி இவை செய்து தருவதுடன் டெலிஃபோன்கள் சரியாக இயங்குமாறு பார்த்துக் கொள்ளவும் வேண்டும். அது மத்திய அரசு விஷயம் என்று தட்டிக் கழிப்பதில் பொருளில்லை. ரிவால்வர்களுடன் இரண்டிரண்டு போலீஸ்காரர்கள் ''காவல்'' என்று பெரிதாக எழுதப்பட்ட பியட், மாருதி போன்ற சிறிய கார்களில் ரோந்து சுற்ற வேண்டும். மக்களுக்கு நம்பிக்கையும் தைரியமும் ஊட்டவும், சமூக விரோதிகளுக்கு அச்சமூட்டவும் இவை அவசியம்.

கொலையோ கொள்ளையோ நடந்தபின் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் நவீன விஞ்ஞான ஆற்றலும் துப்பறியும் திறனும் புத்திசாலித்தனமும் உள்ளவரை நியமித்து ஊக்குவிப்பதுடன் தட்டிக்கேட்கவும் வேண்டும். பல பயங்கர கொலை, கொள்ளை கேஸ்கள் விடுவிக்கப்படாத மர்மங்களாக நீடிப்பதே மக்களிடம் பீதியை வளர்த்து வருகிறது. வேறொன்றும் வேண்டாம், கல்கி 25—3—84 இதழில் வெளியாகியுள்ள சிறப்புப் பேட்டியைப் படித்து அதில் கூறப்பட்டுள்ள யோசனைகளை அமல் நடத்தினாலே நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும். இதையெல்லாம் செய்யாமல் விமானங்கள் வாங்குகிறேன் என்றால், ''கூழ்குடிக்க வழியில்லாதவன் கொப்புளிக்கப் பன்னீர் கேட்ட'' கதைதான்!

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்



எட்டாவது இடத்திலிருந்து

குஜராத்தின் பிரும்மாண்டமான தொழில் வளர்ச்சியை ஊர்வாரியாகப் பட்டியல் போட்டு, விவரமாக எழுத ரோல் ரோலாகக் காகிதம் வேண்டும். சுருக்கமாய்ச் சில:

மின் உற்பத்தி

1960—ல் மாநிலம் அமையும்பொழுது, கேவலம் 314 மெகாவாட் மின்சார உற்பத்தியிலிருந்து 84—85—ல் 4560 மெகாவாட்டுக்கு உயரவிருக்கிறது. இதற்காகப் பல திட்டங்கள் செயல் வடிவில் இயங்கிவருகின்றன. ''மற்ற மாநிலங்களைப் போல் குஜராத்துக்குப் புனல் மின் நிலையங்கள் அதிகம் இல்லை; அனல் மின் நிலையங்களே இருக்கின்றன!'' என்றார் மின்துறை இணைச் செயலர் மிஸ்.மஞ்சுளாசுப்ரமணியம்.

எண்ணெய் வளம், கேம்பே, அங்க்லேஷ்வர், பரோடா, என்று பல இடங்களில் குஜராத்தின் தொழில் வளத்தையும், பொருளாதாரத்தையும் பெருமளவுக்கு உயர்த்தியிருக்கிறது என்றால் மிகையில்லை. பரோடாவில் இந்தியன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் தொழிற்சாலையை அணுகும் வழியெங்கும் பெட்ரோலியம் ஆதாரமான பொருட்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

சிறு சேமிப்பும், மாபெரும் திட்டமும்:

சர்தார் சரோவர் நர்மதா நதித் திட்டம் 4000 கோடி ரூபாய் செலவில், நர்மதா நதியின் வளத்தைப் பயன்படுத்தி, குஜராத்துக்குமட்டுமல்லாது, அடுத்த மாநிலங்களும் கொழிக்கச் செயல்படப் போகிறது. இதற்கு உலக வங்கி பெருமளவில் உதவுகிறது. பாக்கி? குஜராத்தியரை நன்கு அறிந்த நிதியமைச்சர் சனத் மேத்தா, 'இம்மக்களின் சிறு சேமிப்புப்பணத்தைத்தான் நம்பியிருக்கிறேன்' என்கிறார். சென்ற முறை சிறு சேமிப்பில் இலக்கை விட இன்னொரு மடங்குக்கு மேல் எட்டிப் பிடித்ததாம் குஜராத். சர்தார் சரோவர் நர்மதா நதித் திட்டம் முடிவடைந்தால் உலகிலேயே இதுதான் மாபெரும் நதித் திட்டமாயிருக்குமாம்.

வேலைக்கு ஏற்ற கல்வி:


துணி தயாரிக்கும் மில்கள் பெருமளவில் இருந்தாலும், பிற தொழில்களும் சிறந்து விளங்க, பெட்ரோ கெமிகல்தொழிற்சாலைகள், எலக்ட்ரானிக்ஸ், இஞ்ஜினியரிங் தொழிற்சாலைகள் குஜராத்தில் பெருகி வருகின்றன. ஒருவரிடத்தில் கைகட்டிச் சேவகம் செய்வதை விட, சுயமாகத் தொழில்செய்து முன்னேறும் மனோபாவம், குஜராத்தியரிடையே குறிப்பிடத்தக்கது. இதற்கேற்ற கல்வித் திட்டம் வேண்டுமே! மாறிவரும் தொழில் சூழ்நிலைக்கேற்றபடி, பெட்ரோ கெமிகல், அணு விஞ்ஞானம், நீர்ப்பாசனம், வெள்ளப்பெருக்குத்தடுப்பு, சுற்றுப்புறச் சூழல் விஞ்ஞானம் என்றுபல பாலிடெக்னிக்குகளும், எஞ்ஜினியரிங் கல்லூரிகளும் கற்றுக் கொடுக்கின்றன. பகுதி நேரத் தொழிற்படிப்பும் உண்டு. இவ்வாண்டு புதிய ஒரு துறை — சூரத் காந்தி கல்லூரியில் பவர் எலக்ட்ரானிக்ஸ் என்று — துவங்கியிருக்கிறார்கள். இதுதவிர தொழில் சார்புடைய கல்வித் திட்டம் என்று பல பள்ளிகளில் போதிக்கிறார்கள். பேசுவதோடு நிற்பதில்லை!

கிராம வீட்டு வசதி திட்டம்:

நகர வீட்டு வசதியே இங்கே சொல்லிக் கொள்ளும்படி இல்லையே,

எட்டாத இடத்துக்கு

✕ எலெக்டிரானிக் தொழிற்சாலையில்...





✖ பிரான் மீன்களை வகைப்படுத்தும் பெண்கள்

குஜராத்தில் கிராம வீட்டு வசதித் திட்டமா? 1973-ல் இந்தத் திட்டத்தை நிறுவிய முதல் மாநிலம் குஜராத் தான். ரூரல் ஹவுஸிங் போர்டு என்று இதற்குப் பெயர். மிகக் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு உதவும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இது. சென்ற ஆண்டுமட்டும் 15000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இவ்வாண்டு 25000 வீடுகள் தயாராகி வருகின்றன.

மீன்வளம்:

தற்போது சௌராஷ்டிரா பகுதியில் விராவல், மங்க்ரோல் மீன்பிடித்துறை முகங்கள் உலக வங்கியின் உதவியுடன் விரிவாக்கப்பட்டிருக்கின்றன. 7000 டன் மீன்களை ஏற்றுமதி செய்து 20 கோடிரூபாய்க்கு மேல் அந்நியச் செலாவணி சம்பாதித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டில், இரண்டு குறிப்பிடத்தக்க விஷயங்கள். 1. மீன் பிடிப்பவர்களுக்கு குரூப் ஆக்ஸிடெண்ட் இன்ஷுரன்ஸ் செய்த முதல் மாநிலம் குஜராத். 2. மீன்பிடிப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 177ல் 50—க்குமேல் ஆதிவாசிகள் அங்கத்தினராய் இருப்பவை.

நிலக்கரி:

கட்ச் மாவட்டத்தில், பனந்தரோ என்னுமிடத்தில், நிலக்கரி தினம் ஒன்றுக்கு 2000 மெட்ரிக்டன் வெட்டியெடுக் கப்படுகிறது. இதில் என்ன விசேஷம்? நவீன முறை ஏதுமின்றி, குறைந்தபட்ச முதலீடு செய்து, அதிக பட்ச ஆட்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்திருப்பட துதான் விசேஷம். அதிக தேவையை முன்னிட்டு, புதிய யந்திரங்களை உபயோகித்து, வெளி நாட்டு நவீனத் தொழில் நுட்பத்தை உபயோகித்து, தினசரி 6000 மெட்ரிக் டன் நிலக்கரி எடுக்கத் திட்டங்கள் தயாராகின்றன.

மின்னணு (எலெக்ட்ரானிக்)தொழிற்சாலைகள்:

குஜராத் இண்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன், துவக்கக் கட்டத்தில் ஒன்பது திட்டங்கள் ஆரம்பித்திருக்கிறார்கள். தொழிற்சாலை யந்திரங்களும், தினசரி வீடுகளில் உபயோகிக்கும் எலக்ட்ரானிக் சாதனங்களும் தயாரிப்பதில் இவை உடனே ஈடுபடும். வாக்கி—டாக்கி, கேஸட் டேப்புகள், டீ. வி. பிக்சர்டியூப், கலர் டீ. வி. இத்யாதி.

நிலப்பங்கீடு:

உபரி நிலத்தை விநியோகிப்பதிலும் குஜராத் முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. விவசாய நிலஉச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் ஜனவரி 84 வரை, 31470 ஏக்கர் உபரிநிலத்தைப் பங்கிட்டு வழங்கியிருக்கிறது. ஷெட்யூல்ட் வகுப்பு மக்களுக்கு வழங்கியுள்ளபொருளாதார உதவியிலும், வீட்டு நிலப் பட்டா வழங்குவதிலும் இரண்டாவது இடம் குஜராத்துக்குத்தான்!

தானிய உற்பத்தி:

தேவையான மழை, சமயத்தில் கிடைத்த உரங்கள் எல்லாம் சேர்ந்து, இந்த ஆண்டு தானிய உற்பத்தி 52.75 லட்சம் டன்கள். இவ்வாண்டு வேர்க்கடலை சாகுபடி மட்டும் 27 லட்சம் டன்!

முடிவாக...

தொழில்கள் தொடங்க குஜராத் வசதியான இடம் என்று வெறுமனே சொன்னால் போதாது. எப்படி என்று விளக்க வேண்டும். இந்தியாவிலேயே தொழில் துறையில் முதலிடம் வகிக்கும் மகாராஷ்டிராவை மிகவும் நெருங்கி, இரண்டாவதாக நிற்கிறது குஜராத். மாநிலம் அமைக்கப்பட்ட போது அது வகித்த இடம் எட்டாவது! பெட்ரோலியப் பொருட்கள், இஞ்ஜினியரிங் தொழிலகங்கள், உரத் தொழிற்சாலைகள் விஷயத்தில் பரோடா, பஞ்ச் மஹால், சூரத் மாவட்டங்கள் துடிப்பாக முன்னிற்கின்றன. தொழிற்சாலை தொடங்க, ஒரே அமைப்பின் கீழ், லைசென்ஸ், நிதி, ஆலோசனை என்று எல்லா வசதிகளும் கிடைக்கின்றன. இங்கே அங்கே என்று தொழில் தொடங்குகிறவர் பந்தாடப்படுவதில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, இவன் தமிழன், இவன் மலையாளி என்ற பாகுபாடு பார்க்கும் குணம் எங்கும் காணப்படாதது முக்கியமான அம்சம். 'நமது மாநிலத்தில் உழைக்கிறான். உழைப்பு மாநிலத்துக்குக் கிடைக்கிறது. அவனுக்கு ஊதியம் கிடைத்துவிட்டுப் போகட்டுமே' என்ற பரந்த மனப்பான்மையே அனைவரிடமும் தெரிந்தது.


ஓம் க்ரீம் க்ரைம்!
௬
கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்
வருமானவரி அதிகாரி கிரிதேவன் நீண்ட கொட்டாவிகளுடன் படுக்கையில் சாய மாதவி வருகிறாள்.
என்னப்பா? உங்க பனியனலே வரி போர்வையிலே வரி நீங்க விளக்கிற சாமி போர்லேயும் வரி இருக்கணுமா?
அம்மா! ஈஸ்வரி! பரமேஸ்வரி! ராஜேஸ்வரி!
வரிகள் இல்லாட்டா அரசாங்கம் எப்படி நடக்கும்? இந்த வருஷ பட்ஜெட்டிலே பிரணப் முகர்ஜி......
அப்பா! என்னைக் கேட்டா, சிம்பிளா, வேலை செய்யறவங்க எல்லாம் ரெண்டு மாச சம்பளத்தை வரியா கொடுத்துடணும்னு சொல்லிடலாம்.
ரெண்டு மாசமா? எந்த ரெண்டு மாசம்?
ஜனவரி பிப்ரவரி! மறக்கமுடியாது பாருங்க.
ம்! இந்த நடப்பு நிதியாண்டிலே உனக்குக் கட்டாயம் கால்கட்டு போட்டுடணும்!
கால் கட்டுக்குத் தலைவு ஒரு பிரச்சனையா இருக்கும் போல இருக்கேப்பா!
என்னம்மா சொல்றே? சினிமா டயலாக் போல நீ சொல்றது புதிரா இருக்கே.
அப்பா! நீங்க தான் என் செல்ல டாடி ஆச்சே! டக்குனு சொல்லிடறேன். நான் ஒருத்தரை லவ் பண்றேன்.


ம்! இந்தக் காலத்திலே தாயில்லாப் பொண்ணு கூட கவலைப் பட மாட்டா! ஆனா லவர் இல்லாத பொண்ணு கவலைப் படுவா! சபாஷ், யாரு அந்தப் பையன்?
அப்புறம் சொல்றேன். ஆனா ஒரு ப்ராப்ளம். அந்த பாய்க்கு தலை நரைச்சு இருக்கு. நரையப்பா .... புல்லா...
என்னது? தலை நரைச்ச யங் ..பெல்லோவா? தலை பூரா வெள்ளையா? மாதவி, மை டியர் டாட்டர்...
என்னப்பா?
எனக்கு வேற டீடெய்லே வேண்டாம். சம்மதம் கோ அஹெட். குட்நைட்!
கனவு சீனில் மாதவி மிதந்து இருக்க ஜன்னலை யாரோ தட்டுகிறார்கள்.
யாரு?
மாதவி! நான் நான் சதீஷ்! கதவைத் திற
வாட்! சதீஷா? நோ! நீ யாரோ! உன் தலை கறுப்பா இருக்கு... அட! பிண்டலானந்தா வின் துப்பாக்கி உன் தலையை மாத்திடுச்சா? ஐய்யா....
பிண்டலானந்தாவா அவன்! இல்லை, பித்தலாட்ட ஆனந்தா! மாதவி, நான் ஒரு கொலையில் மாட்டிண்டு இருக்கேன்.
கொலையா? யார் கொலை..
மாதவி! என்னுடைய அக்கா கனகத்தைக் கொன்னுட்டாங்க.
மை காட்! யாரு கொன்னாங்க?
இப்போ சொல்ல முடியாது. டாக்டரெல்லாம் நாலு மணி நேரம் கழிச்சாத்தான் சொல்ல முடியும்னு சொல்ற மாதிரி நாலு அத்தியாயம் கழிச்சுத்தான் சொல்ல முடியும்.
தொடரும்





அமரர் கல்கி

நினைவுச் சிறுகதைப் போட்டி

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாவது பரிசு	**ரூ. 500**
மூன்றாப்பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 விதம்)	**ரூ. 500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு

✻ கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை

✻ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

✻ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்பவேண்டிய கடைசி தேதி: ஜூன் 15

✻ உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

✻ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

✻ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

✻ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

✻ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

✻ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.

ராஜதந்திரம்

விசுவின் ராஜதந்திரம் என்னவென்றால்--

அதற்கு முன் கதையைப் பற்றிப் பேசுவோமே! கூடவே முதல் வரிக்கு விளக்கமும் கிடைத்துவிடும்.

ஒரு பெரிய பணக்காரர் வீட்டுக்கு 'இரண்டாவது' மனைவியாக வந்து சேருகிறவர், சொத்துக்காக, அந்தப் பணக்காரரையும் அவர் முதல் மனைவியையும் கொலை செய்து விட்டு, முதல் தாரத்து மகனைப் பொம்மையாக மாற்றி (கார்த்திக்கிற்கு எவ்வளவு பொருத்தமான ரோல்!) பின் அந்தப்பொம்மை மகன் வேறொருவரால் சாவி கொடுக்கப்பட்டு, (வேறு யாராம் அந்த ரோலுக்கு? விசுதான். க. தி. வ. டை. விசுவேதான்) அந்த இரண்டாவது மனைவியை அதாவது சித்தியை ஆட்சிபீடத்திலிருந்து இறக்கி, வானவர் உலகத்திற்கு டிக்கெட் எடுத்து அனுப்புகிற கதை.

முற்பாதியில் கதையை வெகு அழகாகச் சொல்கிறார் விசு. அப்புறம், அப்புறம் என்று கேள்வி மேல் கேள்வியாய் ஆவலுடன் கேட்க வைக்கிறது. இது ஏ சென்டருக்காக. பிற்பாதியில் அனுராதா டான்ஸ், ராதாரவி–ராணி பத்மினி ஆட்டம், கார்த்திக், கிஷ்மு அன்கோவின் துபாய் பணக்காரர் கூத்து, டிஷ்யூம் – 'பி' அண்ட் 'சி' சென்டருக்காக! புரிந்துவிட்டதா விசுவின் ராஜதந்திரம்! கோயில் சுவரில் 'வெள்ளிக்கிழமை வருவேன்' என்று கரித்துண்டால் ஒவ்வொரு வாரமும் அழுத்தி அழுத்தி எழுதும் ஸீன்–

தாய்மார்களுக்காக இதுபோல் நிறைய ஸென்டிமென்டல் டச்!

'அடிச்சிக்கிட்டே பேசு' என்று சொல்லிக் கொண்டே புருவங்களை உயர்த்த வைக்கிறார். மனுஷருக்கு நடிப்பு அனாயாசமாய் வருகிறது. ஆனால் குரல்தான் எடுபடவில்லை.

இருவரைக் கொன்றுவிட்டுப் போலீஸுக்குப் ஃபோன் பண்ணிக் கொண்டே கைகேயிவேஷம் போடும் இடத்தில் பிரமீளாவின் நடிப்பு – சும்மா சொல்லக்கூடாது–அபாரம்.

ஜூடோ ரத்தினம் சண்டைக்காட்சிகளை அமைப்பதை விட சர்க்கஸ் காட்சிகளை அமைப்பதில் அதிக சிரமம் எடுத்துக் கொள்கிறார்!

ஒரு நியாயமான சந்தேகம்! புலியூர் சரோஜா கற்றுக் கொடுக்கும் டான்ஸ் மூவ்மெண்ட்ஸ்களை செய்பவர்களுக்கு உடம்பில் அங்கங்கே(!) சுளுக்குப் பிடிக்கிறதா, இல்லையா?

கலக்ஷனு – கதையில் நாயகி, பெயருக்கு!

இந்தப் படத்தில் கொஞ்சம் எடுப்பாய் இருக்கிற 'எட்டுத் திக்கும்' பாடல்கூட எம். எஸ். விஸ்வநாதனின் அந்த நாள் மெட்டுக்களை வைத்துப் பார்த்தால் சுமார் ரகம் தான்.

டைரக்ஷன் டைட்டிலைப் புதிதாய் எங்கே செருகுவது என்று யோசித்துச் செயல்படும் இயக்குனர் லிஸ்டில் விசுவும் சேர்ந்திருக்கிறார். சவால் விட்டு 'என் பேரு–' என்று சொல்லி நிறுத்தி, சட்டென்று திரும்ப, காமிரா விசுவை மௌனமாய் ஜூம் செய்ய டைட்டில் கார்டில் விசு என்று போடுகிறார்களே – புதுமைதான்.

–ஜெயமன்மதன்



வேங்கை வனம்

அத்தியாயம் 4

வேங்கையின் சபதம்

நீண்ட நெடுநேரம் வரை நினைவு கல்லாகிப் போன மாமன்னர் உக்கிரப்பெருவழுதி, ஒருவாறு தமது நிலைக்கு வந்து ஆசனத்தை விட்டு அமைதியாக எழுகிறார். அனைவரும் எழுந்தனர். தமிழ் மட்டும் அமர்ந்திருந்தது.

என்ன நடந்தது? ஏனிந்த குழப்பம்? என்கிற உண்மை புரியாத தடுமாற்றம் அவரது நெஞ்சக் குழியில் பல்லாங்குழி விளையாடுகிறது.

படபடத்த இமைகளுடன் கீழே தமது பார்வையைச் சுழல விட்டுச் சற்றே நிமிர்ந்து, வேங்கை மார்பனை நோக்குகிறார்.

தமிழ் பேசியது: ''பெருவழுதி! நான் சென்று திருமேனியிடம் பேசிப் பார்க்கிறேன். அவளது மனமாற்றத்துக்கான காரணம் அறிந்து வருகிறேன்.''

மாங்குடி மருதனாரை அலைமோதிய சிந்தையுடன் நோக்கிய மாமன்னர், ''புலவரே! நானே சென்று விசாரிக்கிறேன். அதுவரை நீங்கள் நமது பிரதான விருந்தினர் மாளிகையில் வேங்கைமார்பனுடன் தங்கியிருங்கள். முடிந்தால் திருமேனியை இங்கு அழைத்து வருகிறேன். முடியவில்லையானால் உங்கள் இருவரையும் அங்கு அழைத்துச் செல்வேன். இடையில் யாரோ எரிதழலைக் கொட்டியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்'' என்று கூறிப் புறப்பட்டுச் சென்றார் உடன் பாண்டிமாதேவியும் பின்தொடர்ந்தாள்.

அரண்மனையில் பணியாளர்கள் விளக்குகளுக்கு ஒளிநகையணிவிக்கத் தொடங்கினர்.

அனைவருமே சிறப்பு விருந்தினர்மாளிகை நோக்கிப் புறப்பட்டனர்.

அந்தப்புரத்து மேன்மாடம். திருமேனி மட்டுமே உலவும் திருக்கூடம்.

சித்திரங்களாலும் சிற்பங்களாலும், பொன் பூணிழைத்த யானைத் தந்தங்களாலும் அந்த மேன்மாடம் அழகுற விளங்கியது.

அகன்று நீண்ட அந்த அறையில் கீழே ரத்தினக் கம்பள விரிப்பு. அதிலே தாமரைச் சித்திரங்கள்.

பொன்னாலும், வெள்ளியாலும் வெண்கலத்தாலும் செய்த அலங்காரப் பொருட்கள் ஆங்காங்கு பொலிவைத் தந்தன. வாசற்படியின் இருபுறங்களில் தந்தங்கள் வளைந்த யானை முகங்கள்.

இலவம்பஞ்சாலும், அன்னச்சிறு இறகுகளாலும் மஞ்சம், தலையணைகள்.

ஒருபுறம் அமர்ந்து ஓய்வெடுக்கச் சாய்வான பொன்னாசனம். எதிரே நாற்கால் மேடை; அதன்மீது பூந்துகில் விரிப்பு. அதற்கு மேலே பொன்னாலான மீனாட்சியம்மன் சிலை. ஆதி தமிழரசி அவளல்லவா?

இன்னொருபுறம் மேடையில் சுவடி தாங்கிகள். அவற்றின் மீது தொல்காப்பியம், சிலப்பதிகாரம்; அப்போதைய சங்கப் புலவர்களுள் ஒருவரான உருத்திரசன்மரால் தொகுக்கப்பட்டு வரும் அகநானூறு பகுதிகள்.

மஞ்சத்துத் தலைப்புயரத்தின் மீது தலையணையை நிமிர்த்திப் போட்டு, அதன் மீது தலை புதைத்து விம்மிக் கொண்டிருந்தாள், விடியலைத் தேடி, அது அஸ்தமனமாகி விட்ட விசாரத்துடன் காணப்பட்ட திருமேனி.

அறைக் கதவுகள் அவளது மனக்கதவுகளைப் போலத் திறந்தே கிடந்தன.

வெளியில் தோழிப் பெண்கள்.

மாமன்னரும், பாண்டியமாதேவியும் வருவதைக் கண்டு தலைவணங்கி நிற்கிறார்கள்.

அவர்களைக் கீழே போகுமாறு உத்தரவு பணிக்கிறார் உக்கிரப் பெருவழுதிப்பாண்டிய மாமன்னர்.

அறையினுள் நுழைகிறார்கள்.


விக்கிரகம் விசும்பிக் கொண்டிருக்கிறது.

அருகே சென்ற பாண்டிய மாமன்னர், அவளது கரிய கூந்தலைக் கனிவோடு தடவிக் கொடுத்து ''திருமேனி! என்னம்மா நடந்தது?'' என்றார்.

சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்து ஓய்வு பெறும் கே. பி. என். சிங், தமிழக அரசு அவருக்கு ஏற்ற குடியிருப்பை ஒதுக்கத் தாமதம் செய்த படியால், தமிழகத்திலிருந்த 22 மாதமும் சென்னைச் சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகையின் ஒரு அறையிலேயே தங்கியிருந்தார்!

—ஆர். எஸ். சுப்பிரமணியம்.





ரூமமரை முகம், சரத்தால் நைந்து, பாரத்தால் கேசங்கள் கலைந்து, கோரத்தால் கண்கள் சிவந்து, சாரமற்று, சஞ்சலமுற்று, துல்பியலைச் சரணாகதியடைந்து எங்கோ, எங்கோ, எதையோ, எதையோ தேடி, தேடி....

ஓ... அது வேண்டாம்; அது வேண்டாம்.

''அப்பா!'' என்றலறலுடன் எழுந்தவள், தந்தையின் மார்பில் தலைபுதைத்து விக்கியும் விகம்பியும் அழுகிறாள்.

''என்னம்மா நடந்தது? ஏனிந்த அழுகை? வேங்கை மார்பனே தூது வந்த பிறகு நீ ஏனம்மா வேதனையைத் தூது அனுப்பினாய்?''

கோவி. மணிசேகரன்

அவரது குரல் தழுதழுத்தது.

ஒரு பக்கம் பாண்டியமாதேவி மௌனச்சிலையாகி நிற்கிறாள்.

விளக்குகள் நாற்புறங்களிலும் ஒளிக் கண்களுடன் வேடிக்கை பார்க்கின்றன.

''இருமேனி! கொஞ்சம் நிமிர்ந்து என் அழைப்புக்கு மதிப்புத் தருவாய் என்று நினைக்கிறேன்.''

தலையணையுள் புதைத்த தலையை நிமிர்த்தி அண்ணாந்து நோக்குகிறாள் இருமேனி.

தாமரைகளுக்கெல்லாம் தலையான தாமரையான அவளது முகம் - எந்த நேரத்திலும் மலர்ந்திருக்கும் மணம் பெற்ற பொற்

மார்பில் புதைத்த தலையை நிமிர்த்திய திருமேனி, தந்தையை இமைக்காது கவனித்து பிறகு சொன்னாள்: "எனக்குத் திருமணம் வேண்டாம்."

"அதுதான் ஏனென்று கேட்கிறேன்."

"அவர் வேங்கை மார்பனல்ல; வேஷ மார்பன்!"

"என்ன? வேஷமார்பனா? யார் உனக்கு இந்த உபதேசம் செய்தார்கள்?"

"நான் எதையும் விளக்க விரும்பவில்லை. வேங்கைமார்பனையே இங்கு அனுப்புங்கள். நானே கேட்க வேண்டியதைக் கேட்டு, அவரையே தர்மசங்கடத்துக்குள்ளாக்கி, காவற்பெரியிலுக்கு அனுப்பி வைக்கிறேன். போய் உடனடியாக அனுப்பிவையுங்கள். ஆனால் அவருடன் நீங்கள் யா....ரும் வரக் கூடாது!"

வெறிகொண்ட முகபாவனையுடன் கண்கள் சிவக்க, சொற்களை நெருப்பில் வறுத்துக் கொட்டினாள் திருமேனி.

"நாங்கள் வராமல் போனால் நடந்தது எப்படித் தெரியும் திருமேனி?"

"பின்னும் நான் சொல்லாமலா போகப் போகிறேன்?"

"மாங்குடி மருதனாரை அனுப்பி வைக்கிறேனே அம்மா?"

"பூங்குடி வண்டு கூட உள்ளே புக அனுமதியேன்!"

என்ன தீர்மானமாய்ப் பேசுகிறாள்?

"திருமேனி! நீ விரும்பியபடியே வேங்கைமார்பனை இங்கே அனுப்பி வைக்கிறேன். ஆனால் நீ இப்படி அலங்கோலமாக இராமல், சற்று அமைதி கண்டு, சற்றே அலங்காரம் கொண்டு, 'இவ்வளவு அற்பமாகப் பேசுகிறாளே பாண்டியகுமாரி' என்று வந்தவன் நினையா வண்ணம் நடந்து கொள்ள வேண்டும்."

ஞாபகமறதி பிரயாணிகளினால் ஜப்பானிய ரயில்வே துறையினருக்கு மிகுந்த தலைவலி.

கடந்த ஆண்டில் மட்டும் 25 லட்சத்துக்கு அதிகமான குடைகளையும், 3 லட்சத்திற்கும் அதிகமான துணிமணி ரகங்களையும், 25 லட்சத்துக்கும் கூடுதலான புத்தகங்களையும் ஜப்பானிய ரயில்வே துறையினர் கண்டெடுத்துள்ளார்கள்.

இவைகளின் மதிப்பு கிட்டத்தட்ட 30 கோடி ரூபாய்!

—ஏ. நிர்ச்சலாதேவி.

ஆதாரம்: நியூ டைம்ஸ்.



சற்று நேரம் வரை தந்தையை உற்றுக் கவனிக்கிறாள் திருமேனி. பிறகு ஒற்றை வரியில் சொன்னாள்:

"நான் ஔவைப் பிராட்டியிடம் தமிழ் பயின்றவள்."

அதற்கு மேலும் அங்கு நிற்க விரும்பாத பாண்டிய மாமன்னரும் பாண்டியமாதேவியும் தளர்நடை போட்டு வெளியே சென்றனர். ஏதோ நடந்திருக்கிறது...

மூன்று நாழிகைப் போது முழுமையாக விடைபெற்றது.

பொன்மேனியாய்ப் புலர்ந்து புகழ் மேனியாய்த் தவழ்ந்து தமிழ்மேனியாய் வளர்ந்த திருமேனி தனது உருவத்தோற்றத்தைப் பளிங்காடி (கண்ணாடி)யில் பார்த்துக் கொள்கிறாள்.

சே! என்னே அலங்கோலம்...!

எது எப்படி இருப்பினும் நான் ஓர் அரசகுமாரி. அந்தக் கௌரவமாவது பொற்செமிழில் புன்னகை புரிய வேண்டாமா?

அவளையுமறியாது அவளுக்கும் தெரியாது ஏதோ ஒன்று அவளைச் சமாதானம் செய்கிறது.

ஒருவாறு தன்னை ஒப்பனை செய்து கொண்டாலும் அக்கினிக் கண்களுடன் வேங்கைமார்பன் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள்.

தோழிப்பெண் உள்ளே நுழைகிறாள்: "வேங்கை மார்பர் வருகிறார்."

அவள் விடைபெறுகிறாள்.

உந்தியில் யாரோ தீ மூட்டுவது போன்ற எரிச்சல்.

சற்றைக்கெல்லாம்...

காலடி ஓசை செவிகளை உலுக்குகிறது. வாசற்படியில் வந்து நிற்பது தெரிகிறது.

"உள்ளே வரலாமா?"

—வேங்கையின் உறுமல் குரல்.

"ம்ம்!"

—திருமேனியின் மறு உறுமல்.

உள்ளே நுழைந்த வேங்கைமார்பன், எழுந்து நின்று வரவேற்காமல், ஆணவமுடன் மஞ்சத்தில் அமர்ந்து காணப்பட்ட திருமேனியை நோக்கிய அடுத்தகணம்...

கனன்ற நெருப்பில், காலை அழுந்தப் பதித்தது போன்று துடித்துப் போனான்.

காலை, வைகைக்கரையில் கண்ட வைரச் சிலை...

வான் சிந்தும், கனவும் தேன்சிந்தும் நினைவுமாக இருந்த வாலிபச் செல்வனை வேங்கை மார்பன், வசந்த மயிலாய் வைகையில் காட்சிதந்து, இப்போது கசந்த புயலாய் உருவெடுத்த நிகழ்ச்சித் திருப்பத்தை எண்ணிப் பார்க்கிற போது...

முதலை விதி ரூபத்தில் வர, இவள் மந்திரிகுமாரி என்று சதிரூபத்தில் பொய்யுரைக்க...

என்ன மூர்க்கமான தர்க்கங்கள், நீர்க்கமற்ற முடிவுகள்.

"என்ன சகோதரரே, யோசிக்கிறீர்கள், நலமா?"

கணீரென்று ஒலித்த திருமேனியின் குரல் கேட்டு, பளீரென்று வேங்கையானது கன்

னத்தில் அறைந்து விட்ட திணறலுடன் தன்னிலைக்கு வந்து கவனிக்கிறான் வேங்கை மார்பன்.

உடல் முழுவதும் தீப்பற்றி எரிவது போன்ற உணர்வு; அந்த நிலை அணைக்கப் புறப்பட்ட வியர்வைத் துளிகள்....

சகோதரரே...

அவள் அழைத்த அழைப்பு காதலை அவமானப்படுத்துகிறது.

என்ன காரியம் செய்து விட்டோம்?

''இனி, பேச வேண்டியது ஒன்றுமில்லை. அழைப்பிலிருந்து புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்; நீங்கள் போகலாம்.''

இதயத்தை இரும்பாக்கி எதிரொலித்த மறுமொழி.

வேங்கைமார்பன் கண்கள் கலங்குகின்றன.

''திருமேனி! யோசித்துத்தான் இந்த முடிவைச் சொல்கிறாயா?''

''இதில் யோசிக்க ஒன்றுமே இல்லை. யோசிக்க வேண்டியவர் நீங்கள்!''

''வைகைக் கரையில் சந்தித்தவள் மந்திரி குமாரி; இப்போது வாழ்க்கைக்கரையில் நின்று பேசுவது ராஜகுமாரியுடன்!''

''எந்தக் குமாரியாயிருந்தால் என்ன? உங்கள் இதயத்தில் குடிபுகுந்து விட்ட சொந்தக் குமாரியைத் தேடிச் சென்று வாழ்வின் சொர்க்கம் காணுங்கள்.''

''என் இதயத்தில் நிரந்தரமாகக் குடி கொண்டவளே நீதான்; தினமும் நான் பூஜிப்பதும் உன்னைத்தான்.''

''என்னை நன்றாக ஒருமுறை நோக்கி மீண்டும் ஒருமுறை சொல்லுங்கள்.''

''சத்தியமாக நீதான்!''

''சத்தியம் வைப்பதற்கு நாணமாக இல்லை?''

''நிஜமான சத்தியம் நாணப்படத் தேவையில்லை! நாணப்பட வேண்டியதுமில்லை.''

அடுத்தகணம்...

ஆவேசம் கண்டு போனாள் திருமேனி.

''நிஜமான சத்தியம்? நிஜமான சத்தியம்?'' என்று கூறிக் கொண்டே எழுந்து வந்தவள், சந்தகம் கொண்டவளைப் போல வெறிகொண்டு, மீனாட்சியம்மன் சிலை இருந்த நாற்கால் மரமேடை மீது, இருகரங்களையும் மேலே உயர்த்தி ஓங்கி ஓங்கி சத்தியம் வைப்பது போலப் பலங்கொண்டு அறைந்து, அறைந்து, ''பொய்! பொய்! பொய்!'' என்று தொண்டை கிழியக் கத்துகிறாள்; தண்டைக் காலைத் தரையிலே உதைக்கிறாள்; தாறுமாறாகிப் போன மேலாடையையும் கவனியாது கத்துகிறாள், கதறுகிறாள், கண்ணீர் சிந்துகிறாள்...

அவளும் தான் வேங்கைமார்பனைப் போன்று வான் சிந்தும் கனவுகளையும் தேன் சிந்தும் நினைவுகளையும் நெஞ்சில் வைத்தும் நித்திரையில் தைத்தும் விரும்பியும் வேதனைப் பட்டுமிருக்கிறாள்...

ஏன் அழமாட்டாள்? ஆத்திரப்படமாட்டாள்!

அவளது கண்களில் அக்கினிப் பொறிகள் அலைமோதிப் பறக்கின்றன.

வியர்த்தும் வெலவெலத்தும் போனான் வேங்கைமார்பன். ஆயினும் தி. மாகவோ சொன்னான்: ''திருமேனி! நீ ஆயிரம் முறை பொய்யென்று ஆவேசப்பட்டு அறைந்தாலும்...''

—இடையே அவனது வீரமார்பு காதல் தோல்வியால் அழுந்தி விம்முகிறது!... தொடர்ந்து சொன்னான்: ''வேங்கை மார்பன் இதயத்தில் திருமேனியைத் தவிர வேறு யாரும் கிடையாது!''

''பொய்! பொய்! பொய்!''

—கதறுகிறாள் திருமேனி.

மேலும் கர்ஜிக்கிறாள்:

''உங்கள் அரியணையை அலங்கரிக்க ஒரு மாமன்னன் மகள் தேவையென்று தூது வந்திருக்கிறீர்கள். இது ஒரு சுயநலத் தூது! ஆனால், ஆசைக்கு உங்கள் இதயத்தில் எப்போதோ குடிபுகுந்து விட்டாள், உங்கள் பக்கத்திலிருக்கும் பதுமை அழகி தியாகவல்லி!''

தியாகவல்லி...

ஓ... வைகைக்கரையில் ஏற்பட்ட நிகழ்ச்சி ஒரு விபத்தானது. அதை வைத்து இவள் தவறாக எடைபோட்டுவிட்டது அதைவிட விபத்தானது...

''தியாகவல்லியா? திருமேனி! நீ தவறான ஜாதகத்தை அரைகுறை ஜோதிடனிடம் கொடுத்து அவசிக் கணிக்கிறாய்! அவள்...''

''போதும்! நீங்கள் போகலாம். எனக்கு எந்த விளக்கமும் தேவையில்லை. எப்போது சகோதரனாகப் பாவிக்கச் சொல்லிவிட்டீர்களோ அப்போதே நமது கதை முடிந்து விட்டது...''

''நான் சொன்னது மந்திரிகுமாரிக்கு!''

''இப்போது நான் ராஜகுமாரி பேசுகிறேன். ஏன்? அப்போதே இதயத்திலிருப்பவள் பாண்டிய ராஜகுமாரி என்று சொல்லி இருக்கலாமே? எவளோ என்று சொன்னால், யார் ஜாதகத்தை நான் கணிப்பேன்? எனது இந்த முடிவு சரியோ, தவறோ. இனி உங்களை ஏற்பதற்கில்லை. இனி இந்த நெஞ்சில் யாரையுமே ஏற்கவும் போவதில்லை. இது உறுதியானது.''

வேங்கைமார்பனுக்கு இப்போதுதான் ஆவேசம் சற்றே தலைதூக்கியது.

''எனது நெஞ்சிலும் இன்னொரு பெண்ணுக்கு இடமில்லை திருமேனி! ஆனாலும் உன்னை அடைந்தே தீருவேன்!''

''இந்தப் பிறவியில் முடியாது.''

''முடியும் என்று நிரூபிப்பேன்!''

''பலாத்காரமாகவா?''

''நான் பண்பான பாண்டிய குலத்தில் பிறந்தவன். நீ சங்கம் வைத்துத் தமிழை வளர்க்கலாம்; ஆனால் நான் என்னை வைத்தே தமிழை வளர்ப்பவன். நான் உன்னை அடைய வில்லையென்றால்... நான் தமிழனல்ல; எனது மொழி தமிழல்ல; நான் தமிழ் வீரனல்ல; ஏன்! நான் தமிழனுக்கே பிறந்தவனல்ல! வருகிறேன் திருமேனி!''

ஆவேசம் கண்ட திருமேனியே அதிர்ந்து போனாள்.

வேங்கைமார்பனோ, வெறிகொண்ட வேங்கைபோல வெளியேறினான்.

(தொடரும்

SILVER JUBILEE YEAR

GUJARAT: TORCH-BEARER IN PROGRESS



..."It is typical of Gujarat not to rest on the laurels of its past contribution. The growth of Gujarat's agriculture and industry point to the enterpreunership of Gujaratis and their capacity for hard work. Their spirit of self-help is revealed by the strength of the co-operative movement. Gujarat is hospitable to many new initiatives ranging from wildlife preservation to innovations in management".

इन्दिरा गांधी



GUJARAT proudly enters its Silver Jubilee Year. The formation of the new State of Gujarat, 24 years age, had kindled many hopes and aspirations among the people of Gujarat. With their enterprise and hard work the people of Gujarat have been able to take rapid strides in the field of development and today, Gujarat enjoys an honourable place on the map of our country. Under dynamic leadership of the Prime Minister Smt. Indira Gandhi, the present Government of Gujarat headed by Shri Madhavsinh Solanki has given further boost to the progress of the State.

ECONOMIC SCENE

The per capita income of Gujarat has increased from Rs. 680 in 1960-61 to Rs. 859 in 1982-83 as against the national aveage of Rs. 712. The per capita income of Gujarat in 1982-83 at current price is estimated to be Rs. 2176 as against the national average of Rs. 1891.


Gujarat's economy has grown at a rate of 3.5 p.c. per annum in the last two decades. However, during seventies, while soda as well as chemical fertilizers. It has largest petrochemical complex in the country. Engineering industries, electronics and pharmaceuticals are also developing rapidly at the rate of 5-6 per cent per annum.

The number of working factories has grown from 3,649 in 1960 to 11,438 in 1981. In terms of number of employed, the rise over the same period has been from 3.30 lakhs to 6.68 lakhs. The productive capital in the

WELFARE OF BACKWARD CLASSES

6.67 lakhs plots were alloted to landless rural labour families. 2.19 lakhs houses built. Minimum daily wages for agriculture labour were increased to Rs. 9. Gujarat Rural Development Board set up. Old-age pension schemes for agriculture labourers started.

The State has set up a Scheduled Tribes Development Corporation, Minority Board and



AGRICULTURAL DEVELOPMENT

The index of agricultural production has increased at an annual compound growth rate of 3.1 per cent during 1960-61 to 1982-83.

The productivity in agriculture has grown at an annual compound rate of 4 p.c. during the seventies as compared to 0.8 p.c. per annuam during the sixties.

the national economy grew at an annual rate of 3.3 p.c. Gujarat's economy grew at a rate of 4 p.c.

20 POINT PROGRAMME

Gujarat has achived significant success in implementation of 20 Point Programme for economic and social development. More than 100 p.c. progess achived in Surplus land allotment, House sites allotment, Construction assistance, Primary health centres, Integrated rural development and National rural development etc. Gujarat ranks second in the country in implementation of the programme.

INDUSTRIAL REVOLUTION

The pace of industrialisation in the State has been impressive. It ranks second in the country. It is not only a textile producing State now.

Gujarat, today, is a major producer of inorganic chemicals such as soda-ash and caustic

registered factories in 1961 was Rs. 245.79 crores which increased to Rs. 3765 crores in 1981.

The number of registered small scale units in 1961 was 2169 with 22427 persons employed therin, which increased to 57,950 in 1973 with 6.72 lakhs persons employed. In 22 years, the small scale units have multiplied by 27 times. This phenomenal growth is supported by the State's progressive policies administrated through the industries administration and State Corporations namely G.I.D.C., G.S.F.C., G.S.I.C., and G.I.I.C.,

PLANNING FOR POWER

The total Power generating capacity was 333 MW in 1960-61, which increased to 2,976 MW in 1983-84. The State has planned ahead for future needs keeping provision for 10 p.c. more.

15,340 villages out of 18,275 were electrified.

Gujarat Backward Class Board. Special Component Plan for Scheduled Casts is also under implementation since 1979. The Government has fully accepted the recommendations made by Baxi Commission. Integrated development Programmes for urban weaker sections were implemented.

TECHNICAL EDUCATION:

Gujarat State has established eight Engineering Collages and nineteen Polytechnics with an intake capacity of 1945 for degree courses and 3705 for diploma courses. There are also 44 Technical High Schools. 443 seats for certificate level courses and 2136 seats for industrial training institute pattern courses are also available. One more engineering College and three new polytechnics will be opened during 1984.



"Gujarat is completing Twenty Four years of its formation and enters the Silver Jubilee year now. I extend my good wishes to all the people of Gujarat on this day of rejoicing.

"The socio-economic structure of Gujarat has undergone a vast change during these 24 years. We desire to take industries to the doorsteps of village people to provide employment to idle manpower. We have taken measures to provide assistance to educated unemployed. It is our earnest desire to provide employment to those who ask for it. We have before us an ideal where the needs of many should prevail over few.

Peace, unity, brotherhood, respect for each-others, faith and co-operation-these are basic qualities of our people and so it is not difficult to take the State to the peak of progress and I have no doubt about it."

[signature]

மெல்ல வந்த வெளிச்சம்

இந்திரா சௌந்தர்ராஜன்

''டப்.''

—அப்பளமாய் நொறுங்கிச் சிதறியது தெரு விளக்கு! மளுக்கென்று சூழ்ந்த அந்தகாரத்தில் 'மகா'வின் சிரிப்பொலி மட்டும் எக்காளத்தோடு கேட்டது.

''வேணாம்டா... முனிசிபாலிடிக்கு எழுதிப் போடாதீங்க. எத்தனை விளக்கைக் கொண்டு வந்து போட்டாலும் உடைச்சிக்கிட்டே இருப்போம்னு சொன்னு கேட்டாத்தானே?''

—சிரிப்பை நிறுத்துக் கொண்டு கருத்துக்கு அவன் தாவின போது ''மகா'' என்று ஒரு அழைப்பொலி.

''ஆரு?''

''நான் தான் வீரைய்யன் மகா... சரக்கு இருக்கா?''

''இல்லாமத்தான் வீதி இருட்டா இருக்கா? எவ்ளோ வேணும்?''

''கால் கிலோ...!''

''எய்... என்னத்துக்குடா இவ்ளோ? தனியா நீ எங்கேயாச்சும் வியாபாரம் ஆரம்பிச்சுட்டியா? தாளிச்சுப்புடுவேன், ஆமா...''

''சே... சே... இதெல்லாம் நமக்கு ஒத்து வருமா மகா. லாட்டரியில இன்னிக்கு ஒரு நூறு விழுந்துச்சி... ரொம்ப நாளுக்கப்புறம் பார்ட்டிலை. இல்லேன்னு பங்காளிப் பசங்க கேட்டாங்க. அதான்...''

''அப்படியா?'' — இருட்டில் உரத்தல் நீர்த்த அந்த வாதப் பிரதிவாதங்களும், அதன் பின்னணியில் நிகழ்ந்த 'கஞ்சா' வியாபாரமும் இருட்டால் ஆக்கிரமிக்கப் பட்ட தெருவிளக்கை ஒட்டிய வீட்டில் இருக்கும் தனம்மாளின் கர்ப்பத்தில் கலக்க மருந்தாய்க் கரைந்து கொண்டிருந்தது. அதற்கு இசைவது போல் எரிந்து கொண்டிருந்தது சிம்னி விளக்கு!

''ஆண்டவனே இந்த 'மகா' வைத்தட்டிக் கேட்க யாருமே இல்லையா? விதியையே நாசப்படுத்தறானே...''

—அவள் தனக்குள் முனகிக் குமைந்த சமயம்... பக்கத்து வீட்டில் திடும்மென்று முளைத்த அழுகை கூரையைப் பிய்த்தது!

'என்னாச்சு?' — கால் இடற ஓடினவளைத் தேவகியின் சடலம் வரவேற்றது!

நாலு நாட்களுக்கு முன்னால் இதே ராத்திரி வரை ராஜகம்பீரமாக இருந்தவள் தான் தேவகி! மெருகு குலையாத சரீரம். பாரம்பரிய பரக்கிழங்கு உணவு பக்குவமாய்ச் சரீரத்தில் மேடுகளைப் பாவி வைத்திருக்கும் அதிசயம் எவரையும் கொஞ்சம் சபலிக்க வைக்கும்!

அடிக்கடி பெற்றவள் சுற்றிப்போட்டு திருஷ்டி கழிப்பாள்.

''ராத்திரியில எங்கேயும் வெளியில போய் வராதே... தெருவுல காலிப்பசங்க நடமாட்டம் அதிகம்...'' — என்றும் எச்சரிப்பாள்.

அதற்காக நாலு வீடு தள்ளிக் குடியிருக்கும் சிநேகிதி மகாலட்சுமியைக் கூட பார்க்கப் போகக் கூடாதா என்ன?

போனாள்.

தன் வீட்டு வாசலை விட்டு விலகியவுடனேயே செயற்கையாக எவனோ மோதினான். இருட்டில் சரியாக முகம் தெரியவில்லை.

'தன் தெரு... தன் வீட்டு வாசல்.... அந்தத் தெம்பில் நியாயமான தைரியத்தோடு கத்தினாள்.

''பார்த்துப் போடா பொறுக்கி...''— அவனும் அப்போதைக்குப் போய் விட்டான். மறுநாள் வீதியில் ஒரே கசாமுசா...

'மகா' அழைக்கப்பட்டான்.

'மகா தெருவுக்குள்ளார வெச்சி இனிமே கள்ளத்தண்ணி, கஞ்சாவெல்லாம் விக்காதே... உன் வசதிக்கு நீ வீதி விளக்கை உடைச்சு, உடைச்சு இருட்டாக்கிக்கறே... அந்த இருட்டுலே நடக்கக் கூடாத அக்கிரமம் எல்லாம் நடக்குது. ரொம்ப மரியாதையா சொல்லிக்கறோம்... உன் பொழைப்புக்கு நம்ம தெருவைப் பலி கொடுக்காதே...''



''ஏய் கிழவா... என்ன ஆண்டிப்பய கிட்டக் குழையறே...?'' — என்று வீதிப் பெரியவரை ஒரு அரட்டு அரட்டிவிட்டு ஓர் இளையவன் 'மகா' பக்கம் திரும்பினான்.

''மகா, மரியாதை கெட்டுப் போறதுக்கு முந்தி உன்னை மாத்திக்க. இல்லேன்னு அவ்ளோ நல்லா இருக்காது. இது ரவுடிப் பேட்டையில்ல. ஏழை பாழைங்க பொழைக்கற இடம்...''

—'மகா' அவனை ஒரு இளுசாகப் பார்த்தான். அதன் பின் என்ன நடந்ததோ தெரியாது. அந்த இளைஞன் புன்னகையோடு அவனிடமே சிகரெட்டுக்கு நெருப்புக் கேட்டதைப் பார்த்தான் தேவகி.

''இந்த வீதி வெளங்காது. பேருதான் பெரிசா போஸ் தெரு! ஊளர் கூப்பிடறது சாராயக் காரத்தெருன்னுதான். என்ன ஆம்பிளேங்க இவங்க...''

''ஏய், ஆம்பிளைகளைப் பத்தி அலக்காதடி. நீ பொம்பளையா லட்சணமா வீட்டுக்குள்ற கா.. பகல்ல எதாவது நடக்குதா? பெரிசாக் கத்துறியே. ...''

—ஒருவன் வாங்கிய வக்காலத்தில் அவள் அயர்ந்தவளை.

''அண்ணே... என்னால படிக்க முடிய லேண்ணே! வீட்டு சிம்னி விளக்கு வெளிச்சம் போத மாட்டேங்குது. தெருவிளக்கு எரிஞ்சா எவ்ளோ நல்லா இருக்கும். அதைப் போய் உடைச்சுப்பிட்டீங்களே...''

—ஒரு 'ப்ளஸ் டு' பேசினான்.

''டேய்... என்னமோ நான் உடைக்கற மாதிரியில்லே பேசறே... அந்த மகா பெரிய ரவுடி. அவன் கிட்ட வெச்சுக்கறது நல்ல தில்லே. ஒதுங்கித்தான் இருக்கணும்.. அது தான் நல்லது. அதைத்தான் சொல்'னேன்...''

—பேசிவிட்டு மீசையை வேறு அவன் நீவி விட்டுக் கொண்ட போது தான் சங்கடம் அதிகமாகியது.

''நான் மதுரை வில்லாபுரம்: எங்க தெருவுலயும் ஒரு சண்டிப்பய உண்டு. நேத்து ஒரு சினிமா பார்த்தேன். அது 'லயும் ஒரு ரவுடி! அவனும் இப்படித்தான் அட்டகாசம் பண்றான்.

—மொத்தத்துல தெருவுன்னு, ஒரு ரவுடி, ஒரு அக்கிரமம்கிறது வருஷத்துக்கு 'ஜனவரி, பிப்ரவரி' மாதிரி சட்டாயம் போல இருக்கு...''

—ஒரு பெரியவர் இடையே புகுந்து பொறித்த கருத்து விரிந்தது.

''ஒத்துமையா நின்னு எதுக்கறதைவிட என்னு புடுங்கற வேலை நமக்கு இருக்கு...''

''அதுதான் வரமாட்டேங்குதே...!''

''இப்படியே பேசிக்கிட்டே இருப்போம். ஜோரா வந்துடும்...''

—பேச்சுக்குக் குறையில்லாத வேளை. கப்பித் திண்ணையில் பீடி கரையக் கரைய சுவாரஸ்யமாகவே அறுத்துக் கொண்டனர்.

—தெருவில் அடிக்கடி டர்ர்ர் பர்ர்ர் என்று ஆட்டோவும், ஜல்ஜல் என்று சைக்கிள் ரிக்ஷாவும், விர்ர்ர் என்று டாக்ஸியும் என சகல வாகனங்களும் வெளிச்சம் பாய்ச்சி நுழைகின்றன. மறைகின்றன.



''மகா பெரிய ஆளுப்பா... நாலணு கிராக்கிலெ இருந்து நாலாயிரம் ரூவா கிராக்கி வரை அவனைத் தேடி வர்றதைப் பார்த்தியா?''

''ஆமா, போலீசு என்ன பண்ணுது?''

—யாருக்கும் இந்த இறுதிக் கேள்விக்கு மட்டும் விடை தெரியவில்லை.

''போலீஸ்காரங்களுக்குச் சம்பளமெல்லாம் ஒரு பிரச்னையே கிடையாது. மகா மாதிரி நாலு பேர் போதும்...'' — என்றான் ஒருவன் விஷமமாக.

''போடா வெட்டி... உன் மூதுலெ அழுக்கை வெச்சுக்கிட்டு எதிராளியைக் குறை சொல்லாதேடா. நீ கெத்தா இருந்தா 'மகா' இங்க பொழைப்பு நடத்துவானு? போலீசுதான் பொக்குனு போவுமா?''

'விட்டால் கதாகாலட்சேபம் பண்ணுவேன்' என்பது போல் அவர் நீட்டிய சமயம் தேவகியின் அலறல் அவர்களை ஒரு உலுக்கு உலுக்கியது...

நெருப்புக்குச்சியைப் பற்றவைத்துக்கொண்டும், சிம்னி விளக்கோடும் ஏகப்பேர் வீதியில் இறங்கி விட்டார்கள்.

கிழிந்த தாவணியோடு தேவகி விசும்பலும், புலம்பலுமாகத் தென்பட்டாள்!

''என்னம்மா நடந்துச்சு?''

''யாரோ நாலு பேர் என்னைக் கட்டிப் பிடிச்சு...'' — அவளுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை..

''டாய்ய்... எவன்டாவன்?'' — படு உஷாராய் நின்ற இடத்திலிருந்துகொண்டே ஒரு கத்து கத்தினான் ஒருவன்.

கெடுக்க முனைந்தவர்கள் அந்தப் பிராந்தியத்திலேயே இல்லை.

மறுநாள் சம்பவ பயம் அவளைக் காய்ச்சலில் விழ வைத்து விட்டது. துளி ரோஷமுள்ள சிலர் வீடு வீடாக ஏறிக் கையெழுத்து வாங்கி முனிசிபாலிடியில் உரிய அதிகாரியிடம் கொண்டு போய்க் கொடுத்தனர்.

''உங்க தெருவுக்கு பல்பு போட்டுப் போட்டு எங்க முனிசிபாலிடியே திவாலாகப் போகுது...'' — அவர் குத்தலாக, கிண்டலாக, கடூரமாக எல்லாமுமாகப் பேசினார்.

''ஒரு ரவுடிப்பய பண்ற பாடு சார்...''

''அவனை அடக்கத் துப்பு இல்லையா உங்களுக்கு? போலீஸ் எதுக்கு இருக்கு...''

—மௌனித்தனர் பணிவாக. 'இந்தமாதிரி மௌனம், இந்த மாதிரி பணிவு இந்தியாவில் வீதிக்கு வீதி உண்டு சார்' — என்பது போன்ற பாவனை அது.

இறுதியில் வீதிக்கு வெளிச்சம் வந்தது. சுதந்திரம் வருவதற்கு முன்னால் தார்ச்சாலை என்னும் கருப்பு உருக்கு உடம்பைத் தெருவில் கொப்புளகொப்புளமாய்ப் பெற்ற பள்ளங்கள். சில இடங்கள் பாதாளங்கள்! அதில் வெளிச்ச ராத்திரியிலும் விழுந்து குலுங்கும் சைக்கிள்கள். வாகனங்கள்.

எதையும் சட்டை செய்யாது ஒருத்தன் தெரு விளக்குக்குக் கீழே போய் வெளிச்சத்தில் பாடப் புத்தகத்தை விரித்துக் கொண்டு நின்றான்.

''படிக்கிறியா...? படி! படி!'' — மகா வந்து கறுவி விட்டுப் போனான்.

இதற்குள் தேவகி சந்தித்திருந்த இருட்டுச் சம்பவத்திற்கு கை கால், இறக்கை எல்லாமே முளைத்து விட்டிருந்தன.

''தேவகியை எவனோ கெடுக்கப் பார்த்தானும்ல...''

''பார்த்தானும், என்ன பார்த்தானும். கெடுத்தே புட்டான்! இதெல்லாம் வெளிப் படையாச் சொல்லுவாங்களா?''

''கரு உண்டாகி நின்னு வீதியையே கலக்கப் போறா பாரு...''

''பாவம்டி அவ... என்ன பாவம் பண்ணுனோ...?''

''என்னடி பாவம்? ராத்திரியில இவளை ஆருடி தெருவில நடக்கச் சொன்னது?''

''அதானே... ராத்திரியிலே வயசுப் பொண்ணு தெருவுல நடக்கலாமா என்ன? அது எவ்வளவு பெரிய கொலைபாவம்!''

—வரிவிடாமல் காய்ச்சலினூடே அதைக் கேட்ட தேவகி குமைந்து நடுங்கினாள். உடம்பின் ஆரோக்கிய செல்களை ஒவ்வொருத்தியின் பேச்சும் கொத்திக் குதறின.

மஞ்சளில் மின்னிய தேவகியின் மங்கல முகத்தின் கிட்டிப் போனவாயைப் பிளந்து வீதியே வாய்க்கரிசி போட்டது. தனம்மாள் தலையிலடித்துக் கொண்டாள்.

''இத்தனைக்கும் காரணம் யாரு? அந்த ரவுடிப்பய. யாராச்சும் அவனை இத்தனைக்குப் பிறகும் போய் ஏதாச்சும் கேட்டீங்களா?''

—ஓங்கலாகவே சுடுகாடு என்றும் பாராமல் வெடித்தாள்.

''அவன் மட்டுமில்ல! நாம்பளும்தான்! ஒண்ணுக்கு ரெண்டாப் பேசி அந்தப் பொண்ணை மலைக்க வைச்சே கொன்னுப்பிட்டோம். நல்லதுக்கு நம்ம கற்பனை பயன் படுறதே கிடையாது. இந்த மாதிரி ஊர் விவகாரத்துக்குத்தான் பயன் படுது...''

பாட்டனுக்கு வரி!

பாகிஸ்தான் 'பாட்டன்' டாங்கிகளை நம் இந்தியத் துருப்புக்கள் மிகவும் சுலபமாக — எளிதாகப் பிடித்துக் கைப்பற்றி விட்டார்கள். ஆனால் அவற்றை இந்தியாவுக்குள் கொண்டு வருவதுதான் ராணுவத்தினருக்குப் பெரும்பாடாகி விட்டது. ஏன் தெரியுமா? வெளிநாட்டுப் பொருள்களான இந்த டாங்கிகளின் மீது சுங்கவரி கட்டியாக வேண்டுமென்று மத்திய சுங்க வரி இலாகா வற்புறுத்தியதுதான் காரணம்! —பி. பாலமுருகன்.



—படு சாதாரணமாய் ஒருவர் ஒரு நிஜத்தை ஒப்புக் கொண்டாரேயன்றி அதற்கான வருத்தம், பயம், மார்க்கம், எதுவும் அவர் பேச்சில் இல்லே.

வெற்றிலேக் கொடிக்காலுக்கு அப்பால் கொஞ்சம் கறுப்பாகச் சாக்கடை நீர்கலந்த திருமணி ஓடிக் கொண்டிருந்தாள். எல்லோரும் அமுங்கி எழுந்தனர்.

''இது நம்ம மண்வாசனேண்ணே. எங்கேயும் அடுத்தவங்க விவகாரத்துலே மூக்கை நுழைக்கறதும் புரளி பேசறதும் நம்ம இரத்தக் கலப்பு...''

என்ன பேசி என்ன பயன்: தேவகி திரும்பவா போகிறாள்?

அன்றைக்கு ராத்திரி 'மகா' கொஞ்சம் அமைதியாகவே வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தான். தனம் தாங்க முடியாமல் போய் வெடித்தாள்.

''அடேய், நீ உருப்படுவியா? உன்னுலே ஒரு பொண்ணு செத்தே போயிட்டாடா... இன்னுமா புத்தி வரலே உனக்கு.''

''கத்தாதே தனம். அப்புறம் அவ கதி உனக்கும்தான்...''

''நீதான் இருட்டுப் பிடிச்ச பயன்னு வீதியையும் இருட்டாக்கி எல்லோரையும் இருட்டுல தள்ளி... இந்த இருட்டுதாண்டா ஒனக்கு எமன்.''

—இறுதி வரியில் தூர்க்கையின் சீற்றம் தனத்திடம் தெரிந்தது.

''எனக்கு சோறு போடறதே இருட்டு தான். வெளிச்சம் இல்லே, போய் வேலேயைப் பாரு. தைரியமிருந்தா போலீசுக்குப் போய் புகார் கொடு. மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்.''

—அவள் வாசற்படியில் அப்படியேஒடுங்கி உட்கார்ந்தாள்.

''ஏன் தனம் அவன் கிட்ட வாய்க் கொடுத்து வம்பு வளக்கறே. கம்முன்னு இரு. அவன் முரடன்!''

—பக்கத்து வீட்டிலிருந்து மேற்படியாகத் தான் உதவி வந்தது. கொஞ்சம் நிசப்தம்.

''அம்மா தாயே, பிச்சை போடு தாயே.'' —ஊடே நுழைந்தான் தினம் வரும் இராப் பிச்சைக்காரன்.

''போய்யா அப்பாலே. இருக்கறவங்களுக்கே நிம்மதியைக் காணும். உனக்குப் பிச்சை ஒரு கேடா...''

—தனம் அவனிடமும் வெடித்தாள். வழக்கமாக யார் விரட்டினுலும் தேவகி ஒருகவளம் சோறு அவனுக்கு போடத் தவறியதில்லே. அவனுக்கு அவள் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் மாதிரி.

தேவகியின் வீட்டு வாசலில் நம்பிக்கையோடும் பசியோடும் போய் நின்றான்.

''உனக்குச் சோறு போட்ற பொண்ணு செத்துப் பூட்டாய்யா... செத்த ஊட்டு வாசல்ல நின்னு பிச்சை கேக்கறியே. போய்யா, போய்யா.''

—தனத்தின் பேச்சில் அவன் கொஞ்சம் தடுமாறினான்.

''நல்லாத்தானே இருந்திச்சு... ரெண்டு நாள் முந்தி கூட காய்ச்சல்லேயும் சோறு போட்டுச்சே.''



பிரயாணி: என்ன ஸ்டேஷன்மாஸ்டர் சார், ஒரு ரயிலும் சரியான நேரத்துக்கு வருவதில்லே. எதற்குத் தண்டத்துக்கு 'அட்டவணை'யைச் சுவரில்மாட்டி இருக்கிறீர்கள்?

ரயில் அதிகாரி: அது இல்லே என்ருல் ரயில் தாமதமாக வருவதை எப்படி அறிவது?

—நா. பாலன்

''உனக்கு நடந்த புராணம் தெரியாதா? அதைச் சொல்லி அழுவக் கூட சக்தி எங்களுக்கு இல்லே. போ, போ...''

—இருட்டில் யார் பேசுகிறார்கள் என்பதே அவனுக்குத் தெரியவில்லே. நடுநடுவே குறுக்கே புகுந்து புகுந்து செல்லும் ஆட்டோக்கள்! விளக்குக் கம்பத்தின் கீழ் நடக்கும் நித்ய வியாபாரங்கள்...

''ஆத்தா தனம், இந்த பிச்சையைமதிச்சு என்ன நடந்துச்சுன்னு சொல்லேன்.''

—கெஞ்சும் குரலில் அந்தப் பிச்சைக்காரன். அந்தக் கெஞ்சல் தனத்தைக்கொஞ்சம் பிசைந்தது. தனக்கும் ஒரு பாடுசொல்லி அழுதால் தேவலே போல் தோன்றியது.

ஆதியோடு அந்தம் ஒப்பாரி ரகத்தில் நடந்ததைச் சொன்னுள். 'மகா'வின் காதுகளிலும் எல்லாம் விழத்தான் செய்தது.

''ஏ, பிச்சைக்காரா... ஒழுங்கா ஓடிப்போ. கண்டவ ஒளற்றதை உட்கார்ந்து கேக்கறியா? பீஸ் பீஸாயிடுவே...'' — கத்தினுன் மகா.

பிச்சைக்காரன் விழிசளே நீர் கோத்து விட்டிருந்தது.

விடிந்து விட்டது.

ஆங்காரத்தோடு உதித்த சூரியனின் வெளிச்சத்தில் விளக்குக் கம்பத்தின் கீழே கத்தி பாய்ந்த நிலேயில் கிடந்தான் மகா!

அவன் சவத்தைச் சுற்றிச் சுற்றி வந்து ஊளேயிட்டன வீதி நாய்கள். வாசல் தெளித்துக் கோலம் போட வந்தபெண்டுகளே ஒரு மகிழ்ச்சி அதிர்ச்சி வந்து தாக்கியது.

தனம் உதித்த சூரியனே உற்சாகத்தோடு பார்த்தாள்.

''நெசமாலுமே விடிஞ்சிடிச்சு...'' — சொன்னுள்!

பிச்சைக்காரன் அப்புறம் அந்தத் தெருப் பக்கமே வரவில்லே.



பெண் கனல்

அத்தியாயம் 6

உடல் நலிந்து படுத்த படுக்கையாயிருந்த பொன்னுச்சாமி அண்ணனைச் சந்தித்துத் திருமலை தாங்கள் நடத்த இருந்த அந்தப் போராட்ட சம்பந்தமாக யோசனை கேட்ட போது அவர் அதற்கு அவ்வளவு உற்சாகமாக வரவேற்று மறுமொழி கூறவில்லை.

''தம்பி! எதுக்கும் கொஞ்சம் நிதானமாப் போங்க. 'எதையும் நம்பாதே, நம்பாதே'ன்னு சொல்லிச் சொல்லி ஜனங்க நம்மையே நம்பாமப் போயிட்டாங்க. அடாவடித்தனமா இந்த மாதிரி எல்லாம் போராட்டம் நடத்தினா இயக்கத்தோட பேரு கெட்டுப் போகும். அவசரப்படாதீங்க. கொஞ்சம் பொறுமையா இருங்க''.

அங்கே எழிலிருப்பு ஊரில் உள்பட்டணத்துக்கும், வெளிப்பட்டணத்துக்கும நடுவே தாமரைக் குளத்தின் கரையில் ஒரு பழங்காலத்து அரசமரமும், அதனடியில் பிள்ளையார், நாகர், சிலைகளும் இருந்தன. திருமணமான பெண்களில் மக்கட்பேறு இல்லாதவர்கள் வெள்ளிக்கிழமைகளில் அந்த அரசமரத்தைச் சுற்றி வந்தார்கள். நேர்ந்து கொண்டார்கள். மரத்தில் சிறுசிறு தொட்டில்களோடு குழந்தைப் பொம்மைகளைக் கட்டித் தொங்க விட்டார்கள். இந்த மூடப் பழக்க வழக்கங்களை எதிர்த்து அரசமரத்தடியில் மறியல் செய்ய வேண்டும் என்றான் திருமலை. அவனை ஒத்த சில இயக்க இளைஞர்களும் அதை வரவேற்றனர்.

பொன்னுச்சாமிக்கு அவனுடைய இந்தத் திட்டம் பிடிக்கவில்லை. படுத்த படுக்கையான பின் அவருடையபல பிடிவாதங்களில் தளர்ச்சி



வந்திருந்தது. அவர் உடல்நலம் தேறி எழுந்திருக்க வேண்டுமென்று அவருடைய மனைவி வெட்டுடையார் கோவிலுக்கு இரகசியமாகப் போய் வந்தாள் என்பதைத் திருமலை கேள்விப்பட்டிருந்தான். அடுத்தடுத்த இரண்டு 'அட்டாக்'குகளால் தளர்ந்து படுத்தபின் அண்ணன் பல விஷயங்களில் மென்மையாகி மாறியிருப்பது திருமலைக்குத் தெரிந்தது. பலவற்றில் நிதானமாகியிருந்தார். வீணாக மனிதர்களை விரோதித்துக் கொள்ளக் கூடாது என்கிற எண்ணம் அவருக்கு இப்போது வந்திருப்பது புரிந்தது. திருமலை எவ்வளவோ மன்றாடியும் பொன்னுச்சாமி அண்ணன் அந்தப் போராட்டத்திற்குச் சம்மதிக்கவில்லை.

''பொம்பளைங்க குளிச்சிப்போட்டு ஈரத் துணியோட அரசமரத்தைச் சுத்தி வர்றப்ப— தாம தடித்தடியா ஆம்பிளைங்கபோயி நின்னுக்கிட்டு மறியல், அது இதுன்னு வழிமறிச்சா நம்ம பேர்தான் கெட்டுப் போகும். நமக்கு அவநம்பிக்கைப்பட எத்தினி சுதந்திரமும், உரிமையும் இருக்குதோ, அத்தினி சுதந்திரமும் உரிமையும் அவங்களுக்கு நம்பிக்கைப் படறதிலேயும் இருக்கு. மூட நம்பிக்கையை எதிர்த்துப் பிரசாரம் செய்யலாமே ஒழிய நேரடி நடவடிக்கையிலே எறங்கிடப் படாது.''—

சரோட்டிலிருந்து ஐயா எப்போது பொதுக் கூட்டத்துக்கு வந்தாலும் கூட்ட மேடையில் ஐயாவின் காலடியில் அமர்கிற அளவு ஈடுபாடுள்ள அண்ணனா இப்படிப் பேசுவது என்று வியந்தான் திருமலை. ஸ்ரீராமர் பட்டாபிஷேகப் படத்தில் சிறிய திருவடியாகிய அநுமன் ராமபிரானின் காலடியில் பவ்யமாக அமர்ந்திருப்பதுபோல்தான் ஐயா பேசும் கூட்டங்களில் அவர் காலடியில் அமர்ந்திருப்பார் பொன்னுசாமி. வயதும், தளர்ச்சியும், விரக்தியும் அவரைக் கூட இப்படி மாற்றியிருப்பது தெரிந்தது இன்று!

அப்போது அவர் சொன்னபடி செய்யாமல் அரச மரத்தடியில் மறியலில் ஈடுபடுவது என்று திருமலையும் மற்ற இளைஞர்களும் தாங்களாகவே முடிவு செய்தனர். இளங்கன்று பயமறியாது என்பது போல் ஏதாவது ஒரு போராட்டத்தை நடத்திப் பேர் வாங்கிவிட வேண்டும் என்று மட்டுமே துறுதுறுப்பாயிருந்தார்கள் அவர்கள்.

ஒரு நல்ல ஆடி வெள்ளிக்கிழமையன்று குளித்து விட்டு ஈர உடையோடு அரசமரத்தைச் சுற்றிக்கொண்டிருந்த இளம்பெண்களை வழி மறித்தாற் போல் அணுகி, ''அரசமரத்தைச் சுற்றுவதை விட்டுவிட்டு, ஆண் பிள்ளையைச் சுற்றினாலும் பயனுண்டு'' — என்றும், ''அரசமரம் குழந்தையைக் கொடுக்காது — அதைச் சுற்றுவது அறிவுடைமை ஆகாது'' —என்றெல்லாம் கோஷம் போட்டார்கள். இதைக் கண்டு பெண்கள் பயந்து சிதறி ஓட விஷயம், போலீஸ் வரை போய்த் தகராறு ஆகியது. ஈவ் டீஸிங், அநுமதி பெறாமல் மறியல் செய்தது ஆகிய குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி திருமலை முதலிய இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். மறிக்கப்பட்ட பெண்களில் ஒருத்தியின் கணவன், ஆத்திரத்தோடு, ''ஏன்யா! நீங்கள்ளாம் அக்கா தங்கச்சிங்களோட பிறந்தவங்கதானா? உங்க அக்காவோ, தங்கையோ, சம்சாரமோ தெருவிலே இப்பிடி எவனாலேயாவது வழிமறிக்கப்பட்டால் எப்பிடி இருக்கும்?'' — என்று திருமலை வகையறாவைப் பார்த்துக் கூப்பாடு போட்டான்.

பொன்னுச்சாமி அண்ணனைப் போன்றவர்கள் ஓரளவு கௌரவத்தோடும், பண்பாட்டோடும் வளர்த்திருந்த இயக்கம் இந்த அரசமர மறியல் போராட்டத்தால் கெட்ட பெயரைச் சம்பாதிக்க நேர்ந்து விட்டது. ஊர் நடுவிலும், விவரந்தெரிந்தவர்களிடமும் இப்படித் தலைக்குனிவை ஏற்படுத்தியிருந்தாலும், இயக்க இளைஞர்களிடையே பொன்னுச்சாமி அண்ணனை விடத் திருமலை அண்ணன் தான் மிகவும் தீவிரமான கொள்கைப் பிடிப்புள்ள ஆள் என்பதுபோல் ஒரு பெயரை இந்தப் போராட்டம் ஏற்படுத்தியிருந்தது. தொண்டர்கள் தன்னிடமே இப்படிச் சொல்லித் தன்னைப் புகழ்ந்த போது திருமலைக்கு முதலில் அது பிடிக்கவில்லை என்றாலும் அவர்களை மறுக்கவும் கண்டிக்கவும் தோன்றவில்லை. பொது வாழ்வில் தான் மேலே ஏறி வரப் பயன்பட்ட விலைமதிப்பற்ற ஏணியைத் தன் கால்களாலேயே உதைக்கிறோமோ என்று கூடப் பயமாயிருந்தது. அதேசமயம் எல்லா அரசியல்வாதிகளுக்கும் கட்சியில் ஒரு பழைய பெரிய ஆள் தளர்ந்து விழும் போது தான் இனி அந்த இடத்தைப் பிடிக்கலாம் என்ற ஒரே ஆசையில் அந்தப் பழைய ஆளின் வீழ்ச்சியைப் பற்றித் தயங்கி இரங்கவோ, வருந்தவோ கூட நேரமில்லாத அத்தனை அவசரம் அந்த இடத்தைத் தான் உடனே கைப்பற்றுவதில் ஏற்படுவதைப் போல் திருமலைக்கும் இப்போது ஏற்பட்டிருந்தது.

''என்னதான் பெரியவராயிருந்தாலும் இப்ப உங்க தீவிரம் அண்ணனுக்கு இல்லீங்க... எதுக்கெடுத்தாலும் நிதானம், நிதானம்னு பயந்து சாகிறாருங்க'' — என்று காரியம் ஆக வேண்டாதவரைத் தாழ்த்திக் காரியம் ஆக வேண்டியவரை உயர்த்தும் அடிவருடிகளின் சகஜமான முகஸ்துதி திருமலையையும் ஈர்த்துக் கவர்ந்ததில் வியப்பு ஏதும் இல்லை.

நா·பார்த்தசாரதி

கண்டது கண்டபடி

''மூளை வேண்டாம்''

பஸ்ஸில் கேட்டது. (சிறிது நாகரீகமாக்கி எழுதியிருக்கிறேன்.): கவர்ன்மெண்ட்லே நாலாயிரம், ஐயாயிரம்னு சம்பளம் வாங்கறாங்களே கொஞ்சமாவது மூளை இருக்க வேண்டாமா? எப்படி ஐயா இரண்டு ரூபாய் நாணயத்தை பழைய ஒரு ரூபாய் நாணயத்தின் அளவிலேயே போடலாம்? கொஞ்சம் யோசிக்க வேண்டாம், 'எவ்வளவு பேர் ஏமாந்து போவார்கள்' என்று!


ஐடியா

செல்வி ஜெயலலிதா கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சியை சமீபத்தில் வீடியோவில் பார்த்தேன். அப்போது ஒரு சுவையான விஷயம் கண்ணில் பட்டது. மலர்மாலை போடப்பட்டதும் அதைக் கழற்றிப் பின்னால் நிற்கும் தன் உதவியாளரிடம் கொடுக்கிறார், ஜெயலலிதா. அவர் என்ன செய்கிறார் தெரியுமா? வேகமாக அதை உலுக்குகிறார். அதன் காரணமாகப் பூ உதிர்ந்து விட்டத் தட்ட நாராக ஆகிவிடுகிறது. ஏன் இப்படிச் செய்கிறார்? ஒரு தரம் போட்ட மாலை மறுபடியும் வராதே!

புறநகரில் புதுநகர்

சென்னைக்கு 'அருகில்' ஸ்டேஷனுக்கு 'மிக அருகில்' தோன்றியுள்ள பல நகர்களுக்குத் தான் எத்தனை எத்தனை பெயர்கள். இப்போது ஒரு புதிய நகரை ஒரு ரியல் எஸ்டேட் காரர் உருவாக்கி இருக்கிறார். பெயர்: ராகேஷ் சர்மா நகர்!

- கடுகு



கைதானதை எதிர்த்து வழக்கு நடத்த தங்களை ஜாமீனில் வெளியே கொண்டுவர எதற்கும் பொன்னுச்சாமி அண்ணன் ஏற்பாடு செய்யாதது வேறு எரிச்சலை வளர்த்தது. கடைசியில் அபராதமும் கட்டி நாலு மாதக் காலம் சிறைவாசமும் அனுபவித்து விட்டு வெளியே வருகிற போதாவது தாம் வர முடியவில்லை என்றாலும், வேறு ஆட்களை விட்டு மாலை போட்டு வரவேற்க அண்ணன் ஏற்பாடு செய்வாரென்று எதிர்பார்த்து அவர்கள் ஏமாந்தார்கள். பிடித்த காரியமோ, பிடிக்காத காரியமோ, வழியனுப்புவது, வரவேற்பது, சிறை சென்றால் வெளியே வரும்போது கொண்டாடுவது இதெல்லாம் இயக்க நடைமுறைகள். ஆனால் இந்த முறை அண்ணன் அந்த நடைமுறையைக் கூடப் பொருட்படுத்தவில்லை. அவர்களை அறவே புறக்கணித்து விட்டார்.

தங்கள் சிறைவாசம் முடிந்து மீண்டதும் திருமலையும், மற்றவர்களும் அண்ணனைப் போய்ப் பார்த்து அவரது உடல்நிலையைப் பற்றிக் கூடப் பொருட்படுத்தாமல் இதை எல்லாம் விசாரித்த போதும் கூட, ''இந்தா இரு! நான் முதல்லியே இந்த அரசமர மறியல் போராட்டம் கூடாதுன்னேன். யாராயிருந்தாலும் எந்தச் சூழ்நிலையிலும் நம்ம சமூகத்திலே திருமணமான பெண்கள் மரியாதைக்குரியவர்கள்! அவங்க முன்னுடி போயி, 'அரச மரத்தை நம்பாதே! ஆம்பளையை நம்பு'–ன்னு வல்கரா பேசிக்கிட்டு நீங்க நின்னது சரியில்லே. அதான் நான் உங்களுக்காக வழக்காடவோ, விடுவிக்கவோ, வரவேற்கவோ, எந்த ஸ்டெப்பும் எடுக்கலே'' – என்று நிதானமாகவும், கறாராகவும் பதில் சொல்லிவிட்டார் பொன்னுச்சாமி அண்ணன்.

''வரவர உங்க போக்கு நல்லா இல்லே அண்ணே! அண்ணி வெட்டுடையார் கோயிலுக்குக் கூட இரகசியமாப் போய் வந்தாங்கன்னு கேள்விப்பட்டோம்''–

''இந்த இயக்கத்திலே நான் சேர்ந்த நாளிலிருந்து என் மனைவி என் கொள்கைகளை ஒப்பவில்லை என்பதும், அப்படி ஒப்பாமலிருக்க நான் அவளுக்குச் சுதந்திரமளித்திருப்பதும் ஊரறிந்த உண்மையாச்சே தம்பி!''

''உள்ளூர் அநுமாரையும், பெருமாளையும் விட்டுப் போட்டு அண்ணி வெட்டுடையார் கோயிலைத் தேடிப் போனது மத்தவங்களுக்குத் தெரியக் கூடாதுன்னுதானே?''

''அப்பிடி நீயாக் கற்பனைப் பண்ணிக்கிட வேண்டியதுதான். அது அவ பிறந்த வீட்டாருக்குக் குலதெய்வம்னு அவபோயிட்டு வந்திருக்கா. பெண்களுக்கு முழு சுதந்திரம் தரணும், அவங்களைத் தொழுவத்து மாடுங்க மாதிரி அடிமைப்படுத்தப் படாதுங்கிறதுதான் ஐயாவோட கொள்கை. அதை நான் அப்பிடியே கடைப்பிடிக்கிறேன்.''

''எது எப்படியோ, மத்தவங்க காண அண்ணன் எங்களை விட்டுக் கொடுத்து. ரொம்ப அவமானப்படுத்திட்டீங்க... ஜெயில்லேருந்து வெளியே வந்தப்பக் கூட வாங்கன்னு கூப்பிட நாதியில்லாம வெளியே வந்தோம் நாங்க...''



தேன் சிட்டுகள்

மேற்படி காட்சி இடம் பெற்றிருப்பது தேன் சிட்டுகள் படத்தில்.

படத்தைப் பற்றிக் கேட்பவர்களுக்கு ஒரு வார்த்தை:

இந்த 'ஸ்டில்'லைப் பார்ப்பதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.

-ஜெயமன்மதன்

''வரவேற்கிற மாதிரிக் காரியத்தைப் பண்ணிட்டு நீங்க ஜெயிலுக்குப் போயிருந்திங்கன்னு டாக்டர் அட்லைவனைக் கூடப் பொருட்படுத்தாம நானே எந்திரிச்சுக்கையிலே மாலையோடப் பெரிய கூட்டத்தைக் கூட்டிக்கிட்டு வரவேற்க வந்திருப்பேன்.''

''வரவேற்க முடியாதபடி அப்பிடி என்ன மோசமான காரியத்தை நாங்கப் பண்ணிப்பிட்டோம் அண்ணே?''

''ஊரான் வீட்டுப் பொம்பிளைகளை நடுத் தெருவிலே வழிமறிக்கிறதை விடக் கேவலமான காரியம் வேறொண்ணு இருக்க முடியாது.''

''இதிலே நான் அண்ணனோடக் கருத்து வேறுபடறேன்.''—

இதன் பிறகு அவனுக்கும், பொன்னுச்சாமி அண்ணனுக்கும் பெரிய பிளவு ஏற்பட்டது. அவர் பொது வாழ்விலிருந்து அறவே ஒதுங்கி ஒடுங்கிவிட்டார். சண்பகத்திடம் இந்தக் கருத்து வேறுபாட்டைக் கூறிய போது கூட அவள் பொன்னுச்சாமி அண்ணன் சொல்லியதுதான் சரி என்றாள். ''அரசமரத்தைச் சுத்தறது அறிவீனம்னு நீங்க கூட்டம் போட்டுப்பேசலாம்! அதை விரும்பறவங்க வந்து கேட்டுத் திருந்தலாம். திருந்தாயச் சும்மா கேட்டுச் சிரிச்சுட்டும் போகலாம். ஆனா அரசமரத்தைச் சுத்திட்டிருக்கிற பொம்பளைங்களையே நேரே போய் வழிமறிக்கிறதுங்கறது அத்து மீறல்!'' — என்று சண்பகமே அவனை எதிர்த்து வாதிட்டாள். திருமலை அவள் வாதத்தை ஏற்கவில்லை.

எப்படியோ இயக்கம் முழுக்க முழுக்க இப்போது அவனது தலைமையின் கீழ் அவனுடைய முழுக்கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டது. அவன் செய்ததையும், செய்வதையும் முழுமூச்சாகப் புகழ்கிறவர்களும், வியக்கிறவர்களுமே அவனைச் சூழ இருந்ததால், எது நல்லது, எது தவறானது' என்று ஒன்றுமே புரியவில்லை. புகழப்படுவது எல்லாம் சாதனை என்று எண்ணிக்கொள்ளும் மனப்பான்மைக்கு அவன் வந்திருந்தான். அவனைச் சுற்றிச் சதா வானளாவப் புகழ்ந்து நிற்கும் ஒரு கூட்டம் அலைமோதியது. அந்த வருடக் கடைசியில் பொன்னுச்சாமி அண்ணன் காலமானார். மரணத்திற்குப் பிறகு விரோதங்கள் அர்த்தமற்றுப் போகின்றன. திருமலை ஒரு பெரிய இரங்கல் கூட்டம் போட்டுப் பொன்னுச்சாமி அண்ணனை வானளாவப் புகழ்ந்து தன்னுடைய தலைமையை உறுதிப்படுத்திக் கொண்டான்.

மறவர் சாவடித் தெருவில் ஒரு படிப்பகம் திறந்து அதற்குப் 'பொன்னுச்சாமி அண்ணன் நினைவுப் படிப்பகம்' என்று பெயரும் சூட்டினான். பிள்ளையார் சிலை உடைப்பு, விதவை மறுமணம், என்று பலப்பல காரியங்களை முன்னின்று நடத்தித் தன்னைப் பிரமுகனாக வளர்த்துக் கொள்ளும் காரியத்தைத் திருமலை தொடர்ந்து செய்தான்.

இப்போது பொன்னுச்சாமி அண்ணன் இல்லாத காரணத்தால் அவனைத் தனிமைப் படுத்தித் தொலைத்து விடலாம் என்று உள்பட்டணத்தார் மறுபடியும் சில விஷமங்களை ஆரம்பித்திருந்தார்கள். ஆனால், முன்னைவிட இயக்க ரீதியாக அவனுடைய பலம் வளர்ந்திருப்பதை அவர்கள் சரியாகக் கணிப்பதற்குத் தவறியிருந்தார்கள் என்றே கூறவேண்டும். சில இடையூறுகளைத்தான் அவனுக்கு அவர்கள் செய்ய முடிந்ததே ஒழிய, அவனை அழிக்க முடியவில்லை. சரியாகவோ, தவறாகவோ, அவன் பெரிதாக வளர்ந்திருந்தான். அழித்து விட முடியாத உயரத்துக்கு, தகர்த்துவிட முடியாத ஆழத்துக்கு, நசுக்கி விடமுடியாத கனத்துக்கு அவனுடைய அப்போதைய வளர்ச்சிகள் இருந்தன.

அவனது வாழ்வையும் வளர்ச்சியையும் சகித்து ஏற்றுக் கொண்டு அவனுக்குச் சில இடையூறுகளை மட்டுமே அவர்களால் அப்போது செய்து விட முடிந்தது. ஊர் ஏற்கெனவே அவர்களை எல்லாம் மதித்து ஒப்புக் கொண்டிருந்தது. இப்போது அவனை மதித்து ஒப்புக் கொள்ளவும் முடியாமல், தவிர்க்கவும் முடியாமல் திணறிக் கொண்டிருந்தது.


(தொடரும்)



ஊஞ்சல் கவிதைகள்

துறவி, சென்னை-12

கல்யாணங்கள்
கரன்சி நோட்டுகளால்
நிச்சயிக்கப்படாமல்
காதலால்
தீர்மானிக்கும் போதுதான்
வெப்பப் பெருமூச்சுக்களில்
வெந்து கொண்டிருக்கும்
எங்களின்
வாலிபம் விடுதலையாகி
ஊஞ்சல் உள்ளத்திற்கு
ஓய்வு கிடைக்குமோ?



குமாரி. ஆண்டாள் பிரியதர்சினி, சென்னை-105

ஊஞ்சலும் ஆடவர் உள்ளமும் ஒன்றே!
கொஞ்சிடும்போது கீழே இறங்கும்!
குளிர்ந்திடும் போது மேலே ஏறும்!
நெஞ்சமோ அவர்க்கு நிலையானதல்ல!
அஞ்சினால் அடக்குவர்! அடக்கினால்
அடங்குவர்!
வஞ்சியின் மணநாள் இதனை விளக்கவே
வைத்தனரோ ஓர் ஊஞ்சல் நிகழ்ச்சி....!
ஏற்றம் இறக்கம் இணைந்ததே வாழ்க்கை!

சேர்வை மணி, கல்பாக்கம்

''ஊஞ்சலிலே நீயிங்கே உன்உள்ளமது
சென்ற தெங்கே?
காஞ்சித் தலைவனந்தக் காளையவன்
கவர்ந்தனனோ!
வஞ்சித்தோ வஞ்சியுனை வைத்துள்ளே
அடைத்திட்டார்!
அஞ்சாதே ஆரணங்கே அன்பிற்கும்
அணையுண்டோ —உன்
கைபிடித்த சங்கிலிகள் என் கைவிலங்காய்
மாறிடினும் — காளையவன்
கைப்பிடிக்க வைத்திடுவேன் கலங்காதே
கண்மணியே — என்
தங்கை நீ தங்கத் தகடன்றோ, தைமாத
நிலவன்றோ!
கங்கையே கலைமகளே கற்பகமே நீ வாழி!''

திருமதி உமா லட்சுமணன், அருப்புக்கோட்டை

பெண்ணே!
ஊஞ்சலில் மலரும்
உன் கனவுகளுக்கு


வாசகர் பங்கு

முற்றுப்புள்ளி வைத்துவிடாதே!
ஏறும் விலைவாசியில் உன்
கற்பனைகளும் விற்பனையாகலாம்
அப்பொழுது
உன் வாழ்க்கையில்
மின்னஞ்சிறிய ஆசைகளையாவது
தலைண முறையில்
நிறைவேற்றிக் கொள்ளலாம்.

ஆர். பி. சாரதி, கேளம்பாக்கம்

மன ஊஞ்சலை மட்டும் ஆட்டி
மண ஊஞ்சலில் ஏறத் துணிவின்றி
வஞ்ச ஊஞ்சலை
ஏற்ற
மேலே
மேலே
அம்மா மடி ஊஞ்சலில் மறைபவரே
ஊஞ்சல் இறங்கும் வேகத்தில்
நொறுங்கப்போவது எம் நெஞ்சமட்டுமல்ல
ஒருநாள் உங்கள் தலைகளும் தான்!




பரவாயில்லீங்க!.. உங்க நாய் விளையாடுது!.. அம்மா.. வேஷ்டி கொஞ்சம் கிழிஞ்சுடுது!.. ஹா.. ஹா.. உங்க ஓட்டை எனக்கே போடணும்!
அம்மா விழுந்து கும்பிடச் சொன்னேன்!.. இவர் 'தடால், தடால்'னு விழுந்து கும்பிட்டா.. இப்படித்தான்!..
தேர்தல் சிரிப்புக் களம்
என்னங்க தெருவெல்லாம் இப்படி சோடா பாட்டில், சைக்கிள் செயின், கல், கத்தி, நெருப்பு பரப்பிக் கெடக்குது?
தேர்தல் பிரச்சாரத்திலே தெருவெல்லாம் கொள்கையைப் பரப்பி இருக்காங்க!
• அனுராதா, ஊர்வசி, சேகர், தவக்களை இவங்களை எல்லாம் 'புக்' பண்ணிட்டதா சொல்றீங்க!.. எப்ப புரொட்யூசர் ஆனீங்க?
• அட, நீ ஒண்ணு! அவங்க எல்லாம் என்னோட வந்து ஓட்டு கேக்கத்தான் 'புக்' பண்ணி இருக்கேன்!
உன்னைத் தான், கும்புட்டுக்கிறேன்டி, அப்புறம் ஒரு ஓட்டுலே தோத்தேன்னு ஆயிடக் கூடாது பாரு!

சொல் ஒன்று வேண்டும்

அனுராதா ரமணன்

19

உமாவுக்கு வலி எடுத்து விட்டது. முதல் நாள் இரவே ஆஸ்பத்திரிக்குக் கிளம்பத் தயாராகி விட்டாள் அவள்.

டாக்டர் சொல்லியிருந்த தேதிக்கு ஓரிரு நாள் முன்பே பிரசவம் ஆகிவிடும் போலத்தான் தோன்றுகிறது மீனாட்சிக்கு...

என்னதான் படித்த டாக்டர்கள் பலவிதப் பரிசோதனைகள் செய்து, இந்தத் தேதியில், இன்ன நேரத்தில்தான் பிரசவம் ஆகுமென்று சொன்னாலும்... சில சமயங்களில் படிக்காத, அனுபவசாலியான பெண்களின் கணிப்பே இந்த விஷயத்தில் வென்றுவிடுகிறதே...

'இந்தப் பெண்ணுக்கு எந்த நிமிஷமும் வலியெடுத்து விடலாம்...'

மீனாட்சி, மருமகளைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச்சு விடுகிறாள்.

'மகன் பிறக்கிற வேளையாவது தகப்பனுக்கு விடியாதா...'

அவள், ஊரிலுள்ள அத்தனை தெய்வங்களுக்கும் முறையிட்டுக் கொண்டு, மருமகளின் நெற்றியில் திருநீறிட்டு, பின்னலில் வேப்பங்கொழுந்தைச் செருகி, விஜி ஒரு பக்கமும் அவள் ஒரு பக்கமுமாய் — உமாவைத் தாங்கிப் பிடித்துக் காரில் ஏற்ற....

அது நேரம் வரையில், உமாவின் மெல்லிய ரகசிய விம்மலைக் கேட்கச் சகியாதவராய், ஹாலில் குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டிருந்த பரந்தாமன், இருந்தாற்போல இருந்து 'விருட்'டெனக் காரில் ஏறி அமர்கிறார்...

''வண்டியைக் கிளப்பு எத்திராஜ்....''

அவர் ஆணையிட, எத்திராஜ் வண்டியைக் கிளப்ப...

மீனாட்சிக்கு, கணவர் தங்களுடன் துணைக்கு வருவதில் ஏகப்பட்ட திருப்திதான். அந்தத் திருப்தி, அவளது முகத்திலேயே தெரிகிறது...

விஜிக்குத்தான் வெளியே காட்டிக் கொள்ள முடியாத அவஸ்தை...

'இவர் எதுக்காக, இப்ப கிளம்பறார்...'

தவித்துப் போகிறாள் அவள்.

பிரசவ சமயத்தில் ராஜா, உமாவின் பக்கத்தில் இருக்க முடியாவிட்டாலும், குறைந்த பட்சம் ஒரேயொரு முறை உமா அவனைப் பார்த்து விட்டாலும் போதும் என்பதற்காக இந்த விஜிதான் எத்தனை பாடு பட்டிருக்கிறாள்....

அன்று மார்க்கெட்டில் சந்தித்த பெண்ணைப் பின் தொடர்ந்து ஓடி... அவளைக் கையும் மெய்யுமாய் 'கப்'பென்றுப்பிடித்து.. ஒரேயடியாய் மிரண்டு போன சிறுமியை ஒரு விதமாய்ச் சமாதானப்படுத்தி....'

நினைத்துப் பார்க்கையிலேயே மிகவும் பிரமிப்பாக இருக்கும் விஜிக்கு... அதே சமயத்தில் பெருமையாகவும் இருக்கும்...

'நம்மால் இத்தனை திறமையாகக் கூட நடந்து கொள்ள முடியுமா...'

உண்மையிலேயே விஜி மிக அருமையாகத் தான், செயல்பட்டிருந்தாள்.

வளையல்காரச் சிறுமி, இவளை நிமிஷமாய் அடையாளம் கண்டு கொண்டு விட்டாள்.

வளைகாப்பு வீட்டில், ஒரு வார்த்தை கூடப் பேசாமல், தேன் சிட்டுப் போல வளைய வந்த விஜியை அத்தனை சுலபத்தில் மறந்து விட முடியுமா என்ன?...

மேலும் ராஜா, விஜியிடத்தில் ஒரு துண்டுக் காகிதத்தில் எதையோ குறித்துக் கொடுப்பதையும் அவள் பார்த்துக் கொண்டுதானே இருந்தாள்.

'இவள், ராஜாவுக்கு வேண்டியவள்...'

இப்படி ஒரு மனசு கூறினாலும், அத்தனை சுலபத்தில், விஜியிடம் எல்லாவற்றையும் ஒத்துக் கொள்ளத் தயாராக இல்லை அவள்..

விஜியின் சாடைப் பேச்சு எதுவுமே புரியாதது போல பாவனை செய்தாள். விஜி சிலேட்டுப் பலகையில் எழுதிக் காட்ட, தனக்கு எழுதப் படிக்கவே தெரியாது என்கிற மாதிரி சாதித்தாள்...

கடைசியில்...

விஜி, தன் பர்ஸிலிருந்த ராஜாவின்புகைப் படத்தை எடுத்துக் காட்டி, அவன் மனைவிக்கு இதுதான் பேறு காலம் என்பதை, மனசிலுள்ள தாபத்தையெல்லாம் விழிகளில் தேக்கி வைத்துச் சாடை காட்ட....

அந்தச் சிறுமி, கம்பீரமாய் விஜியை ஒரு பார்வை பார்த்துவிட்டு, தன் பின்னே வரும்படி சைகை காட்டி விட்டு, ''விறுவிறு'வென்று நடந்தாள்.

இரண்டு மூன்று சந்துகள் கடந்த பின் ஒரு தழைந்த ஓட்டு வீட்டின் முன் நின்றாள்.

'என் பின்னாடியே வா...'


விஜியைப் பார்த்துக் கையை அசைத்து விட்டு உள்ளே நட... விஜி, சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டே சிறுமியைப் பின் தொடர...

வெளிப் பார்வைக்கு, தழைந்த சிறிய வீடாகத் தோன்றினாலும், உள்ளே பல நுடித்தனங்கள் இருப்பது, வீட்டுக்குள்

நுழைந்தவுடனேயே புரிந்து போயிற்று அவனுக்கு...

எல்லாமே ஒரேயொரு அறை கொண்ட சின்னச் சின்னக் குடித்தனங்கள்... ஒரேயொரு அறை என்றாலும் மக்கள் தொகைக்குக் குறைச்சலில்லை...

நடைபாதைகளில் நண்டும் சிண்டுமாய்க் குழந்தைகள் புரண்டு விளையாடிக் கொண்டிருந்தன. வாசற்பகுதி குடித்தனக்காரி, தன் வீட்டுச் சாக்கடையில், மூன்றாவது வீட்டுக்காரியின் பிள்ளை அசிங்கம் சேர்ந்து இடப்பதற்காக இரைந்து கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தாள். இந்தப் பக்கம் ஒருத்தி, இவர்களின் சண்டையை ரசித்தபடி முட்டை விற்கும் பையனிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தாள். தன்



வீட்டு வாசலிலேயே ரசம் போன கண்ணாடியை வைத்துக் கொண்டு, முகத்தை மழித்துக் கொண்டிருந்த இளைஞன், புதுசாய் இளசாய் ஒரு பெண் தங்களைத் தாண்டிச் செல்வதைக் கண்டதும், உற்சாகம் பீறிட, 'பாவாடை தாவணியில் பார்த்த உருவமா?' — என்று கர்ண கடூரமாய் பாட்டுப் பாடினான். இத்தனைக்கும் நடுவில் ஒரு கிழவியை உட்கார வைத்து அவளது புருஷனை கிழவன் நரை முடியில் பேனைத் தேடிக் கொண்டிருந்தான்... இத்தனையையும் தாண்டிச் சென்றால் அத்தனை குடித்தனங்களுக்கும் பொதுவான கிணற்றடியில் நாற்பது வயசு மதிக்கத் தக்க மனிதனொருவன், தன் கருத்த உடம்பு முழுக்க சோப்பை குழைத்துப் பூசி இலவசமாய் லைப்பாய் சோப்புக்கு விளம்பரம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

நீள நெடுக, இவைகளைக் கடந்து சென்றால், புழக்கடைப் பக்கமாய் சின்னதாய் ஒரு அறை. அதையொட்டி புழக்கடைப் பக்கத்துச் சிறிய கதவு. அதைத் திறந்தால் அநேகமாய் பின் தெருவில் கொண்டு போய் விடும் என்றே தோன்றுகிறது விஜிக்கு...

சிறுமி, அந்த வீட்டுக்குள் நுழைந்த சற்று நேரத்துக்கெல்லாம், உள்ளிருந்து வளையல்கார மூதாட்டி வெளியே வந்தாள்.

''வாம்மா...''

முகம் நிறைந்த சிவப்பு. வாய் நிறையத் தாம்பூலச் சிரிப்பு.

விஜி, அந்த அம்மாளையே சற்று நேரம் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள்... 'சட்'டெனப் பார்வையைக் கண்ணீர் மறைத்தது...

'இவ என் தாய்க்கு சமமானவ... இவளாலேதான் இன்னிக்கு என் ராஜா, உயிரோட, சாப்பாட்டுக்குத் திண்டாடாம இருக்கார்...'

கிழவி சற்றும் எதிர்பாராத விதமாய், அவளது காலைத் தொட்டுக் கும்பிட்டாள் விஜி...

'அவர் இல்லையா...?'

விஜியின் சாடையைப் புரிந்துகொண்டும், மௌனமாய்ப் புன்னகைத்தாள் கிழவி.

''என்ன வேணும் சொல்லு...''

விஜி, 'மளமள'வென சிலேட்டில் தான் வந்த விஷயத்தை எழுதிக் காட்ட....

சிறுமி, அதைப் படித்து விட்டு, தன் பாட்டிக்கு விளக்கினாள்...

''ராஜா அண்ணனோட சம்சாரமில்லே... அவளுக்கு இதுதான் மாசமாம்... இன்னும் பத்து நாள்லே குழந்தை பொறந்துடும்னு சொல்றாங்க...''

''சரி... அதுக்கு நாம என்ன செய்யணுமாம்.... கேளு...''

''ஒண்ணும் பெரிய விஷயமில்லையாம்.... இதோ இந்த சிலேட்டுல இருக்கிற விலாசத்தை அண்ணன் கிட்டக் காமிக்கச்சொல்றாங்க... அவ்வளவுதான்... இந்த ஆஸ்பத்திரிலதான் அண்ணன் சம்சாரத்தைப் பிரசவத்துக்கு விடப் போறாங்களாம்... அண்ணனாலே முடிஞ்சா, அங்கே வந்து பார்க்கச் சொல்றாங்க...''

''சரி... அந்தச் சிலேட்டுப் பலகைய வாங்கி வச்சுக்க. அண்ணன் வந்தாக் கொடுக்கலாம்... கொஞ்சம் அந்தப் பெண்ணை உட்காரச் சொல்லு... நல்ல வெய்யில்லே வந்திருக்கு... ஒரு தம்ளர் மோர் தரேன்... வாங்கிக் குடிச்சிட்டுப் போகச் சொல்லு...''

கிழவி, அதே அறையின் தடுப்புச் சுவர் பக்கமாய் நகர, விஜி, அந்த அறையைச் சுற்றிக் கண்களைச் சுழல விட்டாள்....

சின்னதாய், சுத்தமாய் இருந்தது அறை... கதவு மறைவில் ஓர் ஆணியில் ஒரு பேண்ட்டும், சட்டையும் மாட்டப்பட்டிருந்தது....

அது... ராஜாவின் உடைகள்...

விஜி, தன் பக்கத்தில் நிற்கும் சிறுமியை லட்சியம் செய்யாது, கதவருகில் சென்று, அந்த உடைகளைத் தொட்டுப் பார்த்தாள்.

அது என்னவோ — ராஜாவையே ஸ்பரிசிப்பது போல ஓர் உணர்வு...

கிழவி வந்து, அவளது தோளைத் தொடும் வரையில் அங்கேயே ஸ்தம்பித்து நிற்கிறாள்.

மோரைக் குடித்து விட்டு, சிலேட்டை அந்தச் சிறுமியின் கையில் ஒப்படைத்து விட்டுக் கிளம்பியவள் — வந்த வேகத்திலேயே மறுபடியும் மார்க்கெட்டுக்கு வர...

அவள் விட்டுச் சென்ற இடத்திலேயே மலங்க மலங்க விழித்தபடி நிற்கிறாள் மீனாட்சி...

''இமெர்னு எங்கே போயிட்டே....''

அவளது பதற்றம் முகத்தில் தெரிந்தது..

விஜியோ சிரித்தபடி, அங்கே ஒரு கடை யில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த தேங்காயைச் சுட்டிக் காட்டுகிறாள்...

''இங்கே விலை அதிகம்... அடுத்த தெரு மண்டியிலே கொஞ்சம் விலை குறைச்சல்னு..''

மருமகளின் சாடை... மீனாட்சிக்குப் புரிந்தது.

''அப்பா... ஒரு நிமிஷம் பொறிக்கலங்கிப் போயிட்டேன். இனிமே அந்த மாதிரியெல்லாம் தனியாகப் போகாதே. எவனாவது இசகுப்பிசகா நடந்துடப் போறான்....''

அன்று எத்திராஜ் வண்டியை எடுத்து வராததில் விஜிக்குப் பல விதங்களில் சௌகரியம்...

ஆனால் இன்றோ—

இத்தனை தூரம் ஏற்பாடு செய்தும், மாமா நந்தி மாதிரி குறுக்கே வந்து விட்டாரே...

'ராஜா, இவரது கண்ணில் படாமல் எப்படித் தப்பிக்கப் போகிறார்...'

'ஐயோ, எங்கேயோ மறைந்து கிடக்கும் மனிதரை மெனக்கெட்டு, வரவழைத்து, பொறியில் சிக்க வைத்து விடுவோமோ...?'

அவள் தவித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில் எத்திராஜின் மனதுக்குள் எக்களிப்பு...

'இன்னும் கொஞ்ச நேரத்தில் ராஜா பிடிபடப் போகிறான்...'

அதே சமயத்தில், அடர்ந்த மீசையை முறுக்கி விட்டுக் கொண்டிருந்த பரந்தாமனின் நெஞ்சில் உஷ்ணமான பெருமூச்சு....

இந்தப் பெண் விஜி, தான் வளர்த்த குழந்தை... தனக்குத் தெரியாமல் என்னென்ன காரியங்களிலெல்லாம் ஈடுபட்டிருக்கிறாள்...

அன்று, காபியை நீட்டிய விஜியிடம் அவர் ராஜாவுக்கு மறைமுகமாய் உதவுபவர்களைத் தண்டிக்கத் தான் தயங்கப் போவதில்லை என்று சிலேட்டில் எழுதிய போது....

அவரது கூரிய பார்வை, அந்தசிலேட்டைக் கவனிக்கத் தவறவில்லையே...

''என்ன இது... சிலேட் புதுசாக இருக்கிறதே...''

விஜியின் சிலேட் உடைந்திருக்க நியாயமில்லை. தகர சிலேட் உடையுமோ....?'

பொறி போலச் சின்னதாய் ஒரு சந்தேகம்... ஆனால் அவர் அதைப் பொருட்படுத்தவில்லை...

அதற்குப் பின் நாலைந்து நாட்கள்கழித்து எத்திராஜ், அவரிடம் பவ்யமாய் ஒரு சிலேட்டை நீட்டியபோதோ...

புருவங்கள் முடிச்சிட அந்தச் சிலேட்டையும், அதிலுள்ள ஆஸ்பத்திரி விலாசத்தையுமே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்...

மனதுக்குள் ராஜாவைப் பிடிக்க பலத்த வலை பின்னியாகி விட்டது...

அதன் பலன்தான் இப்பொழுது மருமகளுடன் காரில்...

(தொடரும்)




''சட்டமன்றத்தில் சிங்கம் போல் கர்ஜிப்பேன் என்று சொன்னவர் பூனை போல் முனகுகிறீரே!''

''தேர்தல் கூட்டங்களில் பேசித் தொண்டை சட்டிக் கொண்டிருப்பதைக் கட்டிக் காட்டி நாய் போல் குரைக்காதீர்!''



''டெபாசிட் திரும்பக் கெடைச்சா உங்க மைக் பணம், கார் வாடகை, ஓட்டல் பணம், பிரஸ் பில் எல்லாம் கால்வாசிக் கொடுத்துடறேன்யா, நச்சரிக்காதீங்க!''




மாஸ்கோவைச்சேர்ந்த அலெக்சாண்டர் என்பவரின் கற்பனைத் திறத்தினால் உருவான ஓவியங்களில் சிறப்பான அம்சம் ஒன்றுண்டு. அவை ஒவ்வொன்றும் ஒற்றைக் கோட்டினால் மட்டுமே உருவானவை.

அதாரம்: மாஸ்கோ நியூஸ்

தகவல்: ப. மூர்த்தி.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ
இது க்ளாக் மற்றும் ரேடியோ இவற்றின் இணைப்பு மட்டுமல்ல...

கூடுதல் சிறப்புகள் பல கொண்டதாகும்.





படுக்கையறைக்கு ஒரு அழகுப்பொருள்

படுக்கையில் படுத்தவாறே இசையை அனுபவியுங்கள் (உங்களுக்கென்றே ஒரு தனி கச்சேரி!). இது தானே நிறுத்திக் கொண்டு, காலையில் தானே இயங்கி உங்களை எழுப்பும்.



வரவேற்பறையில் பல நிகழ்ச்சிகளை வழங்குவது

சக்திவாய்ந்த MW மற்றும் SW செட் ஆகிய இது பட்டனைத் தட்டிய மாத்திரத்தில் உலக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.



சமையலறையில் ஒரு உதவிப்பொருள்

பல்வேறு வேலைகளைச் செய்யும்போது சுவையான ஒலிஅமைப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறது. குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது போன்ற முக்கிய வேலைகளை "அலாரம்" மூலம் நினைவூட்டுகிறது.



நம்பகமான உதவியாளர்

அலுவலகம், தொழிற்சாலை, கடை, வியாபார நிறுவனம்—எங்கிருந்தாலும் சரி—உங்களை நேரந்தவறாது போதும் புகழ் செயல்படுத்த உதவி செய்து, திறமை வாய்ந்தவரென பெயரெடுத்துக் கொடுக்கிறது.



பரிசளிக்க உன்னதமான பொருள்

மனதிற்கு செல்வதைப் பரிசளிக்க சிறந்த வழி! நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்புகிறது. அதே சமயம் புத்திசாலித்தனமாக நேரத்தைத் திட்டமிட்டு செயல்பட உதவுகிறது.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ, சக்தி வாய்ந்த ஒரு MW/SW செட் மற்றும் கனகச்சிதமான க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக்கின் இணைப்பு மட்டுமல்ல...கூடுதல் அம்சங்கள் பல கொண்டதாகும். உதாரணமாக:

- கண்ணயர்ந்து விட்டாலோ தூங்கி விட்டாலோ அதைத் தானே நிறுத்திக் கொள்ள 'செட்' செய்து விடலாம் (கேட்கும் இசையே உங்களைத் தாலாட்டி விட்டாலும் கவலை இல்லை அல்லவா?)
- இசையுடன் இணைந்த அலாரம் உங்களைக் காலையில் எழுப்புகிறது. தொட்டால் போதும்—நீங்கள் மேலும் பத்து நிமிடங்கள் தூங்கலாம்.
- நாள் முழுதும், உங்கள் அலுவல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும், (குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, லஞ்ச் அல்லது மீட்டிங் நேரம் முதலியவை)
- ரேடியோ மற்றும் அலாரத்தை முன்கூட்டி 'செட்' செய்து செய்திகளையோ உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் ரேடியோவை மேலும் மேலும் உபயோகப்படுத்தும் போது நீங்கள் ஒப்புக்கொள்வது...அது பல சிறந்த அம்சங்கள் கொண்ட ஒரு எலெக்ட்ரானிக் அதிசயம் என்பதே. அழகு மற்றும் அறிவின் இணைப்பு.

பிலிப்ஸ்

வழங்குவோர் பிலிப்ஸ்.
50 ஆண்டுகளுக்கும் மேலாக
இந்தியாவின் இல்லங்களிலும்
ஒலிக்கும் நம்பகமான பெயர்

PHILIPS

மறுபக்கம்

ஸ்ரீரங்கம் ஸ்ரீநிவாசன்

அவள் விழித்துக் கொண்டுதான் இருந்தாள்.

ஒவ்வொரு குனிவிற்குப் பின்னும் ஒரு நிமிர்தல் இருக்கிறது என்று நம்புகிறவள் அவள். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் அவளுக்கு அமைந்தவன் அப்படி இல்லை. சின்னச் சின்ன இடையூறுகளுக்கும் சஞ்சலப் படுகிறவன். வாழ்வின் சகல முன்னேற்றங்களையும் வாய் வார்த்தைகளிலும், பகல் கனவுகளிலும் அடைந்து கொண்டிருந்தான்.

கணவனை வெளிப்படையாய் விமர்சிப்பது வேண்டுமானால் பாரத தர்மத்திற்கு விரோதமானதாய் இருக்கலாம். 'கோழை' என்று மதிப்பிடுவது மனத்தில் நிகழும் தடை செய்ய இயலாத நினைப்பாயிற்றே.

'கோழை' என்று முனகினாள் மாலதி. பக்கத்தில் படுத்திருந்த சுந்தரத்திற்கு அது கேட்டிருக்க முடியாது. உச்சக்கட்டத் தூக்கத்தில் இருந்தான். இடது பக்கம் ஒருக்களித்த நிலையில் சுவரைப்பார்த்தபடி படுத்திருந்தான். அடுத்த தலையணையில் மாலதி மேலே சுழலும் மின் விசிறியைப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

திடீரென விழிப்பு வந்தது. உடனே மனம் இயங்க ஆரம்பித்தது.

இரவு சாப்பிடும்போது இருவருக்குமிடையே நிகழ்ந்த உரையாடல் மனத்துக்குள் விட்டுவிட்டு எதிரொலித்தது. இருவேறுபட்ட துருவங்கள் வாழ்வில் ஒன்றாய் இணைந்த விதம் குறித்து ஆச்சர்யமும், அதன் உச்சமாய் வேதனை கலந்த பெருமூச்சும் விட்டாள்.



அவள்தான் பேச்சை ஆரம்பித்தாள்.

அவனுக்கு உணவு பரிமாறிய பிறகு எல்லாவற்றையும் எ தி ரே எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிட அமர்ந்தாள்.

அவனைப் பொறுத்த வரை அன்றையக் கடமை முடித்து விட்டது என்ற உணர்வோடு சாப்பிட்டவுடன் படுக்கைக்குப் போய் விட்டான்.

ஒன்பதரை மணிக்குக் கிளம்பி ஐந்தரைக்குத் திரும்புகிற அவனைப் பற்றி அவள் அதிகம் கவலைப்படுவதில்லை. நினைத்ததாகக் கூட இப்போது சொல்வதில்லை. மணமான புதிதில் 'பாவம்... உனக்குக் கூட கஷ்டம்' என்று சொல்லி — அனுசரணையுடன் கணவன் தனக்கு வாய்த்த அதிர்ஷ்டத்தில் அவள் நெகிழும்போது — தன் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வான். பிறகு அதுவும் இல்லை. சகல விதங்களிலும் 'அவள் தனக்கானவள்' என்ற ஆளுமையின் அதிகாரத்தில் தான் அவன் ஆட்சி நடந்தது.

''என்னங்க... தூங்கிட்டீங்களா...''

''....''

உறுமினான்.

''உங்களைத்தான்...''

''ம்... ஹூம்...''

''டிபார்ட்மெண்ட் எக்ஸாம்ல பாஸ் பண்ணிட்டேன்...''

''அப்படியா'' என்பது போல ஒரு பார்வை.

அவளுக்குத் திடீரென ஒரு அலுப்பு வந்தது. 'சே... என்ன மனிதன் இவன். ஒரு சந்தோஷம், ஒரு வார்த்தை கன்கிராட்ஸ் என்று... ஊஹூம்... எதுவுமில்லை....'

அவன் பி. காம். பட்டதாரி. தேர்ட் கிளாஸ். பாஸ் செய்ததே ஆச்சர்யம் என்று ஒரு பலவீனமான நேரத்தில் அவளிடம் சொன்னான். யாரோ சிபாரிசு செய்ய இப்போது பார்க்கும் வேலை கிடைத்தது. மேலே படிக்கவும் முயற்சி செய்யவில்லை. படிப்பு வரவில்லை. அதை ஒரு குறையாகவும் அவன் நினைக்கவில்லை. அலுவலகப் பரீட்சையும் எழுத முயலவில்லை. 'போதும்... பிரமோஷன் வரப்ப வரட்டும்... இப்படியே ரிடையர் ஆயிடுவேன்...' என்ற அவனது சோம்பேறி மனோபாவம் அவளுக்குப் பிடிக்கவில்லை.

அவளும் பி. காம். பட்டதாரிதான். மணமாகிய வருடமே பிடிவாதமாய்த்தபால் மூலம் எம். காம். சேர்ந்தாள். வேலைக்குப் போய்... வீட்டு வேலைகளையும் கவனித்து... படிக்கவும் செய்தாள். பாஸ் செய்தாள். இப்போது அலுவலகத் தேர்விலும் தேறிவிட்டாள். இதற்காகக் குழந்தை பெற்றுக் கொள்வதைக் கூடத் தள்ளிப் போட்டனர். இரண்டு, மூன்று மாதங்களுக்குள் அவள் பதவியிலும், பணத்திலும் அவனை மிஞ்சிவிடுவாள். பிறகு...

அவனுக்குள் கசப்பு பொங்கியது.

என்ன சொல்லி விட்டான்...

''பிரமோஷனை ஏற்றுக் கொள்ளாதே... இல்லாவிட்டால் வேலையை ரிஸைன் செய்து விடு...''

''அது எப்படி...''

''அப்படித்தான்...''

மேலே பேசாமல் திரும்பிப் படுத்துவிட்டான்.

இந்த விஷயத்தில் என்று மட்டுமில்லை. எப்போதுமே அவன் பிடிவாதக்காரன். அடுத்தவருக்கும் உணர்ச்சிகள், ஆசைகள் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கிறவன். புடவை... சினிமா... டிபன் எதுவுமே அவன் சொல்வதுதான். அவன் விருப்பம் தான்.

ஒருமுறை அவர்கள் வீட்டிற்கு வந்திருந்த அவன் தங்கையும் அதைத்தான் சொன்னாள்.

''முரடன்... சுயநலக்காரன்... இப்ப மாறிட்டானா... அனுசரிக்கப் போறானா...'' என்று கேட்டாள்.

இவள் பேசாமல் சிரித்து வைத்தாள்.

என்ன சொல்வது... எதையாவது சொல்லப் போய்...'' கட்டின புருஷனைப் பத்தி நாக்கூசாமே பேசறானே... இவ ஒரு பொம்பளையா... என்ன இருந்தாலும் அவன் எனக்கு அண்ணன்... உடன்பிறப்பு... நான் பேசலாம்... இவ பேசலாமோ.... குடும்ப கௌரவம் கெடாதோ ' என்று ஒரு முறை அவள் மற்றவர்களிடம் கூறியதாகக் கேட்டவர்களில் ஒருத்தி வந்து சொல்லி விட்டுப் போனாள்.

என்ன ஆனாலும் சரி. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுப்பதில்லை என்று கறுவிக் கொண்டாள். இப்படி நடு இரவில் தூக்கம் கெட்டு மனத்தின்முனகல்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டு.... தான் எதிர்பார்த்த அநுராகம் இழையோடும் வாழ்வு அமையாமல் போன விதிகுறித்து நொந்து கொண்டாள்.


திடீரென வயிற்றைக் குமட்டியது.

என்னது... எழுந்து வாஷ் பேஸினுக்கு அருகில் போனாள்.

பம்பாயில் விலை உயர்ந்த பூனையின் உரிமையைப் பற்றி இருவர் தொடுத்த வழக்கில் நீதிபதி இவ்வாறு உத்தரவிட்டார்: ''பூனையை ஒரு சாக்கில் கட்டி வைத்து விட வேண்டும். வாதியும் பிரதிவாதியும் இரண்டு பக்கங்களில் நிற்க வேண்டும். மூட்டையை அவிழ்த்ததும் பூனை யார் பக்கம் தாவுகிறதோ அவர்தான் உண்மையான சொந்தக்காரர்.''

பூனை நகைச்சுவை உணர்வுள்ளது போலும். அவிழ்த்து விட்டதும் நேராகக் கதவு வழியே வெளியே ஓடிவிட்டது!

ஆர். எஸ். சுப்பிரமணியம்.




"எனது ஆறு வயதுச் செல்வி பரத நாட்டியம் நன்கு ஆடுகிறாள். நாளைய உலகமே அவளது மேடையாம்."
போர்ன்விடாவின் இனிமைக் காலம்
போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள் நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!
வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்ட பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்புவதேன்?
போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் வெளிப்படையாகவே கூறுகிறார்கள்.
"என்னுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்தது அல்ல."
குழந்தைகளைக் கேளுங்கள்
பெற்றோர்களைக் கேளுங்கள்
உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்
அதில்...உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல. காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல... அவற்றைவிட அதிகமோ அதிகம்!
அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.
காட்பரீஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி, போர்ன்விடா பயிற்சி.
Cadbury's Bournvita
SAVE Rs.1.50
The Tasty Food Drink
OBM/3770-TAM

புத்திசாலிகள் தங்கள் அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கருதினார் ஓர் ஆசிரியர். எனவே இவர் தேர்வாளராகப் பணியாற்றிய போது பரீட்சை எழுதிக் கொண்டிருந்த புத்திசாலி மாணவரிடமிருந்து விடைத்தாள்களைப் பிடுங்கி மற்ற மாணவர்களுக்குக் காப்பி அடிக்க விநியோகித்தார்! புத்திசாலி மாணவனொருவன் வழக்குத் தொடுக்க, விசாரணை நடக்கிறது!

—நன்றி: சண்டே.

தகவல்: பத்மினி கிருஷ்ணன்.



மனத்தின் மொத்தக் கசப்பும் வெளியேறியது போன்ற உணர்வுடன் துப்பினாள். மீண்டும் ஒரு குமட்டல். உமிழ்ந்தாள். வாயைக் கொப்பளித்து விட்டுத் துண்டால் துடைத்துக் கொண்டாள். படுக்கையில் வந்து அமர்ந்தாள்.

கைவிரல்கள் தானாக மடங்கிப் பிரிய... மனம் மெல்லக் கணக்குப் போட... நாள் தள்ளிப் போனதை உணர்ந்தவளாய் ஒரு கணம் சிலிர்த்தாள்.

'இந்த நேரத்தில் இது வேறவா... இப்போது வேண்டாம் என்று ஒதுக்கி வைத்தது நிகழ்ந்தே விட்டதா...''

சுந்தரம் திரும்பிப் படுத்தான்.

தூங்கும்போது அவன் முகம் இன்னும் விகாரமாய்த் தெரிந்தது. இடுப்பு நழுவிய வேட்டி கன்னத்தில் கோடு போட்ட உமிழ் நீர்... பாதி திறந்த கண்கள்... புஸ்... புஸ்ஸென்ற மூச்சு...

எழுப்பிச் சொல்லலாமா... உன் வாரிசு என் வயிற்றில் என்று. என்ன சொல்வான். 'இதுக்காக நல்லாத் தூங்கிட்டு இருக்கவனை எழுப்பணுமா... காலையில சொல்லக் கூடாதா...' என்பானா... 'இது வேற சனியன்... இப்ப எதுக்கு' என்பானா... இவன் குணமே தனி. எப்படி நடந்துகொள்வான் என்று யூகிக்க முடியாது.

ஆனாலும் வீம்புக்கு எழுப்பத் தோன்றியது. உலுக்கினாள்.

''என்னடி....''

குரலில் லேசான சீற்றம்.

''வாமிட் வருது...''

''எடு... அதுக்கு என்னை ஏன் எழுப்பறே...''

''அதில்லீங்க... வந்து...''

வெட்கப்பட முடியவில்லை.

''நாள் தள்ளிப் போச்சு... ஒருவேளை... அப்படியிருக்கலாமோன்னு நினைக்கிறேன்...''

''நிஜம்மாவா...''

தலையாட்டினாள். அவன் உணர்வுகளை அவளால் கணிக்க முடியவில்லை. 'பேசு.... பதில் சொல்கிறேன்...' என்று வார்த்தைகளுடன் தயாரானாள்.

''ஆறு வருஷத்துக்கு அப்புறம்... இப்பதான் வேளை வந்திருக்கு...'' என்று ஏதோ முனகினான்.

அருகில் நகர்ந்து வந்து அவள் வயிற்றில் கையை வைத்துத் தடவினான்.

''நாளைக்கு லீவு போட்டுடு. லேடி டாக்டரைப் பார்த்துட்டு வரலாம்...''

அவன் தொட்டதில் ஒரு சிலிர்ப்பும், குரலின் எதிர்பாராத கனிவில் ஒரு திகைப்புமாய் 'இவனுக்கு என்ன நேர்ந்தது' என்று அவனை வெறித்தாள். 'அபார்ஷன் செய்யச் சொல்லுவான்' என்று நினைத்தால் இவ்வளவு சந்தோஷப்படுகிறானே!

அவன்மேல் கால்கள் படாமல் கட்டிலின் ஓரம் ஒதுங்கி அவள் படுக்க நிறைய இடம் விட்டுப் படுத்துக் கொண்டான். எதிர்பாராத ஆனந்தத்தில் தூக்கக்கலக்கம் மறைந்து முகத்தில் புதுமலர்ச்சி தெரிந்தது. கண்களைத் திறந்து எதிரே காலண்டர் பேப்பரை ஒரு வினாடி பார்த்துவிட்டு மெலிதாய்ச் சீட்டி அடித்தான். மறுபடி கண்களை மூடிக் கொண்டான்.

அவளால் நம்ப முடியவில்லை.

'வேஷமா.... நிஜ சந்தோஷமா....'

ஏதோ புரிவது போலவும், புரியாதது போலவும் இருந்தது.

அவனைப் பார்த்தாள். தூங்கிவிட்டான். அதே அரைக்கண் பார்வை. கன்னத்தில் உப்புக் கோடு... மூச்சு. ஆனால் முகத்தில் ஏதோ ஒரு தேஜஸ். தூக்கத்தில் கால்பட்டாலே முனகுகிறவன் அவளுக்காக இடம் விட்டுத் தள்ளிப் படுத்திருந்ததைப் புரிந்து கொள்ள முடியாமல்... கட்டிலின் இந்த ஓரத்தில் நகர்ந்து படுத்துக் கொண்டாள். தூக்கம் வரும்வரை மனம் ஏதேதோ நினைப்புகளில் அலைபாய்ந்து கொண்டிருந்தது.

தூங்கியபின் கட்டிலின் நடுவே இருவருக்கும் இடையே நிறைய இடைவெளி இருந்தது.

கங்கைக் கரைத் தோட்டம் கன்னியரின் கூட்டம்

ஆபீஸில் நுழைந்ததும் வழக்கமாகத் தென்படும் ஆரம்பக் காட்சிதான் அன்றும்!

டி'ரோஸைச் சுற்றிப் பெண்கள் கூட்டம் மொய்த்தது. நீலா, மாலா, விஜயா, ஷெர்லி என்று 'கங்கைக்கரைத் தோட்டம், கன்னிப் பெண்கள்(!) கூட்டம்தான்!

மனுஷனிடம் அப்படிப்பட்ட வசீகரத் தன்மை!

நாற்பத்தைந்து வயது... தொப்பை சரீரம்... சிரிக்கச் சிரிக்கப் பேசும் சுபாவம்... சிரிக்கும்போது தேங்காய் உடைத்ததுபோன்ற ஒரு வெண்மை பற்களில் பளிச்சிடும்!

மனுஷன் மற்றைய சக ஆண் ஊழியர்களிடம் அதிகம் வைத்துக்கொள்ள மாட்டார். சகவாசம் மொத்தமும் பெண்களிடம்தான்!

''எனக்குத் தப்பாகப் படவில்லை.

ஆனால் கிட்டாவின் பார்வையே வேறு!

''நீ விவரம் தெரியாத பேசாத்துடா... டி'ரோஸைச் சாதாரணமா எடை போட்டுடாதே! மனுஷன் படா கில்லாடி.... தினம் ஒவ்வொருத்திக்கும் சாக்லேட் தராண்டா! எவனாவது தர்மத்துக்கு இது மாதிரி தினம் செலவழிப்பானா? பாரேன்..... அதுல என்ன மருந்து வெச்சுத்தராரோ! இதுகள் எவ்வளவு அன்னியோன்யமாபேசுகின்றன'' என்று கிட்டா அங்கலாய்ப்பான். அங்கலாய்ப்பில் வயிற்றெரிச்சல் பொங்கி வழியும்.

கிட்டா ஒரு 'எலிஜிபிள்' பிரம்மச்சாரி. இரண்டு பேரை சின்சியராக 'லவ்' பண்ணித் தோற்றுப் போனவன். எவளும் தன்னுடன் சாதாரணமாகக் கூட பேசமாட்டேன் என்கிறாளே என்கிற குறை அவனுக்கு நெஞ்சு முட்டம் உண்டு.


''என்டா கிட்டா... நீயும் சாக்லேட் வாங்கிக் கொடுக்கறதுதானே!'' என்று கிட்டாவைக் கேலி செய்வேன்.

அன்று கிட்டா அமர்க்களமாக டிரஸ் செய்து கொண்டு வந்திருந்தான்.

''என்னடா விஷயம்...'' வாயைக் கிளறினேன்.

''டேய் மாது... நீ ஒரு சாமியார்... உனக்கு எந்த இன்ட்ரஸ்டும் கிடையாது! ஆபீஸரா 'டைரக்ட் ரெக்ரூட்' ஆன சாருலதா இன்னிக்கு கல்கத்தாலேர்ந்து டிரான்ஸ்ஃபர் ஆகி பிராஞ்ச் மானேஜரா இங்கே சேரப் போறது உனக்கு மறந்து போச்சா?''

''மறக்கலே... அதுக்கும் உன் உடைக்கும் என்னடா சம்பந்தம்?'' ஒன்றும் தெரியாதது மாதிரிக் கேட்டேன்...



பி. ரங்கநாயகி



அருள்வாக்கு

கிராமம் கிராமமாகப் பாங்குகள் திறந்து அநேக இனங்களுக்குக் கடன் கொடுப்பதால் கடன் வாங்கும் பழக்கம் ஜனங்களிடம் அதிகரிப்பது தவிர, இதனாலே எத்தனையோ பொய், மோசடி, கரப்ஷன் வேறு. பாங்கு சொல்கிற இனத்துக்காகக் கடன்வாங்குவதாகச் சொல்லிக்கொண்டு அதை வேறு காரியங்களுக்குப் பிரயோஜனப்படுத்துவது; அதற்காக Inspection Staff க்கு 'அழுவது'; முதலில் பல பேர் மனுப் போடும் போட்டியில் லோன்வாங்குவதற்கே அதிகாரிகளுக்கு ''நைவேத்தியம் பண்ணுவது'' என்றெல்லாம் ரொம்பக் குளறுபடியாகப் போய்க் கொண்டிருக்கிறது. அப்புறம் கடனைத் திருப்பி வசூலிப்பதும் கஷ்டமாகிறது. கட்டாயப் படுத்தி வாங்கினால் 'வோட்' போய் விடப் போகிறதே என்ற பயத்தில் 'லோனை' write off ' பண்ணிவிடுகிறார்கள். சொந்தப் பணமா என்ன, ஜனங்கள் (வரி முதலானவைகளாகக்) கொடுத்ததுதானே என்பதால் ஸுலபமாகக் கடனை வஜா செய்து விட்டு நல்ல பெயரும் வோட்டும் ஸம்பாதிக்கப் பார்க்கிறார்கள். அதோடு போகவில்லை. சொந்தப் பணத்தைக் கடனுகக்கொடுத்தவன் அல்லது குத்தகைப் பணம் பெற வேண்டியவன் முதலியவர்களெல்லாருங்கூடத் தங்கள் பணத்தை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும் என்பதாக அவர்களை வயிறெரிய வைத்து 'மொரடோரியம்' என்று 'ஆர்டினன்ஸ்' போட்டு விடுகிறார்கள்.

ஏழைகளுக்கு வாஸ்தவமாக நன்மை பண்ணுவதை யாரும் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் பொதுவாக அடக்கப் பண்பும் எளிமையும் உள்ள நம் ஏழை ஜனங்களை வீண் டாம்பீகத்திலும் பலவிதமான பொய் பித்தலாட்டங்களிலும் தூண்டிவிட்டு, 'பட்டகடனைத் தீர்க்கத்தான் வேண்டும் என்ற பெரிய தர்மத்துக்கு விரோதமாக நாம்போனாலும் ஸர்க்கார் நமக்குத்தான் ஆதரவாக இருக்கும்' என்று துணிச்சல் கொள்ள வைப்பது நன்மை இல்லவே இல்லை. தர்மபலத்தை அவர்கள் இழக்கும்படி செய்வது தீமைதான்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்

''ஒனக்கு எல்லாத்தையும் பிட்டுப் பிட்டு வைக்கணும்... சின்ன வயசு பொம்மனாட்டி நம்ப ஆபீசுக்கு மானேஜரா வரா.... நான் அவளோட பெர்சனல் கிளார்க்... ஏதோ தானேன்னு வந்தா என்னை அவ மதிப்பாளாடா? அதோட இன்னொரு சபதம் எடுத்துண்டு இருக்கேன்... இந்த டி'ரோஸ் கிட்ட அவ சகஜமா சிரிக்கப் பேசக்கூடாது.. இவர் அவளோட 'சபார்டினேட்' தான்.... அவகிட்டே சொல்றப்படி சொல்லி இந்த மனுஷன்கிட்ட ஸ்ட்ரிக்டா, கடுகடுன்னு நடந்துக்கறா மாதிரி செய்யலேன்னு என் பேர் கிட்டா இல்லே!''

''சே... ரொம்ப மோசம்டா நீ.... ஏன் தான் இதுமாதிரி நெகடிவ் அப்ரோச்சோட நடந்துக்கறயோ!'' என்று நான் சொல்வதற்கும் சாருலதா வருவதற்கும் சரியாக இருந்தது.

பார்வையில் முப்பத்திரண்டு முதல் முப்பத்தி ஐந்து மதிக்கலாம்.... பூர்விகம் மாயவரம் என்று கேள்வி. அழகு என்று சொல்ல முடியாது... ஆனாலும் முகத்தில் ஒருவித வசீகரம் இல்லாமலில்லை.. பார்வையில் மிடுக்கு இருந்தது... அதிகாரிக்கான தோரணை, நடை, உடை பாவனைகளில் பளிச்சிட்டாலும், பெண்மையின் மென்மை அவற்றில் அமுங்கிப் போகாமல் இருந்ததைக் குறிப்பிட்டாக வேண்டும்...

ஆரம்ப அறிமுகங்கள் ஆனதும்சாருலதா தனது அறைக்குப் போனாள்.

ஐந்து நிமிடங்களில் கிட்டாவுக்குஅழைப்பு வந்தது. ஸ்டைலாகப் போனான்.

டி'ரோஸுக்குத் தினமும் ஒரு பழக்கம் உண்டு. லஞ்சுக்காக பன்னிரண்டு மணிக்கே கிளம்பி விடுபவர், Y.M.C.A.-ல் தன் நண்பர் வைத்து உள்ள அறைக்குப் போய் ஓய்வு எடுத்துக் கொண்டு இரண்டரை, இரண்டே முக்கால் மணிக்குத் தான் திரும்புவார். ஆபீஸ் வேலையில் சூரர். அதிகாரிகள் கண்டு கொள்ள மாட்டார்கள்.

வழக்கப்படி அன்றும் பன்னிரண்டுமணிக்கு மனிதர் கிளம்பி விட்டார்.

அவர் சென்று கொஞ்சநேரம் ஆகியிருக்கும். சாருலதாவிடமிருந்து அவருக்கு அழைப்பு வந்தது. வெளியில் போயிருப்பதாகப் பியூன் சொல்லப் போனான்.

தொடர்ந்து கால் மணிக்கு ஒரு தடவையாக நான்கு, ஐந்து தடவைகள் அழைப்புகள் வந்தன.

டி'ரோஸ் வந்தபாடில்லை.

கிட்டா, சாருலதா ரூமிலிருந்து அட்டகாச சிரிப்புடன் வெளிவந்தான்.

''மாது... இன்னிக்குத்தான்டா என் வாழ்க்கையிலே ரொம்ப மகிழ்ச்சியான நாள்! சரியா வத்தி வெச்சுட்டேன்! டி'ரோஸ் வந்ததும் சாருலதா மனுஷனை அழைக்கப் போறா! எகிறிப் பந்தாடப் போறா... ஒரு பொண்ணுகிட்டே டி'ரோஸ் வாங்கிக் கட்டிக்கிற வைபவத்தை என் கண்ணால பார்க்கப் போறேன்...''

டி'ரோஸ் மதியம் இரண்டரை மணிக்கு வந்தார்.

வந்த சிறிது நேரத்தில் ப்யூன் வந்து அழைக்க, சாருலதா அறைக்குப போனார்.

அழைக்காமலேயே இட்டா பின்னால் போனான்.

சரியாக இருபது நிமிடங்கள் கழித்து சாருலதா அறையிலிருந்து டி'ரோஸ் வெளி வந்தபோது அவரது முகத்தைப் பார்க்கச் சகிக்கவில்லை.

பேயறைந்தாற்போன்று இருந்தது.

இட்டாவின் முகத்தில் குரூர திருப்தி வழிந்தது.

தம் சீட்டில் பிரமை பிடித்தாற்போன்று சிறிது நேரம் அமர்ந்திருந்தவர், லெட்டர் பேடை எடுத்து ஏதோ எழுதினார்.

டி'ரோஸின் முகபாவத்தைக் கண்டு அவரைச் சுற்றி 'கங்கைக் கரைத்தோட்டம்' கூடிவிட்டது.

அவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து டி'ரோஸிடம் ஏதோ மன்றாடுவது புரிந்தது.

நான், போய் விசாரிக்கலாம் என்று எழுந்த சமயத்தில் மாலா என்னிடம் ஓடி வந்தாள்...

''என்ன மேடம்... என்ன விஷயம்...'' வினவினேன்.

''சார்... டி'ரோஸ் சார் ரிசைன் பண்ணப் போறாராம்.. ராஜினாமாக் கடிதம் கூட எழுதிட்டார்... புது மானேஜர் வந்தில்லே.. அவ இவரை நிக்க வெச்சு ஏதோ காரசாரமா கேட்டுட்டாளாம். பெரிய இவ மாதிரி.... டி'ரோஸோட சர்வீஸ் என்ன...? இவ நேத்து வந்த கத்துக்குட்டி... பாவம் டி'ரோஸ் மனசு உடைஞ்சுப் போயிட்டார் சார்... நீங்களும் வந்து அவருக்குச் சமாதானம் சொல்லி ராஜினாமா கடிதத்தைக் கொடுக்காமச் செஞ்சுடுங்க சார்...'' மாலா படபடத்தாள்.

எல்லோருமாகச் சேர்ந்து ஒரு மணிநேரம் மன்றாடி, சமாதானம் செய்து, ஏதேதோ உதாரணங்கள் சொல்லி டி'ரோஸின் மன நிலையைச் சரிப்படுத்தினோம்.

''என்ன மாதவன் இது... என்னோட இருபதாவது வயசுலே சேர்ந்தேன். இருபத்தைந்து வருஷம் சர்வீஸ் ஆகிறது... பிரமோஷனும் சரியா கிடையாது... மேக்ஸிமம் சம்பளம் வாங்கி அஞ்சு வருஷம் ஆகுறது... வேலையிலே அப்பழுக்கு இருந்தா சொல்லட்டும். நான் அவுங்களோட செருப்பை கூடத் துடைக்கத் தயார்... வயசுக்கு மதிப்பு கொடுக்காம, சர்வீஸுக்கு மதிப்பு கொடுக்காம உட்கார சீட் கூட ஆஃபர் பண்ணாம, ஜூனியர் கிளார்க் எதிரிலே தூக்கிப்போட்டுப் பேசறதை எப்படி மாதவன் ஏத்துக்கறது?'' என்று டி'ரோஸ் வாதிட்டது நியாயமாகப் பட்டது.

நடுவில் ஷெர்லி சாருலதா அறைக்குச் சென்று, டி'ரோஸ் மனமுடைந்து ராஜினாமா செய்ய இருக்கிறார் என்று சொல்லி, அவரைக் கூப்பிட்டுச் சமாதானம் செய்யச் சொல்லி சாருலதாவைக் கேட்டிருக்கிறாள்.

''ராஜினாமா செய்யணும்னு அவர் முடிவு செஞ்சா அவரோட இஷ்டம் அது... ஒரு அதிகாரி நடந்துக்க வேண்டிய விதத்துலே நான் நடந்துண்டேன். என்னால எதுவும் செய்யறதுக்கில்லே.. அவர் ராஜினாமா கடிதம் கொடுத்தா அக்செப்ட் செஞ்சுண்டு மேலிடத்துக்கு அனுப்பி விடுவேன்'' என்று சாருலதா பதில் சொன்னாளாம்.

நல்லவேளையாக எந்தவித அசம்பாவிதமும் நிகழாமல் டி'ரோஸ் எங்களுடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்த்து ராஜினாமா கடிதத்தைக் கிழித்துப் போட்டார்...

வழக்கமாக மாலை நாலு மணிக்கே காலியாகிவிடும் ஆபீஸ் இன்று மாலை நாலே முக்கால் வரை முழு 'ஹவுஸாக'க் காட்சி யளித்தது.

டி'ரோஸ் சகஜமாகி விட்டாலும் அவரது வழக்கமான முகபாவம் திரும்பவில்லை.

ஐந்து மணி அடிக்கும் சமயம் ஒரு போன்கால் வந்தது. சாருலதாவை போன் குரல் அழைத்தது.

அறையிலிருந்து வெளிவந்து டெலிபோனை அட்டெண்ட் செய்த சாருலதா, போன் செய்தி கேட்டு ஆடிப் போனாள்.... முகம் பேயறைந்தாற்போன்று ஆகிவிட்டது.

''என்ன மேடம்... எனி திங் ராங்?'' என்று வினவினேன்...

''என் ஃபாதர்க்குத் திடீர்னு மாஸிவ் ஹார்ட் அட்டாக்காம்... நினைவு இல்லையாம்... உடனே வீட்டுக்கு வரச்சொல்லி நியூஸ் வந்திருக்கு... தாங்கிக்க முடியலே.... தலை சுத்தறது...'' என்று உட்கார்ந்து கொண்டாள்...

சாருலதா என்னிடம் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த டி'ரோஸ் துள்ளி எழுந்தார்...

''மேடம்... கவலைப்படாதீங்க... ரிலாக்ஸ் யுவர்செல்ஃப்... என்னோட கார்லேயே உங்



சமீபத்தில் 'ஹிந்தி இலக்கிய வரலாறு' என்ற புத்தக வெளியீட்டுவிழா நடக்கவிருந்தது. பிரதமர் இந்திரா காந்தி கலந்து கொள்ளவிருந்தார். திடீரெனத் தேனீக்கள் படையெடுத்தன.

தேனீக்களை விரட்ட நினைத்த சிலர் அவைகளிடம் நன்றாகக் 'கொட்டு' வாங்கிக் கொண்டனர். எழுந்து ஓடிய சிலரைத் தேனீக்கள் 'விர்'ரென்று துரத்தின. காவலர் புகை போட்டுத் தேனீக்களைத் துரத்த முயன்றனர். அவ்வளவுதான். முன்னைவிட தேனீக்கள் அதிக எண்ணிக்கையில் வந்து ஆக்ரோஷமாகக் கொட்டின. வேறுவழி யின்றி விழா அடுத்த நாளுக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.

கவே வீட்லே டிராப் பண்ணறேன்.... அவரை உடனே விஜயா ஹாஸ்பிடல்லே அட்மிட் செஞ்சுடலாம்... எனக்கு அங்க நெறைய டாக்டர்களைத் தெரியும்... இன்டென்ஸிவ் கேர் யூனிட்லே ஒருநாள் இருந்தா சரியா யிடும்'' என்று பரபரத்தவர் சாருலதாவிடம் ஒரு டம்ளர் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்.

டி'ரோஸின் வார்த்தைகளும், குளிர்ந்த நீரும் சாருலதாவை நிதானத்திற்குக் கொண்டு வந்தன.

என்னிடம் சொல்லிவிட்டு, டி'ரோஸும், சாருலதாவும் கிளம்பிவிட்டனர். எங்கள் மூவரைத் தவிர அனைவரும் போய்விட்ட தால் எவருக்கும் விஷயம் தெரியாது.

தன்னிடம் அவ்வளவு கடுமையாக நடந்து கொண்ட சாருலதாவிடம், மனிதாபிமானத் துடன் டி'ரோஸ் நடந்து கொண்டது மனதிற்கு இதத்தை அளித்தது.

மறுநாள் காலை நான் சீக்கிரமே அலுவலகம் வந்துவிட்டேன்... டி'ரோஸ் வந்து விட்டிருந்தார்...

''என்ன சார் ஆச்சு அவுங்க ஃபாதர்க்கு'' என்று ஆதங்கத்துடன் வினவினேன்....

''மாஸிவ் அட்டாக்தான்... நல்லகாலம் அவுங்க உடனே டெலிபோன் பண்ணி, நாங்க ஹாஸ்பிடல்லே அட்மிட் பண்ணினது னாலே நல்லபடியா ஆயிடுத்து... இப்ப உயி ருக்கு ஆபத்தில்லே... இனிமே அவர் ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்...''

''அவுங்க இன்னிக்கு ஆபீஸ் வரமாட் டாங்க இல்லையா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே... மறு ஷங்க வந்துட்டாங்க... ஷி வில் அட் டெண்ட் ஆபீஸ் டு டே'' என்றார்...

இதற்குள் 'கங்கைக் கரைத் தோட்டம்' டி'ரோஸைச் சுற்றிக் கூடிவிட்டது.

சாருலதா வந்தாள்... அனைவரும் விஷ் செய்தோம். பதிலுக்கு 'விஷ்' செய்துவிட்டுத் தனது அறைக்குப் போனவள் போன சுருக் காக டி'ரோஸ் மேஜைக்கு வந்தாள்....

''மிஸ்டர் டி'ரோஸ் உங்க உதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்'' என்று எல்லோர் எதிரிலும் சொன்னாள்.

வழக்கமான தனது தேங்காய் சிரிப்புடன் ''இதுகூட செய்யலேன்னா அப்புறம் என் னம்மா இருக்கு... இனிமே நீங்க கவலைப் படவேண்டாம்... பட் ஜாக்கிரதையா பார்த்துக்கணும்... சியர் அப் மேடம்...'' என்று கூறி மற்றைய பெண்களுக்குக் கொடுப்பது போல் சாக்லேட் ஒன்றை டி'ரோஸ் எடுத்துக் கொடுப்பதற்கும் இட்டா நுழைவதற்கும் சரியாக இருந்தது...


சாக்லேட்டை வாயில் போட்டுக் கொண் டவள் ''மிஸ்டர் டி'ரோஸ்... இட்ஸ் தர்மதுரையோ என்னவோ சாக்லேட் ஈஸ் வெரி ஸ்வீட்...'' என்று கூறி நகைத் தாள்.

டி'ரோஸும் தனது கலகலப்பான சிரிப்பைப் பதிலாக அளித்தார்...

இட்டாவின் முகம் போன போக்கை மனதிற்குள் ரசித்துக் கொண்டேன்...

பட்டுப் புடைவை பரிசுத்திட்டம்

பெண்களுக்காக மட்டுமல்ல — எல்லா வாசகர்களும் கலந்துகொள்ளலாம்.



போட்டி 3: என்ன போட்டி வைக்கலாம்?


இந்த வாரம் என்ன போட்டி வைக்கலாம்; இன்னும் ஐம்பது வாரங் களுக்கு நவநவமான போட்டிகள் நடத்தியாக வேண்டுமே என்று யோசிக்கையில், 'ஏன், இதையே ஒரு போட்டியாக்கினால் என்ன?' என்று தோன்றியது.

என்ன போட்டி வைக்கலாம் என்று யோசித்து கீழே ஒரே ஒரு போட்டியை மட்டும் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். உறையின் மேல், ''என்ன போட்டி வைக்க லாம்?'' என்று குறிப்பிட வேண்டும். குலுக்கல் முறையில் பட்டுப்புடவை பரிசுக்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் மிக ரசமான போட்டி யோச னைகள் கல்கியில் பிரசுரமாகும். அவற் றுக்குத் தனியே சன்மானம் உண்டு. முடிவு தேதி 4.6.84.

நினைவிருக்கட்டும், 50 பட்டுப் புடவை களுள் ஒன்றை நீங்கள் பெற வாய்ப்புள் ளது. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர்:...............................

விலாசம் : ....

வளர்க... வாழ்க... வளர்க...
நம்பிக்கை, நாணயம் நிறைந்த ஸ்ரீராம் நிறுவனங்களில் முதலீடு செய்யுங்கள்!

பொதுமக்களிடையே நம்பிக்கைக்கு உகந்த நிறுவனம் என்று பாராட்டு பெற்ற ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களின் முன்னேற்றத்தின் இரகசியம்: டெபாசிட்டர்கள், அங்கத்தினர்கள், வாடிக்கையாளர்களின் பாதுகாப்பிற்கு முதலிடம் தரப்படுகிறது. நாணயமான மறு முதலீடு, பொருளாதார பலம், குறிப்பிட்ட காலத்தில் வட்டி அளித்தல், தவணைக் காலம் முடிந்தவுடன் முதலீட்டைத் தடையின்றித் திருப்பித் தருதல். இத்துடன் அனுபவமும், திறமையும் மிகுந்த நிர்வாகச் சிறப்பு.

ஸ்ரீராம் குரூப் கம்பெனிகளின் நிர்வாகிகள் லாரி, மோட்டார் வாகனங்களை தவணை முறையில் வாங்க நிதி உதவி செய்தல், கட்டட நிர்மாணம், பிரசுரத் தொழில், விற்பனை விநியோகத் துறை மற்றும் பல்வேறு நிதி அபிவிருத்தித் துறைகளில் முதிர்ந்த அனுபவம் கொண்ட நிபுணர்கள். அதனால்தான் பொது மக்களும் நம்பிக்கையுடன் ஸ்ரீராம் நிறுவனங்களில் முதலீடு செய்கிறார்கள்.

உங்கள் முதலீடு ஸ்ரீராம் குரூப் நிறுவனங்களில் பாதுகாப்பாக வளர்ந்து நல்ல பலன்களைத் தருகிறது.

ஆண்டுதோறும் ஸ்ரீராம் குரூப் நிறுவனங்கள் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரோடி சீராக வளர்ந்து கொண்டே வருகின்றன.

ஸ்ரீராம் குரூப் வழங்கும் வட்டி விகிதங்கள்:

டெபாசிட் காலம்	மாதா மாதம் வட்டி பெற	6 மாதங்களுக்கு ஒருமுறை வட்டி பெற	டெபாசிட் முதிர்வடையும் போது வட்டி பெற
1 ஆண்டு	14.0%	15.0%	15.5%
2 ஆண்டுகள்	14.5%	16.0%	17.5%
3 ஆண்டுகள்	15.0%	17.0%	20.0%

இத்துடன் ஸ்ரீராம் அளிக்கும் சிறப்பு டெபாசிட் திட்டம் :
4½ ஆண்டுகளில் உங்கள் நிதி இரட்டிப்பாக வளர்கிறது.

விண்ணப்ப படிவங்களுக்கு தொடர்பு கொள்க:

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

புதிய டெபாசிட் தாரர்களுக்கு வெள்ளிப் பதக்கம் * அன்பளிப்பு உண்டு.

* பூஜை அறையிலும், பணப் பெட்டியிலும் பாதுகாக்க உகந்தது.

SHRIRAM INVESTMENTS
YOUR FINANCIAL FRIEND IN NEED

தலைமை அலுவலகம்: 123, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை 600 001. போன்: 21401/21402.

கிளைகள்:
தி. நகர் : 54, வடக்கு உஸ்மான் ரோடு, சென்னை 600 017. போன்: 446688.
அண்ணாநகர் : A-7, அண்ணாநகர் (கனரா பாங்க் அருகில்), சென்னை 600 102 போன்: 611592
மயிலாப்பூர் : 21, கிழக்கு மாட வீதி, சென்னை 600 004
மவுண்ட் ரோடு : 137, மவுண்ட் ரோடு (மின் வாரியம் எதிரில்), சென்னை 600 002
பெங்களூர் : 142, கே.எச். ரோடு (டபிள் ரோடு), பெங்களூர்-27, போன்: 223637.

ஸ்ரீராம் சேமிப்பில் சேருங்கள். சீரும் சிறப்புமாய் வாழுங்கள்.

ADWAVE SI:2637

வட்டமேஜை

● 29–4–84 இதழில் நட்சத்திர விழா விமர்சனம் படித்தேன். 36 லட்சம் வசூல் ஆனால் என்ன, வசூலிக்கப்பட்டால் என்ன: நல்ல காரியத்துக்குத்தானே பயனாகிறது! இதை ஓசியில் வந்த ஜூனி புரிந்துகொள்ளவில்லையா? என் நாடகம் ''ராங் நம்பரை'' முதல்வர் பார்த்து ஒவ்வொரு ஜோக்குக்கும் வாய் விட்டுச் சிரித்தார். முதல்வர் ரசித்து இருக்க முடியாது என்று சொல்ல ஜூனி என்ன முதல்வரின் மனச்சாட்சியா?

சென்னை-17
ஒய். ஜி. மகேந்திரா

[''வசூல் ஆனால் என்ன? வசூலிக்கப்பட்டால் என்ன?'' என்ற மகேந்திராவின் கருத்தும் ''ஓசியில் வந்த ஜூனி'' என்ற ஏளனமும் சிறிதும் ஏற்கக் கூடியனவல்ல என்றாலும் 'ஜூனி முதல்வரின் மனச்சாட்சி அல்ல' என்பதை ஒப்புக்கொள்ள வேண்டியதே. -ஆர்]

● சி. சு. செல்லப்பா இலக்கிய அன்பர்களுக்கு ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளதை வெளியிட்டு 'கலைமகள் கண்ணீர் உகுக்கிறாள்' என்று முடித்திருந்தீர்கள். (22–4–84 இதழ்) உண்மையில் 'கலைமகள் கண்ணீர் உகுக்கிறாள்' என்பதற்கு இன்னொரு சான்று: 'கலைமகள்' ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் அவர்களே இலக்கிய அன்பர்களுக்கு ரூ. 120 விலையுள்ள புத்தகங்களை அனுப்பி ரூ. 100 மட்டும் பெறுவதாகவும் தபால் செலவு இல்லாமல் அனுப்புவதாகவும் அவற்றைப் பெற்றுக் கொண்ட பிறகே பணத்தை அனுப்பலாம் என்றும் கடிதங்கள் அனுப்பியுள்ளார்.

அரசாங்கமோ பல்கலைக் கழகங்களோ ஏதோ ஓரிரு எழுத்தாளர்களுக்குப் பதக்கமும் பண முடிப்பும் கொடுத்தால் போதுமா? எழுத்தாளர்களின் எழுத்தோவியங்கள் வாசகர்களை வந்தடைய நூலக இயக்கத்தைப் பலப்படுத்த வேண்டாமா?

சென்னை-57 இரணையல் கலை



● இசைச் செல்வர் கே. வி. நாராயணசாமி அவர்கள் இளவயதில் எவ்வளவு தூரம் சிரமப்பட்டிருக்கிறார் என்பதைப் படித்ததும் உள்ளம் உருகியது.

மே. மாம்பலம் எஸ். மோகன்

● உண்மையான புகைப்படக் கலைஞனின் மனநிலையும் அவனது ரசிப்புத் தன்மையும் எத்தகையது என்பதை ''மயிலும் மையலும்'' சிறுகதை அப்படியே படம் பிடித்துக் காட்டியது.

ஊரூர் வெளிக்கடை
டி. ராஜன்

● எல்லாவற்றுக்கும் ரேசன் இருக்கும் இந்த நாளில் கார்பொரேஷனின் ஊழலுக்கு மட்டும் ரேசனே இல்லையா (ஊழலில் அட்சய பாத்திரம்)

சென்னை-84 பொடுசி

● கேட்பாரற்ற கார்ப்பொரேஷன் பகுதியில் கேட்பாரற்று அங்கங்கு அசிங்கமாகக் கிடக்கும் எங்கள் வில்லிவாக்கம்பற்றி ஒரு வரி கூடக் காணப்படவில்லையே!

வில்லிவாக்கம்
மங்களம் சீதாராமன்

● தங்களின் கேட்பாரற்ற கார்ப்பரேஷன் கட்டுரை சென்னை மாநகராட்சியை மட்டும் குறித்து எழுதப்பட்டாலும் தூத்துக்குடி நகராட்சியின் நிலையும் அதற்குச் சற்றும் குறைந்ததல்ல. தூத்துக்குடி ஒரு நகரமா அல்லது நரகமா என்ற நிலை.

தூத்துக்குடி
எம். சொக்கலிங்கம்

● மருத்துவக் கல்லூரி நுழைவு இவ்வளவு ஊழல் மிகுந்ததாக இருந்தது வேதனைக்குரிய விஷயம்.

தொழில் மேதை ஈசுவரனைப் பற்றிய செய்தி வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் இளைஞர்களுக்குச் சிறந்த டானிக்.

சென்னை-41
கே. எஸ். கணபதி
சுப்ரமண்யம்

● இரண்டு வாரங்களாக வெளிவந்த ''விதி'' அற்புதமான மர்ம நாவல். சுஜாதாவுக்கே உரிய 'ஸ்பெஷல்' சஸ்பென்ஸ் எழுத்தோட்டம்.

பெங்களூர் ப. மூர்த்தி

● தேசிய விருது பெற்ற பல நடிகர்கள் இன்னும் வரி பாக்கி வைத்திருக்கிறார்களாம்! வரி ஏய்ப்பு செய்து அரசை ஏமாற்றுபவர்களுக்குத் 'தேசிய விருது' தந்து ஏன் கௌரவிக்க வேண்டும்? இனி 'வருமான வரி முறையாக, முழுமையாகச் செலுத்தியவர்களுக்குத்தான் தேசிய விருது தரப்படும்' என விதி ஏற்படுத்த வேண்டும்!

அந்தணப்பேட்டை
அண்ணா அன்பழகன்

கடைசிக்கடிதம் பரிசு பெறுகிறது

மகேந்திராவுக்கு மூக்குக்கு மேல் கோபம்!



விவாத மேஜை

புகை கக்கும் பத்திரிகைகள்

மாலினி சேஷாத்ரி

அப்பாவுக்குத் தெரியாமல் சாப்பாட்டு மேஜையடியில் காலால் உதைத்துக் கொண்டும் ஸ்ஸ்.. என்று சீறிக்கொண்டும் ரஞ்சிதாவும் விவேக்கும் ஒருவரை ஒருவர் சீண்டிக் கொண்டிருந்தார்கள்.

ராஜகோபாலன் செய்தித்தாளில் ஒரேயடியாக மூழ்கிப் போயிருந்தார். அஞ்சலி கறி வேண்டுமா என்று மூன்று தடவை அவரைக் கேட்க வேண்டியிருந்தது.

''மனிதர்களுக்கு வெட்கம் மானம் இல்லாமல்போய் விட்டது!'' என்று அலுத்துக் கொண்டார் அவர். ''அரசாங்கக் காரை ஓர் அதிகாரி எப்படி துஷ்பிரயோகம் செய்கிறார் என்று ஒருசெய்தி வந்திருக்கிறது பார்...''

இதென்ன பிரமாதம் என்று ஆரம்பித்தாள் ரஞ்சிதா. ''வெளி நாட்டுக்கு ஓசி பயணம் போன ஓர் அதிகாரி பற்றியும் கஸ்டம்க்கு ஒரு காசு கூட கொடுக்காமல் இரண்டு விடியோ தட்டிக் கொண்டு வந்த மூத்த அதிகாரி பற்றியும் கூடச் செய்தி வந்திருக்கிறது!''

''உண்மைதான்.'' என்றாள் அஞ்சலி. ''பத்திரிகையைப் பிரித்தால் வண்ணமயமான லஞ்ச லாவண்யக் காட்சிகளே தெரியும்... பொது வாழ்க்கையில் எந்த ஒரு நபரும் நல்லவர் இல்லை போலும் என்று எண்ணத் தோன்றும்.''

''அம்மா என்ன இப்படிப் பேசுகிறாய்!'' என்றான் விவேக் பெரிய மனிதர் தோரணையில். எவ்வளவு சிரமப்பட்டு இந்த ஊழல்களை பத்திரிகையாளர்கள் அம்பலப் படுத்துகிறார்கள் தெரியுமா? இதற்காகப் பத்திரிகையாளருக்குப் பரிசுகளும் கிடைப்பதுண்டு. பொது மக்கள் இவை பற்றி அறியும் உரிமை உள்ளவர்கள்.''

''ஆனால் சில நல்ல பணிகளும் எங்காவது நடந்து கொண்டுதானே இருக்கின்றன? அதைக ஏன்டுவர்கள்...' ரஞ்சிதாவை முடிக்க விடாமல் ''அசடு! அதெல்லாம் 'செய்தியே அல்ல!'' என்றான் விவேக் காட்டமாக. ''யாருக்கு வேண்டும் அந்த மாதிரி உப்புச் சப்பில்லாத சங்கதி!''

அஞ்சலி ஆழ்ந்த யோசனையுடன் கூறினாள்: ''என்னவானாலும் இந்தச்செய்திகள் எல்லாமே யாரோ ஒருவர் சொன்னதை ஆதாரமாக வைத்துத்தான் எழுதப்படுகின்றன. அவை உண்மையில்லாத பட்சத்தில், அப்படிச் செய்திகளை வெளியாவது அநியாயம் இல்லையோ?''

''அப்படி இருந்தால் சிறிய எழுத்தில் தவறுக்கு வருந்துகிறோம் என்று போட்டு விடுவார்கள் விஷயம் அத்தோடு தீர்ந்தது.''

''அப்படி அடிக்கடி நேர்வதில்லை. பெரும்பாலும் உண்மைச் செய்திகளே'' என்று அடித்துச் சொன்னார் ராஜகோபாலன். ''நெருப்பில்லாமல் புகையுமா?''

''சில வேளைகளில் ஏகப் புகை புகைகிறபோது எங்கே நெருப்பு என்று தேட வேண்டியிருக்கிறது!'' என்றாள் அஞ்சலி கேலியாக.

''அப்படின்னா இந்த மாதிரி செய்திகளே வரக் கூடாது என்கிறாயா?''

''எது சரி எது தப்பு என்று எனக்குத்தெரியாது'' என்றாள் அஞ்சலி. இந்த லஞ்சம், நாணயமின்மை, வேண்டப் பட்டவருக்கு வாய்ப்புக் கொடுப்பது இவையெல்லாம் பற்றிப் படித்துப் படித்து எனக்கு அலுத்து விட்டது. எல்லா இளைஞர்களும் இங்கிருந்து எங்கானும் வெளி நாடு போய்ப் பிழைக்கத் துடிப்பது இதனால்தானோ என்னவோ?''

''வெளி நாட்டில் லஞ்ச லாவண்யம் இல்லையா என்ன?'' என்றார் ராஜகோபாலன்.

''பத்திரிகையாளர்கள் இது போன்ற விஷயங்களை எழுத விரும்புகிறார்கள் என்றால், மக்களும் அதை விரும்பிப் படிக்கிறார்கள் என்பதனால் தான். நீ ஒருத்திதான் அலுத்து விட்டது என்கிறாய்'' என்றான் விவேக்.

''நம்முடைய ராஜாவின் முதலாளி பற்றிப் பத்திரிகைகளில் வெளியானது



நினைவிருக்கிறதா? கடைசியில் பார்த்தால் வேறு கம்பெனியாம். அதே பெயரானதால் குழம்பிப்போய் விட்டோம் என்கிறார்கள்! வழக்கமான மன்னிப்புக் கேட்டு, பொடி எழுத்தில் போட்டிருந்தார்கள். இருத்தத்தை யாருமே பார்த்திருக்கக்கூட மாட்டார்கள்''

''சமூக அநீதிகளைப் பத்திரிகைகள் எழுதும்போது ஏதானும் தவறு நிகழ்வதுண்டுதான்!'' என்றார் ராஜகோபாலன் ''ஆனால் அதற்காகப் பத்திரிகைகளின் குரல்வளையை நெறிக்கக்கூடாது. அப்புறம் இங்கே ஜனநாயகமே இருக்காது!''

''என்னவானாலும் எனக்கு இந்தக் 'கதைகள்'' பிடிக்கவில்லை!'' என்றாள் அஞ்சலி. ''நான் ராஜாவின் முதலாளி பற்றி நினைத்துக் கொள்ளும்போது இதெல்லாம் நியாயம்தானா என்று என்னையே கேட்டுக் கொள்வேன்!''

''பொது வாழ்க்கைக்கு வந்துவிட்டால் விமர்சனத்துக்குத் தயாராகத்தான் இருக்க வேண்டும்.''

''தொட்டிக்குள் தங்க மீன் இருப்பதைப் போன்றதுதான் பொது வாழ்க்கை சமாச்சாரமும். எங்கள் ஆசிரியர் அப்படித்தான் சொல்வார்!''

''ஆமாம். இறந்துபோய் விட்ட தங்க மீன் என்றால் கூட, பிணப் பரிசோதனை நடத்தி, உண்மையிலேயே தங்க மீனா, இல்லை சாதாரண மீனா என்று கண்டு பிடித்து அறிவிப்பார்கள்!''

''இந்தச் செய்திகள் எல்லாம் இல்லா விட்டால் வாழ்க்கை ரொம்ப டல் அடிக்கும்'' என்றார் ராஜகோபாலன்.

''பண்டைய ரோம் நாட்டுச் சக்கரவர்த்திகள் போல இருக்கிறார் அப்பா!'' என்றான் விவேக் குறும்பாக. ''அவர்கள் கைதிகளைச் சிங்கங்களுக்கு உணவாகப் படைப்பதை வேடிக்கை பார்த்து ரசிப்பார்களாம்—தெரியுமோ?''






அடுத்த வாரம்

குஜராத் சிறப்பிதழ் - 3



+



இழுத்து மூடுங்கள் ஈ.எஸ்.ஐ ஆஸ்பத்திரிகளை!



✖ ஜடாயு

ஜடாயு க்ஷேத்திரம்

ஆனந்தி

ராமாயணத்தில் சீதாப் பிராட்டியாருக்கு உள்ளம் உருகி உருகி உதவிய வர்கள் ஹனுமானும், ஜடாயுவும். ராவணனுடன் தன்னந்தனியே போரிட்டு மடிந்தவர் ஜடாயு. வயது முதிர்ந்த பிராயத்தில் மகா வீரத்தோடு போரிட்டுச் சிறகுகள் வெட்டுண்டு விழுந்த நிலையிலும் சீதைக்கு நேர்ந்த கதியை ஸ்ரீராம பிரானுக்குத் தெரிவித்து விட வேண்டும் என்பதற்காக அவரைக் காணும் வரை தம் மனோவலிமையினா லேயே உயிரை வைத்துக் கொண்டிருந்தார்.

சீதையை ராவணன் தென்திசை நோக்கிக் கொண்டு சென்றதைக்கூறி விட்டு ராமநாமத்தைச் சொல்லிக் கொண்டே சரீ ரத்தை விட்டார். உடனே கருணைக் கடலான ராம பிரான் சங்கு சக்கரம் கிரீடம், குண்டலம் அழகிய மாலைகள் முதலியன அணிந் தவராய் திவ்ய மங்களவடி வத்தோடு ஸ்ரீதேவி பூதேவி சமேதராகத் தரிசனம் தந் தார். சாதாரணமாக எல் லோருக்கும் செய்வதுபோல அந்திமக் கிரியைகளைச்செய்ய வில்லை பகவான். தன் தந் தைக்குச் சமமான ஜடாயு வின் உடலை மிருந்த பரி வோடு தூக்கி எடுத்துத் தன் வலது தொடையின் மீது சிதை அடுக்கி அதன் மீதே எரியூட்டினார்! வலது பக்கத்தில் நின்று கொண் டிருந்த மகாலக்ஷ்மிக்கு உஷ்ணம் தாங்க முடிய வில்லை. அதனால் இடது பக்கம் வந்து சற்றுத் தலை சாய்த்து நின்றார்! பூமிதேவி எதையும் தாங்கக் கூடியவள் அல்லவா? அதனால் வலது பக்கம் வந்து நின்றுகொண் டார். இந்தக் கோலத்தில் ஸேவை சாதிக்கும் ஸ்ரீவிஜய ராகவப் பெருமாளை நாம் தரிசிப்பது திருப்புட்குழி யில்.

தன்னுடைய கோதண் டத்தின் நுனியினால் தரை யைக் கீறி ஸ்ரீராமபிரான் வருண பகவானைப்பிரார்த் திக்கவே அங்கிருந்து தண் ணீர் பெருகிற்று. அதில் ஸ்நானம் செய்து மிருந்த அன்போடு தர்ப்பணமும் செய்தார் சுவாமி.

பெண்களின் மானங் காக்கத் துணிவோருக்குப் பெருமான் எவ்வளவுபெரிய பாக்கியத்தைத் தருவார் என்பதை நாம் திருப்புட் குழி தலத்தில் தெரிந்து கொள்கிறோம். மாவீரரும், பக்தருமான ஜடாயுவைப் 'பெரிய உடையார்' என்று வைஷ்ணவ அன்பர்கள் கௌரவிக்கிறார்கள்.

திருமங்கையாழ் வார் இந்தத் தலத்தைப் ''புலங்கெழு பொருநீர்ப் புட்குழி'' என்று வருணிக் கிறார் புலம் — இந்திரியங்கள் எல்லாவற்றையும், கெழு— தல் பக்கம் சேர்த்துக் கொள்ளும்படியான; பொரு — அலைகள் பொரு கிற; நீர் — நீரையுடைய புட்குழி என்பது வியாக்கி யானம்.

ஜடாயுவுக்காக உண்டு பண்ணிய க்ருத்ர புஷ்கரிணி யில் ஸ்நானம் செய்தால் புலன்களை வெல்லும் சக்தி உண்டாகும்.

✖ மூலவரும் உற்சவரும். - இடதுபுறம் மஹாலக்ஷ்மி சற்றே தலைசாய்த்து நிற்கும் கோலம்



நம்மைத் தரிசிக்க வருகிறவர்கள் திருப்புட்குழி க்ஷேத்திரத்தையும் தரிசித்த பாக்கியம் பெறட்டும் என்பதற்காகவே காஞ்சி முனிவர்கள் மூவரும் வஸந்த நவராத்திரியின் போது திருப்புட்குழியில் தங்க முடிவு செய்தார்களோ!

காஞ்சியிலிருந்து ஆறேழு கி. மீ. தூரத்தில் உள்ள இந்த ஊரையடையும் போது எங்கும் விழாக் கோலமாக இருக்கிறது. அன்றைய ஸுவாஸினி பிக்ஷா வந்தன கைங்கரியத்தை ஏற்றுக் கொண்டு நடத்தி வைப்பது புதுக்கோட்டை வார்ஷிக நிரந்தர ஸுவாஸினி பிக்ஷா வந்தன டிரஸ்ட் என்று அறிகிறோம்.


இந்த டிரஸ்டின் ஜீவ நாடியான திருமதி ராஜம்மாள் அவர்கள் எல்லோரையும் ''வாங்கோ வாங்கோ!'' என்று வரவேற்று உபசரித்துக் கொண்டே பம்பரமாகச் சுழன்று காரியங்களைக் கவனிக்கிறார்.

''பக்த ஸுலபே'' என்று அம்பாளை வர்ணிக்கிறார் தீக்ஷிதர். காஞ்சி பீடாதிபதிகளுக்கும் அது பொருந்தும். அன்னையின் பரிவோடு இன் முகத்துடன் ஒவ்வொருவரையும்தெரிந்து கொண்டு ஆசி கூறி அனுக்ரகம் செய்யும் பாங்கு இருக்கிறதே! நம்மைப் பரவசப் படுத்துகிறது. அன்ற விழிகளும் சாந்தம் தவழும் வதனமுமாகக் காட்சி தருகிறார் புதுப் பெரியவர். இருவரையும் தரிசித்த மன நிறைவுடன் பரமாச்சாரியாளையும் வெகு நேரம் காத்திருந்து தரிசனம் செய்கிறோம். தவக் கனலாய்த் தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார்.

'போய பிழைகளும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும்.... '

என்று கோதை நாச்சியார் பாடியது போல் மனம் வாக்கு காயம் எல்லாமே பரிசுத்தமானது போல் ஓர் உணர்வு. இன்று பூஜை தொடங்க வெகு நேரமாகும் என்று தெரிந்ததும் எதிரில் புஷ்கரிணியும் கோபுரமுமாகப் பொலியும் கோவிலுக்குப் போய் வரலாம் என்று புறப்படுகிறோம்.

சிறிய கோவில். ஆனால் வரலாற்றுப் பெருமைமிக்க கோவில். சுந்தர பாண்டிய தேவன், விஜய கந்த கோபாலதேவன் விக்ரம பாண்டிய தேவன் முதலிய அரசர்களுடைய கல்வெட்டுக்கள் உள்ளன. பிராகாரத்தை வலம் வரும்போது ஒரு சிறுவன் ஸ்ரீ க்ருத்ர புஷ்கரிணி க்ஷேத்ர மகாத்மியம் என்ற புத்தகத்தைக் கொண்டு வந்து கொடுத்து ''ரெண்டு ரூபாய்'' என்றான். சந்தோஷம் தாங்க முடியவில்லை. சிறிய கோவில்களில்



✖ முன்புற கோபுரத்தின் தோற்றம்



✖ மரகதவல்லித் தாயார் உற்சவரும், மூலவரும்

தலபுராணம் கிடைக்காது. மேலும் எந்தக் கோயிலுக்குப் போனாலும் ''இந்தக் கோவில் கட்டி எத்தனை வருஷம் இருக்கும்?'' என்று கேட்டால் அநேகமாய் ''சுமார் இரண்டாயிரம் வருஷம் இருக்கும்'' என்று ஒரே மாதிரி பதில்! இங்கேயோ அழகான படங்களுடன் ஆர்ட் காகிதத்தில் அச்சிடப்பட்டு காஞ்சிபுரம் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமிகளின் மதிப்புரையுடன் ஒரு புத்தகம் கேட்காமலே நம்மைத் தேடிவருகிறது!

திரு + புள் + குழி திருப்புட்குழியாகி திருப்புக்குழி என்று வழங்குகிறது.

ஸ்ரீ விஜயராகவ ஸ்வாமி சந்நிதியில் நிற்கிறோம். அழகான தமிழில் இந்தவூர் மகிமைகளை எடுத்துக் கூறுகிறார் பட்டர். ஸ்ரீதேவி தாயார் இடது புறத்தில் சிரத்தைச் சாய்த்து நிற்கும் அழகையும் பகவான் தம் மடியிலேயே ஜடாயுவுக்கு மோக்ஷம் கொடுத்தகோலத்தையும், உற்சவ மூர்த்திகளையும் தரிசனம் செய்வித்துத் தீர்த்தம் தருகிறார். மனமுருகி நிற்கிறோம்.

பின்னர் மரகதவல்லித் தாயார் சந்நிதியில் தீபாராதனை காட்டும்போது வறுத்த பயிறு முளைக்கும் அற்புதத்தைப் பற்றிக்கூறுகிறார். பிள்ளையில்லாத

பெண்கள் வறுத்த பயறை மடியில் கட்டிக் கொண்டு தேவியின் சந்நிதியில் ஓரிரவு இருப்பார்களாம். மறுநாள் முளைத்திருந்தால் குழந்தை பிறக்குமாம்.

நின்று போயிருந்த பிரும்மோத்ஸவம் மறுபடி நடைபெறுகிறது என்று கூறுகிறார்கள். எட்டாம் திருநாளன்று குதிரை வாகனக் காட்சி. அந்தக் குதிரையைச் செய்து கொடுத்தவருடைய பக்தியை மெச்சும் வகையில் போரேற்றுப் பெருமான் அன்று அவர் வசித்த தெருவில் எழுந்தருளுகிறார். குதிரைக்குப் புல் கொடுக்கும் அரிஜன காலனி குடும்பத்துக்கும் மரியாதைகள் உண்டு.

ஜடாயுவுக்கு ஒரு சந்நிதி இருக்கிறது. கண் குளிரத் தரிசித்தபின் பெரியவாளுடைய பூஜையைப் பார்க்கச் செல்கிறோம். பழங்கள், மலர்மாலைகள், தாம்பூலம் முதலியன நிறைத்த தட்டுக்களைக் கரத்தில் ஏந்திக்கொண்டு சுமங்கலிகள் வந்து சமர்ப்பிக்கிறார்கள். பீடாதிபதிகளின் பூஜை, ஸ்வாமிகளின் பூஜை எல்லாம் முடிந்து தீர்த்தம் வாங்கிக் கொள்கிறோம். மணி மாலை நாலரை ஆகி விட்டது. இத்தனை நேரம் பசி தாகத்தை மறந்து பெரிய உடையார் ஊரில் பெருமான் பெருமாட்டியின் திருக்கோலக் காட்சியும் பெரியவர்கள் மூவருடைய தரிசனமுமாகப் பெரும்பேறு பெற்றோம்.

ஸ்ரீ ராமானுஜ முனிகள் இந்த ஊரில் தங்கி இருந்து ஸ்ரீ யாதவப் பிரகாசர் என்ற பெரியோரிடம் நூல்களைக் கற்றதாகக் கூறுகிறார்கள்.

வாழ வந்த பெருமான்! வந்தவரை எல்லாம் வாழ்விக்கும் பெருமான்! வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி, மாமுனிதன் வேள்விதனைக் காத்த பெருமான்! மரகத வல்லித் தாயாருடனுறை விஜய ராகவப் பெருமான் நீடூழிவாழ்கவே!

ஜய விஜயீ பவ!

அந்தப் புள்ளிகளை அழித்து விடாதீர்கள்

நா. காமராசன்



● ஆத்மாவின் மூலத்திலிருந்து வரும் இசமான வெப்பத்தை உணர்ந்து சில நேரங்களில் நீங்கள் வியப்படையக்கூடும். ஒரு நோக்கம் உருவானால் அதுவே துணிச்சலுக்கான நியாயமும் சமாதானமும் ஆகிவிடுகிறது. ஏற்றுக்கொள்வதையும் மறுப்பதையும் கூட உணர்ச்சி வசப்படாமல் நிறைவேற்ற முடியும். ஒவ்வொரு சமயம் மூட நம்பிக்கைகளின் மூடுபனியில் போர்த்தப்பட்ட இதயத் தீவில் உலகின் கதிரவனையே இழந்து விடுகிறீர்கள். இன்பங்கள் முழுவதும் நொறுங்கி — விலகி ஓடி அலைந்து நிலையான தன்மையற்றுப் புள்ளிகளாய்ச் சிதறுகின்றன.

● எந்தக் கருத்தையும் குழப்பத்தோடு ஏற்கும்போது — இயற்கை கூட உங்களருகே வெறும் சவமாய்க் கிடக்கிறது. உருவமற்ற— முடிவற்ற காலவெளியின் கொடுமையான இரும்பு முகமூடியைப் பிரபஞ்சம் அணிந்து கொள்கிறது. நெருக்கடி நிலையில் தத்துவவாதிகள் கூட அடித்தளத்தையும், சாக்கடைகளையும் தோண்டும் இனக் கூலிகளாக மாறிவிடுகின்றனர். முரண்பாடுகள் இல்லாமல் அழிவற்ற அமைதியைத் தேடி வாழ வேண்டும். ‘நான்’ என்னும் ஆணவத்தின் ஒளி வீசும் பனித் துளியை - இந்த வாழ்க்கை மலரின் ஒரு சின்ன இதழ்மீது வீசி சூரிய வெளிச்சத்தில் கரையச் செய்யும் நிர்ப்பந்தம் அனுபவத்தால் ஏற்பட்டு விடுகிறது. உறக்கம் கனவுகள் மீதும் இருள் படர்த்தும் வேளையில் மறுபடியும் விழிப்பு வருகிறது.

● சில நேரங்களில் நினைவுகள் மின்மினிப் பூச்சிகளைப் போல் விளையாடுகின்றன. பறந்து பறந்து காற்றில் ஊஞ்சலாடும் இந்தப் புள்ளிகளை அழித்து விடாதீர்கள்! வானத்தின் கண்ணாடியாக வாழ்க்கை என்னும் ஆறு. பாதாளக் குழியில் சிக்கிக் கொள்ளாமல் தப்பி ஓடும். உச்சிக்கு நம்மை அழைத்துச் செல்லும கனவுகளை இழந்து விட்டால் அந்த இடத்தை வேறென்ன நிறைவு செய்ய முடியும்?





விசேஷ பரிசுகளுடன்

டெபாசிட் சேகரிப்பு விழா!

(15-3-1984 முதல் 14-7-1984 வரை)

22% வட்டி வழங்கப்படுவதுடன்
V. I. P. BRIEF CASE
அன்பளிப்பும் வழங்கப்படும்.

மற்றும் மேற்படி காலத்தில் டெபாசிட் செய்பவர்கள் ஒவ்வொருவரும் விசேஷ பரிசு போட்டியில் கலந்துகொள்ளும் வாய்ப்பை பெறுவார்கள். சென்னை கிளையில் டெபாசிட்தாரர்கள் முன்னிலையில் நடைபெறும் பரிசு போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு

முதல் பரிசு	இரண்டாவது பரிசு	மூன்றாவது பரிசு	நான்காவது பரிசு
கலர் TV	குளிர் சாதனப் பெட்டி	வாஷிங் மெஷின்	பிளாக் & ஒயிட் TV
(அல்லது ரூ. 10,000/- ரொக்கம்)	(அல்லது ரூ. 5000/- ரொக்கம்)	(அல்லது ரூ. 4000/- ரொக்கம்)	(அல்லது ரூ. 3000/- ரொக்கம்)
			

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களில் பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன


1-வருடம்	2-வருடங்கள்	3-வருடங்கள்	5-வருடங்கள்
17%	18%	19%	22%

பாலாஜி மோட்டார் & ஜெனரல் பைனான்ஸ்

(Hire Purchase Financiers for Motor Vehicles)

சென்னை	: 91, உஸ்மான் ரோடு (சிவா-விஷ்ணு கோயில் அருகில்) தி. நகர், சென்னை-600 017 போன்: 447188, 442218
பெங்களூர்	: 24/1-A, மார்கோஸா ரோடு (10வது கிராஸ்) மல்லேஸ்வரம், பெங்களூர்-560 003 போன்: 366971
திருச்சி	: 22, மதுரை ரோடு (முதல் மாடி) திருச்சிராப்பள்ளி-620 008
பாண்டிச்சேரி	: 11, நேரு தெரு (கனரா வங்கி எதிரில்) பாண்டிச்சேரி-605 001
தஞ்சாவூர்	: எண்: 2 & 3, முதல் மாடி, தி. ஏ. கனல் ரோடு, தஞ்சாவூர்-613 100 போன்: 1626
திருவண்ணாமலை	: 14/A, ஆனைக்கட்டி தெரு, திருவண்ணாமலை-606 601 போன்: 483
பட்டுக்கோட்டை	: 9-A, தலையாரி தெரு, பட்டுக்கோட்டை-614 601 போன்: 453

டெபாசிட்தாரர்களை அறிமுகம் செய்பவர்களுக்கும் அன்பளிப்பு வழங்கப்படும்.



ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றுதான், அதன் ஒப்பற்ற 3-வழிச் செயலால் வியர்க்குருவை தடுக்கிறது, முறியடிக்கிறது.

OBM-2516/TM

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒன்றில் தான், நிரூபணம் பெற்ற மருந்துக் கலவை அடங்கியுள்ளது—அது, மூன்று தீவிரமான வழிகளில் செயல் படுகிறது.

- **தடுத்தல்**
  இதன் பாக்டீரியோஸ்டாடிக் செயல், பாக்டீரியா கிருமிகள் பெருகுவதை தடுக்கிறது.
- **நிவாரணம்**
  சுகந்த மணமுள்ள ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர், வியர்வையை உறிஞ்சுகிறது. இதமளித்து விரைவான நிவாரணம் தருகிறது.
- **செயல்**
  ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர் ஒப்பற்ற கெரடோலிடிக் செயல் உள்ளது: அது, பாதிக்கப்பட்ட சருமத்தை விரைவாக மாசு மருவற்றதாக்குகிறது.






குடும்பம் முழுவதற்குமான பாதுகாப்பு

Johnson & Johnson

ஜான்ஸன்ஸ் ப்ரிக்லி ஹீட் பவுடர்- வேர்க்குருவிலிருந்து உங்களுக்கு சிறந்த பாதுகாப்பு.



கப்பலை உடைத்தாலும் கோடி ரூபாய்!

கப்பல் கட்டுமிடமல்ல கப்பல் உடைக்கும் இடம் ஒன்று குஜராத்தில் உள்ளது. இதற்கு ''அலங்'' என்று பெயர். இந்தொழில் தொடங்க துறைமுக அதிகாரி, கஸ்டம்ஸ் இலாகா, டி. ஜி. ஸி. ஆகியவர்களிடமிருந்து அனுமதி பெற வேண்டும். ஒரு சதுர அடிக்கு ரூ. 4.50; வருடத்துக்கு ரூ. 10,000-. வாடகை ஆகும். ஆரம்ப முதலீடு கிட்டத்தட்ட ஒரு லட்ச ரூபாய் தேவைப்படும். தண்ணீர், மின்சாரம் போன்ற வசதிகளை அரசாங்கம் செய்து கொடுக்கிறது.

மொத்த செலவே லட்ச ரூபாய்தானா?

இல்லை. யானை இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்களே அப்படி பயனற்றுப் போன கப்பலை வாங்கவும் பணம் தரவேண்டும். சுமாராக முக்கால் கோடி! அடேயப்பா என்று மலைக்கத் தேவையில்லை. நடப்பது என்னவென்றால், சினிமா ரிலீஸ் ஆவதற்கு முன்பே விநியோகஸ்தர்கள் படம் வாங்க, தயாரிப்பு செலவுக்கு அது உதவுவது போல் பல வியாபாரிகள், கப்பலிலிருந்து மரம், இரும்பு போன்ற பொருட்களைப் பெற முன் பணம் தந்து விடுகிறார்கள். வங்கிகளும் கடன் உதவி அளிக்கின்றன.

என்ன லாபம்?

65 சதவிகிதம் இரும்புத் தகடுகள்; இரும்பு அல்லாத பிற உலோகங்கள் (துத்தநாகம், அலுமினியம் போன்றவை.) மரச்சாமான்கள்... இப்படி விதவிதமான பொருட்கள் கிடைக்கின்றன; உடனே வாங்க ஆட்களும் தயாராக இருக்கிறார்கள். ' கப்பலிலிருந்து பெறும் எஃகுக் கட்டிகளுக்குத் தனித் தன்மை உண்டு. தரம் சற்று அதிகம். துருப் பிடிக்காதது. அதனால் கிராக்கி அதிகம். தவிர, ஜெனரேட்டர் போன்ற பலவகைப் பொருட்களை உடைக்கப்படும் கப்பலிலிருந்து மீட்கலாம்.

முன்னேற்றம் என்னென்ன?

பிப்ரவரி 83-ல் (ஓராண்டு தான் முடிந்திருக்கிறது.) துவக்கப்பட்ட இந்த வேலை கணிசமான அளவு முன்னேறியுள்ளது. இருக்கின்ற 46 பிளாட்டுகளில் 43 ஒதுக்கப்பட்டாகி விட்டது. 53 கப்பல்கள் உடைக்கப் பட்டிருக்கின்றன.

உதிரித் தகவல்கள்:

- கப்பலின் சராசரி ஆயுள் 20 வருடங்கள்; ஒரு கப்பலை உடைக்க 110 நாட்கள் ஆகின்றன.
- இந்த இடத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களில் பெரும்பாலோர் மே. வங்கம், மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து வந்தவர்கள். குஜராத்திகள் கம்மி. உடல் வலிமை நிறையத் தேவை இப்பணிக்கு.
- சுங்க வரி, விற்பனைவரி போன்றவை மூலம் அரசுக்கும் வருமானம் நிறையவே கிட்டுகிறது.
- இந்த நடவடிக்கையினால் ஸ்டீல் ரோலிங் மில் இங்கு ஆரம்பிக்கச் சாத்தியக் கூறுகள் அதிகம்.

இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்து, இதற்கான யோசனைகள் கொடுத்து குஜராத் அரசாங்கத்தை ஊக்குவித்தவர் ஒரு தமிழர்; காப்டன் என். சுந்தரேசன். தமிழர்கள் காலரைத் தூக்கி விட்டுக் கொள்ளலாம்!



எடுத்த உடனே எண்ணூறு ரூபாய்

மகளிர் பாலிடெக்னிக்கில் உள்ள டிப்ளமா இன் கமர்ஷியல் பிராக்டிஸ்பற்றி எழுதியதைப் படித்துவிட்டு, திருவண்ணாமலையிலிருந்து அன்பரசு என்ற மாணவர், ''நான் ப்ளஸ் டூவில் 'ஆபீஸ் செக்ரட்டரிஷிப்' பிரிவில் படிக்கிறேன். எங்களுக்கு இந்த டிப்ளமா படிப்பு எங்கே உள்ளது?'' என்று சக மாணவர்களின் சார்பில் எழுதியிருக்கிறார்.

கடிதத்தை எடுத்துக் கொண்டு சென்ட்ரல் பாலிடெக்னிக் போனேன். என்னை அருகில் உள்ள 'ஸ்டேட் இன்ஸ்டிடியூட் ஆஃப் காமர்ஸ் எஜுகேஷ'னுக்குப் போகச் சொன்னார்கள். அங்கே கிடைத்த தகவல்கள்:

மாணவர்களுக்கும் டிப்ளமா இன் கமர்ஷியல் பிராக்டிஸ் இங்கே சொல்லித் தரப்படுகிறது. இந்தப் படிப்பைப் பற்றிய மற்ற விஷயங்கள் ஆண்களுக்கும், பெண்களுக்கும் பொதுதான்.

''சரி! இந்தப் படிப்பைத் தமிழகத்தில் வேறு எங்காவது படிக்க முடியுமா?''

''ஓ.எஸ்! சென்னையில் இது தனி இன்ஸ்ட்டிடியூட்டாய்ச் செயல்பட்டு வருகிறது. ஆனால், பழனி, ஊட்டி, பாண்டிச்சேரி, விருதுநகர், பொள்ளாச்சி, ராஜபாளையம் இங்கெல்லாம் உள்ள பாலிடெக்னிக்குகளில் அளிக்கப்படும் கோர்ஸ்களில் இதுவும் அடங்கும்.''

சென்னையிலுள்ள மேற்படி கல்வி நிலையத்தில், அளிக்கப்படும் இன்னொரு படிப்பு சர்ட்டிஃபிகேட் இன் சேல்ஸ்மன்ஷிப். இது ஓராண்டுப் படிப்பு. விற்பனைக் கலை நுணுக்கங்களைச் சொல்லித் தருவது. இதற்கு ப்ளஸ் டூ முடித்திருக்க வேண்டும். இதன் பின் வேலை வாய்ப்பும் நன்றாகவே உள்ளது.

இன்ஸ்டிட்யூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜி

பிரின்ஸிபால் திரு. மோகன் ராவ்.

இங்கே இரண்டு டிப்ளமா கோர்ஸ்கள். ஒன்று லெட்டர் பிரஸ். இன்னொன்று லித்தோகிராபி. இரண்டுமே மூன்று வருடம். எஸ்.எஸ்.எல்.ஸி படித்திருக்க வேண்டும். ஆங்கிலம், சயன்ஸில் மொத்தம் 100–க்கு மேல் மார்க் தேவை. இண்டர்வியூ உண்டு.

இரண்டரை வருடம் வகுப்புகளில் படிப்பு. மீதி ஒரு வருடம் அச்சகங்களில் பயிற்சி. இச்சமயம் 250 ரூபாய் உதவித் தொகை கிடைக்கும். ஒவ்வொரு படிப்புக்கும் 30 சீட்கள்தான்.

இந்தியாவிலேயே மிகப் பழைய பிரிண்டிங் டெக்னாலஜி இன்ஸ்டிடியூட் இதுதான். இதுதவிர சிவகாசியில் ஒன்றும் சென்னையிலேயே சலேசியன் இன்ஸ்டிடியூட் ஒன்றும் உள்ளன.

அன்புள்ள ரகுராமுக்கு,

நீ கேட்டிருந்தபடி, டெக்ஸ்டைல் டெக்னாலஜி பற்றிய விவரங்கள்:

குறைந்த பட்சத் தகுதி: எஸ்.எஸ்.எல்.ஸி. கணக்கிலும், சயன்ஸிலும் மொத்தம் 100 மார்க் வாங்கியிருக்க வேண்டும்.

ஈரோடு, குமாரபாளையம்; கோவை, ராஜபாளையம், சேலம், பொள்ளாச்சி, மதுரை, திருப்பூர் இங்கெல்லாம் இது சொல்லித்தரப்படுகிறது.

மூன்று வருடப் படிப்பு.

ரகு! நீ வருத்தப்படவேண்டிய விஷயம், நாட்டில் இருக்கிற பெரும்பாலான டெக்ஸ்டைல் மில்ஸ் ஸ்டிரைக்கிலேயே இருக்கு. ஆனா நிறைய பேர் டெக்ஸ்டைல் டெக்னாலஜி படிச்சிட்டு வராங்க. வேலை கிடைக்கறது கஷ்டம். ஆனா ஒண்ணு. வேலை கிடைச்சா, எடுத்த எடுப்பிலேயே எண்ணூறு ரூபாய் வரை கிடைக்கும்!

ஆல் தி பெஸ்ட்!

—எஸ். சந்திரமௌலி
போட்டோ: சேகர்



× பிரிண்டிங் டெக்னாலஜி


தீப்புண்ணா?
உடனே தடவுங்கள்
பர்னல்—சுட்ட புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.
Burnol
பர்னல்
தீப்புண்களுக்குச்
சிறந்த சிகிச்சை.

தொழிலாளருக்காகப் போராடிய பெண்மணி



✖ ஸ்ரீமதி அநுசூயாபென் சாராபாய்

கேட்டால் நம்ப முடியாத அளவுக்குச் சில ஸ்தாபனங்களின் பணிகள் அமைவதுண்டு. அவற்றில் ஒன்று: ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம். லால் தர்வாஜா என்னுமிடத்தில், நகரின் பிரதான பஸ் நிலையத்தருகே, மூன்றடுக்கு மாளிகையாகக் கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது டெக்ஸ்டைல் லேபர் அசோஸியேஷன் (TLA). இதை மஜுார் மஹாஜன் என்று இங்கே சொல்லுகிறார்கள். அயல் நாட்டிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வரும் அன்பர்கள், மில் முதலாளிகள், தொழிலாளிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் என்று வருவோரும், போவோருமாக நித்தியத் திருவிழா மண்டபமாகக் காட்சியளிக்கிறது கட்டிடம்.

நாங்கள் போயிருந்த போது ஒன்பது பஞ்சாலைகள் மூடப்பட்ட நிலை. பேச்சு வார்த்தைகளும், ஆலோசனைகளும், தொழிலாளர் கூட்டங்களுமாக அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. ஆனால் தடித்த வார்த்தைகளோ, கூச்சலோ, குழப்பமோ துளியும் காணப்படாதது வியப்பாய் இருந்தது.

மாலை நான்கு மணிக்கு, இதய புகழ் பெற்ற தலைவர் திரு. அரவிந்தபாய் புச் அவர்களைச் சந்தித்தோம். (அவர் அறையிலுள்ள டஜனுக்கு மேற்பட்ட நாற்காலிகளிலும் ஆட்கள் அமர்ந்திருந்தார்கள!) இடைவிடாது தொல்லைகொடுத்த டெலிபோனில் பேசிக் கொண்டே, முக்கியவேலைகளையும் கவனித்துக்கொண்டிருந்தார் அரவிந்தபாய். எழுபத்து மூன்று வயது காந்தியவாதி. பேட்டியிலிருந்து சில முக்கியமான பகுதிகள்:

● 1914-க்கு முன்பே இதற்கு வித்திட்ட நிறுவனர் ஸ்ரீமதி அநுசூயா பென் சாராபாய். லண்டனுக்கு மருத்துவம் படிக்கச் சென்ற இந்தப் பணக்காரப் பெண்மணி, சமூக, கல்வித் துறையில் தேர்ந்து இந்தியா திரும்பியதும், பஞ்சாலைத் தொழிலாளர் படும் பாட்டைப் பார்த்து அவர்களுக்கு அடிப்படைச் சுகாதாரம், கல்வி —இவற்றைப் போதிக்க ஓர் அமைப்பை உருவாக்கினார். இதில் இவருக்குத் துணை நின்றவர் இவரது தோழி ஜசோதாபென். உழைப்பாளிகளின் துன்ப துயரங்களைப் பொறுமையுடன் காது கொடுத்துக் கேட்ட அநுசூயாபென்னுக்கு 'ஏழைகளின் தோழி' என்ற பெயரே நிலைத்தது. இதுவே 'தொழிலாளர் தோழர்'

✖ திரு. அரவிந்தபாய் புச்



என்ற சிறிய அமைப்பை - ஒரு வழக்கறிஞர், ஒரு மில் மானேஜர் ஒரு டாக்டர், ஒரு சமூக சேவகர் ஆகியோரைக் கொண்ட அமைப்பை—உருவாக்கியது.


● 500 தொழிலாளருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்து இவர் அப்போது நடத்திய போராட்டம் காரணமாக 1917 டிசம்பர் நான்காம் தேதி இவருக்கு வெற்றி கிட்டியதோடு, தொழிலாளருக்கு ஊதிய உயர்வும் கிடைத்தது. இன்னும் இங்கே தொழிலாளர் தினம் டிசம்பர் நாலாம் தேதிதான்.

● தொழிலாளர் இயக்கம் உச்ச கட்டத்தில் இருந்த 1918 வாக்கில், காந்திஜியை நாடினார் அநுசூயா பென். தொழிலாளர்களின் நியாயமான ஊதிய உயர்வைப் பெற, சத்தியாக்கிரக வழியில் தொடர்ந்து 22 நாள் ஸ்ட்ரைக் செய்தாராம் காந்திஜி! இதுவே 1920-ல், ஒரு தொழிற்சங்கம் எப்படி இயங்க வேண்டும் என்று காந்திஜி வழி வகுத்துக் கொடுக்கக் காரணமாயிருந்தது. பின்னர் இதுவே ஆமதாபாத் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கமாக உருவாகியது.

● இது ஈட்டிய வெற்றிகள் கணிசமானவை.

இன்று—

● பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம் பன்னிரண்டுபகுதிகள் கொண்ட ஒரு முழுமை



யான தொழிற்சங்கம். பஞ்சாலைத் தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 90% உறுப்பினராகக் கொண்டது (1,35,000 பேர்; வரவு-செலவுக் கணக்கு சுமார் 35 லட்சம் ரூபாய்.) 400 முழு நேர - பகுதிநேர சமூகப் பணியாளர்கள் இந்தத் தொழிற்சங்கத்தில் தொண்டாற்றுகிறார்கள்.

● மாணவர் விடுதி, மாணவியர் விடுதி, பிரசவவிடுதி, மருத்துவமனை, பள்ளிக் கூடங்கள், நூலகங்கள் தவிர, கருக்கெழுத்து—தட்டெழுத்து வகுப்புக்கள், ரேடியோ ரிப்பேர், மின்சார வயரிங் பயிற்சி, கடிகாரம்—ஸ்கூட்டர் ரிப்பேர் பயிற்சி, தையற்கலை என்று பல தொழில் பயிற்சிகளையும் சமூகப் பொறுப்போடு தொழிலாளருக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் நடத்துகிறது.

● தொழிலாளருக்கான கூட்டுறவு பேங்கிகள் வேறு!

● கல்வியறிவு இருந்தால் முதலாளி - தொழிலாளி உறவுகள் மோதலின்றிச் சுமுகமாக இருக்கும் என்று காந்திஜி கருதினார். (கல்வியறிவு என்றால் எட்டறிவு அல்ல. எதையும் அறிந்துணரும் திறனையே அவர் குறிப்பிடுகிறார்.) இந்த அறிவை வழங்குவதில் டெக்ஸ்டைல் லேபர்அசோஸியேஷன் இயன்ற அளவு உழைக்கிறது.

● தொழிலாளரைக் குழுக்களாக உட்கார வைத்து அவர்களுக்குச் சட்டங்கள் அளித்திருக்கும் சில சலுகைகளை அறிய எளிய சொற்பொழிவுகள் நடக்கின்றன.

● முனிஸிபாலிடி, வீட்டுச் சொந்தக்காரர்கள், ரெவினியூ அதிகாரிகள் இவர்களால் ஏதேனும் தொல்லைகள் இருந்தால் அவற்றைச் சமாளிக்க ஆலோசனை வழங்குகிறார்கள்!

● சமீபத்தில் செய்யப்பட்ட வாரத்தில் - ஐந்து நாள் வேலை ஒப்பந்தத்தின்மூலம் பஞ்சாலைத் தொழிலாளருக்கு ஒருநாள் கூடுதல் ஓய்வு கிடைக்கிறது. அந்தக் கூடுதலான ஓய்வுக்கு, அரைநாள் சம்பளமே கிடைத்தாலும், பல ஆயிரம் பஞ்சாலைத் தொழிலாளரை வீட்டுக்கு அனுப்பி வைக்கும் சூழ்நிலையில் இது புத்திசாலித்தனமான ஒப்பந்தம் என்று பாராட்டுகிறார்கள். தேங்கிக் கிடக்கும் சரக்கை விற்றுத்தீர்ப்பதிலும், நிரந்தரமாக்கப்படாத ஊழியர்கள் விஷயத்திலும் இந்த ஒப்பந்தம் உதவுகிறது.

◆◆

25.4.84 அன்று உப்பிலியாபுரத்தில் வேட்பு மனு தாக்கல் செய்த —பெரியார் அண்ணா வழி வந்த— அ. தி. மு. க. மற்றும் தி. மு. க. வேட்பாளர்கள் ராகு காலம் பார்த்து தங்களது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்! அ. தி. மு. க. வேட்பாளர் ராகு காலத்திற்கு முன்னரும் தி. மு. க. வேட்பாளர் ராகுகாலத்திற்குப் பின்னரும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்!

ஆதாரம்: தினமணி.
தகவல்: என்.சண்முகம்.

அவன்: ''உன் கணவர் தோதலில் நிற்கிறார் என்றதும் தினமும் கோவிலுக்கு வருகிறாயே. அவர் ஜெயிக்கணும்னு வேண்டிக்கறியா?...''

இவள்: ''இல்லே.... டெப்பாஸிட்டாவது திரும்பிக் கிடைக்கணும்னுதான் வேண்டிக்கிறேன்...''

-ராஜேஸ்வரி.



● சுதந்திரத்திற்குப் பிறகுதான் குஜராத் மாநிலத்தில் — குஜராத் பல்கலைக் கழகம் (ஆமதாபாத்) மற்றும் எம். எஸ். பல்கலைக் கழகம் (பரோடா), துவக்கப்பட்டது. (1949—ம் ஆண்டு.)

● தமிழ்நாட்டில் பெரும்பாலோர் ஆங்கிலத்தில்தான் கல்லூரிப் படிப்பு படிக்கின்றனர்; ஆனால் இங்கு பெரும்பாலும் குஜராத்தியில் தான். அதற்கேற்பப் பட்டப்படிப்பு புத்தகங்களும் குஜராத் மொழியில் தாராளமாகக் கிடைக்கின்றன. (மருத்துவக் கல்வி போன்ற தொழிற் படிப்பில் — குஜராத் மொழியில் விளக்கிப் பின்னர் ஆங்கிலத்தில் படிப்பார்கள்.)

தகவல்: பு. மாணிக்கவாசகம்.

அஞ்சலி



இசையில் ஒரு கற்பு நிலை!

கலா க்ஷேத்திரத்தில் '44ம் ஆண்டில் ராமநாதன் சிரோன்மணி பரீட்சையில் தேறினார். அதற்கு அடுத்த ஆண்டு முதல் கலாக்ஷேத்திரத்திலேயே ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். அதுமுதல் கடைசி மூச்சு விடும் வரை அவருக்கும் கலாக்ஷேத்திரத்துக்கும் தொடர்பு நீடித்திருந்தது.

ஒரு சமயம் பம்பாயிலிருந்து அவருக்கு இசைக் கல்லூரியில் தலைமைப் பேராசிரியராக இருக்க வேண்டுமென்று அழைப்பு வந்தது. அவருக்குப் 'போகலாமே, சம்பளம் நிறையத் தருகிறேன் என்கிறார்களே' என்று இருந்ததோ என்னமோ? ருக்மிணி தேவியிடம் கூறினார்.

உடனே ருக்மிணி தேவி 'நிதி சாலா சுகமா?'' என்று பாடவே அவர் கலாக்ஷேத்திரத்தை விட்டுப்போகும் எண்ணத்தை அடியோடு துறந்து விட்டார்.

புத்தாவதார நாட்டிய நாடகத்துக்கு இசையமைக்கும்படி ருக்மிணி தேவி அவரைக் கேட்டுக் கொண்டபோது மகிழ்ச்சியோடு ஒப்புக் கொண்டார்.

அவருக்கே வட மொழி தெரியுமானாலும் புத்தாவதார சுலோகங்களின் அர்த்தத்தைச் சரியாக வார்த்தைக்கு வார்த்தை கேட்டுத் தெரிந்து கொள்வார். பிறகு எழுந்து ஒரு சுற்றுச் சுற்றி விட்டு வருவார். வந்த உடனே இசையமைப்புத் தயாராக இருக்கும். ராகமும் தாளமும் பொருத்தமாக அமைந்துவிடும்.

ராமநாதனுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பது ரொம்பக் கஷ்டம். ஏனென்றால் அவ்வளவு சவுக்கமான கால பிரமாணம். தாளமெல்லாம் எண்ணி எண்ணி அடித்துப் போடாமல் பாட்டோடு அது வந்து சேர்ந்து கொள்ளும். தாளத்தை இவர் தேடிச்சென்றதில்லை. மிருதங்கமும் வயலினும் வாசிப்பதற்குச் சமமான மேதை உள்ளவர்களால் தான் முடியும்.

ஒருசமயம் லால்குடி ஜெயராமன் ராமநாதனுக்கு வாசித்துக் கொண்டிருந்தார். ராகம் பாடும்போது மந்த்ர ஸ்தாயியில் சஞ்சாரம் செய்து மந்திர ஸ்தாயி ஷட்ஜத்தை எட்டினார் ராமநாதன். லால்குடியும் தொடர்ந்தார். ராமநாதன் சளைக்கவில்லை. அதற்கும் கீழே அதி மந்திர ஸ்தாயி நிஷாதத்தைத் தொட்டுவிட்டு கருதியோடு நின்றார். லால்குடி உடனே வயலின் புருடையைத் தளர்த்து நிஷாதத்தை எட்டிவிட்டுப் பிறகு புருடையை முறுக்கி மேலே வாசித்ததும் சபையோர் ஒரே ஆரவாரம் செய்து மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.


பாடுவதில் மேதையாகத் திகழ்ந்த ராமநாதன் மற்ற விஷயங்களில் பச்சைக் குழந்தை மாதிரி இருப்பார். ஒரு சமயம் தம் மாணவன் ஆசைப்பட்டான் என்பதற்காக அவனை ஈஸி-சேரில் ஒரு பக்கம் உட்கார வைத்துத் தாம் இன்னொரு பக்கம் உட்கார்ந்து ஆடிக் கொண்டே பாடம் நடத்தினார். அங்கே வந்த வேறு ஒரு ஆசிரியர் ''இப்படிச் செய்யலாமா?'' என்று கேட்டதற்கு ''ஏதோ ஆசைப்பட்டான். அதிலே என்ன தப்பு?'' என்றார்.

பரம சுத்தமான மனிதர். சங்கீத விஷயத்திலும் ஸ்ரீ ராமநாதன் ஒரு கற்பு நெறியில் நின்றார். டைகரிடம் கற்றுக்கொண்டாலும் அப்படியே பாடவில்லை. இசையை நுணுக்கமாகப் புரிந்து கொண்டு தம் சொந்தக் கற்பனையினால் சோபிக்கச் செய்வார். மற்ற வித்வான்கள் பாடுவதைக்கேட்க மாட்டார். ஒரு சமயம் ''ஏன் யார் கச்சேரிக்கும் நீங்கள் வருவதில்லை?'' என்று கேட்டதற்கு மற்ற சங்கீதமெல்லாம் சுமாரா இருந்தா கேக்கப் பிடிக்க மாட்டேங்கறது. ரொம்ப நன்னா இருக்கதுன்னு வைச்சுப் போம். அப்போ டேஞ்சர். நம்ம சங்கீதம் வழி மாறிட சான்ஸ் உண்டு. இதனால் நான் ரொம்பக் கேக்கறதில்லே'' என்று சொன்னார்.

எம். டி. ஆரின் இசையைப் பற்றி எண்ணும்போது கம்பர் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. நாரத முனிவரைப் பற்றிய பாடல். தொன்மையான சாத்திரங்களில் கூறப்படும் விதிகளிலிருந்து வழுவாமல் தாளங்கள் ஓடி வந்து, சொன்னபடி யெல்லாம் கேட்க, வீணையின் ஒலியைப் போன்ற இனிமையோடு பாடும் கலைவாணியின் புதல்வனை நாரதர் என்று பாடுகிறார் கம்பர்.

சேணுயர் நெறிமுறை
திறம்ப வின்றியே
பாணிகள் பணிசெய்யப்
பழுதில் பண்ணுடை
வீணையின் நரம்பிடை
எழுந்ததே மறை
வாணியின் நாரதன்
செவியில் வார்க்கவே

கம்பனையும் அறிந்து எம். டி. ஆருடைய இசையிலும் மனம் பறிகொடுத்தவர்கள் மேற்கண்ட பாடலை நாரதருக்காக மட்டுமின்றி எம். டி. ஆருக்காகவும் எழுதினாரோ கம்பர் என்று நினைத்துக் கொள்வார்கள்! -ஆனந்தி



ஆராய்ச்சிப்பணி

ஆலைகளில் வேலைத்திறன் உயர

பஞ்சாலைத் தொழில் சம்பந்தப்பட்ட மிகப்பெரிய ஆராய்ச்சி நிலையம், ஆமதாபாத்தில் உள்ள அட்டிரா ATIRA என சுருக்கமாகச் சொல்லப்படும் ஆமதாபாத் டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரீஸ் ரிசர்ச் அசோஸியேஷன்.

பஞ்சாலை மற்றும் செயற்கை நூலிழைவகைகள் உபயோகிக்கும் ஆலைகள் இந்த நிறுவனத்தில் அங்கம் வகிக்கின்றன. 1949–ல் தொடங்கிய போது, ஆமதாபாத்திலுள்ள எழுபத்து நான்கு மில்கள் அங்கம் வகித்தன. இப்போது: இந்தியா முழுவதிலுமிருந்து 220 மில்கள்.

இதன் இயக்குநர் டாக்டர் டி. ராதாகிருஷ்ணன்.

- மில்கள் மட்டும்தான் இதில் இடம் பெறலாமா?
இல்லை. பஞ்சாலை யந்திரங்கள், சாயங்கள், ரசாயனங்கள், செயற்கை நூலிழை தயாரிப்போரும் இருக்கலாம்.

- எத்தனை பேர் இங்கே பணிபுரிகிறார்கள்?
330 பேருக்கு மேல்; இதில் நூறு பேர் விஞ்ஞானிகள், பொறியாளர்கள்.

- உங்கள் முக்கிய பணிகள் என்னென்ன?
பஞ்சாலைத் தொழிலின் உற்பத்தி சம்பந்தப்பட்ட பணிகளில் ஆலோசனைகள் வழங்குவது. இத்தொழிலுக்குத் தேவைப்படும் பொருட்களை எப்படிச் சிறந்த வகையில் உபயோகிக்கலாம் என்று யோசனை கூறுவது. இந்தியப் பஞ்சாலைத் தொழிலின் இன்றைய–நாளைய தேவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்வது. அத்தேவைகளைமுன் கூட்டியே பூர்த்திசெய்து கொள்ள யோசனைகள் வழங்கி உதவுவது.

- இவை தவிர?
தர மேம்பாடு, உற்பத்திச் செலவுகள் குறைப்பு.

வேலைத்திறன் மேம்பாடு, இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு மாற்றுக் கண்டுபிடிப்பது போன்றவை.

- உற்பத்திச் செலவைக் குறைக்க ஆலோசனைகளுக்காகப் பரிசுகள் பல பெற்றிருக்கிறது அட்டிரா. மில்களில் மின் சக்திச் சிக்கனத்துக்கும் உதவிப் பரிசுகள் பெற்றிருக்கிறது. நம்நாட்டிலும், வெளி நாடுகளிலும் பல கருத்தரங்குகளில் கிட்டத்தட்ட ஆயிரம் கட்டுரைகளை இதன் விஞ்ஞானிகள் வழங்கியிருக்கிறார்கள். புதிய கண்டுபிடிப்புகளிலும் முன் நிற்கிறது அட்டிரா. இதற்காகப் பதினெட்டு தேசியப் பரிசுகள் பெற்றிருக்கிறது.

(தகவல் உதவி: துணை இயக்குனர் டாக்டர் பி. நீலகண்டன்)

இந்தியாவில் குஜராத் மக்களுக்குத்தான் புற்று நோய் அதிகம் பிடிப்பதில்லை.
அவர்கள் மற்ற மாநில மக்களைக் காட்டிலும் அதிகமாகப் பால் அருந்துவது தான் காரணம்!
—எஸ். வெங்கட்ராமன்.



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani Editor: K. Rajendran

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka



அதிக சுவையானது
அதிக முழுமையானது



நீங்கள் பாசத்துடன் ஊட்டும் ஒவ்வொரு கவளமும் உங்கள் பாப்பாவின் வளர்ச்சிக்குச் சிறந்ததாகும்.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. இதைக் கலப்பது எளிது. பாப்பாவுக்கு ஊட்டுவதும் எளிது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. பாப்பாவின் வளர்ச்சிக்கு இன்றியமையாத புரதம் நிரம்பியது. மிக ஆரோக்கியமான இரத்தத்திற்குக் கூடுதல் இரும்புச்சத்து கொண்டது. உறுதியான பற்களையும் எலும்புகளையும் பெற சரியான விகிதத்தில் கால்ஷியமும் ஃபாஸ்ஃபரஸும் அடங்கியது. பாப்பாவின் மென்மையான ஜீரணசக்திக்கென முன்கூட்டிப் பக்குவம் செய்தது.

பால் அடங்கிய ஃபாரெக்ஸ் திட உணவு. ஒவ்வொரு கவளத்திலும் அதிக முழுமையான திட உணவு.

CLARION/B/GX/3/203 TAM